கல்கி

KALKI 13.12.92 ரூ. 3.00



சிவாஜியின் நடிப்பு— பாலுமகேந்திரா பார்வையில்...

அமுதசுரபியின்

முக்கனித்திட்டத்தில் சேர்பவர்களுக்கு

புத்தாண்டு போனஸ் - வண்ணக் காலண்டர் 1993*

டெபாசிட்டர்களை அறிமுகப்படுத்துபவர்களுக்குக் காலண்டர் அன்பளிப்பு உண்டு.



ரூ.3000 டெபாசிட் அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீராம் டிரஸ்ட்

தபால் பை எண்; 5043.

145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001.

போன்: 5228545

SHRIRAM GROUP COMPANIES MADRAS

கலையும், நிதியும்
கலந்து அளிப்பது ஸ்ரீராம்

* காலண்டர் விற்பனைக்கு அல்ல

கோடிப்பாக்கம் கோவிந்தாச்சார்யா



"தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சி வளர்வதற்கான நல்ல சூழ்நிலை உருவாகி வருகிறது'' என்கிறார் அதன் பொதுச் செயலாளரான கோவிந்தாச்சார்யா. தமிழ் நாட்டில் அக் கட்சியை வளர்ப்பதற்காக ஸ்பெஷலாக மேலிடத்தால் அனுப்பப்பட்டிருப்பவர்.

இவரது பெயரைக் கேட்டவுடன், 'ஏதோ வடக்கத்திக்காரர் போல இருக்கிறது' என்று பலரும் நினைப்பார்கள். படித்து, வளர்ந்தது எல்லாம் முழுக்க முழுக்க, வடக்கே என்றாலும் வேர் என்னவோ, நம் திண்டிவனம் பக்கம்தான்.

''திண்டிவனத்தில் இருந்து பாண்டிச்சேரிக்குப் போகும் வழியில் உள்ள கோடிப்பாக்கம் என்ற கிராமம் தான் எனது ஊர். அப்பா நீலமேகச்சார்யா சமஸ்கிருத பண்டிதர். 1945ல், பிழைப்பிற்காக அப்பா காசிக்குச் சென்றார். அப்போது எனக்கு இரண்டு வயது'' என்று நினைவு கூர்கிறார் கோவிந்தாச்சார்யா.

அண்ணன், அக்கா, தங்கை என்று ஏழு பேர் கொண்ட இவரது குடும்பத்தைக் காப்பாற்ற மிகவும் கஷ்டப்பட்டாராம் இவர் அப்பா.

''வறுமை, ஏழமை என்றால் என்னவென்று எனக்கு நன்றாகவே தெரியும்'' என்கிறார் பனாரஸ் பல்கலைக் கழகத்தில் எம்.எஸ்.ஸி. பட்டம் பெற்றுள்ள கோவிந்தாச்சார்யா.

''எம்.எஸ்ஸி படிக்கும் போதுதான் ஆர். எஸ். எஸ்ஸில் என்னை இணைத்துக் கொண்டேன்'' என்று கூறும் கோவிந்தாச்சார்யா பின்னால் பி.ஜே.பி. தலைவர்கள் கண்ணில் பட்டு தற்போது தமிழகப் பொதுச் செயலாளராக வந்துள்ளதில் வியப்பில்லை. பீஹாருக்குச் சென்று அங்கு கடுமையான பஞ்சம் வந்த போது துயர் துடைப்புப் பணியில் இருந்தது, '74 முதல் ஜெ.பி.யின் முழுப் புரட்சி இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டு செயலாற்றியது ஆகியன, இவரைத் தலைவர்கள் இனம் கண்டு கொள்ள உதவியிருக்கின்றன.

''1981லிருந்து 86 வரை தெற்கேதான் வேலை செய்தேன்'' என்று சொல்லும் கோவிந்தாச்சார்யா தமிழ் படிக்கக் கற்றுக் கொண்டது கல்கி, ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகள் மூலம்தானாம்.

''தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் பெருகி வருகின்றன. இந்தச் சூழலில் ஜெயலலிதாவின் சமீபத்திய போக்கைப் பார்த்தால் பா.ஜ.க வுடன் நெருங்கி வருவது போல் தெரிகிறது?'' என்று கேட்டால்,

''பயங்கரவாதத்தைத் தைரியமாக எதிர்த்து, பிரிவினை என்ற பேச்சுக்கே இடம் தராத வகையில் செயல்பட்டு வரும் தமிழக முதல்வரின் போக்கு எங்களுக்கு முக்கியமானதாகப்படுகிறது. ஆனால் நாங்கள் அ.தி.மு.க.வின் ஊழல்களுக்குத் துணை போக மாட்டோம்...'' என்கிறார்.

''உங்களையும் உமா பாரதியையும் இணைத்து வந்த கிசுகிசுக்கள், உங்கள் அரசியல் வளர்ச்சியைப் பாதித்ததா?''

''நான் பொது வாழ்வில் நுழைந்த போதே பதவி, பணம் போன்ற எதற்கும் ஆசைப்படுவதில்லை'' என்று சங்கல்பித்துக் கொண்டு விட்டேன். நீங்கள் சொல்லும் விஷயத்தில் நான் அப்பழுக்கற்றவன் என்று கட்சியில் உள்ள தலைவர்களுக்குத் தெரியும். நான் உண்மையை அணைத்துக் கொண்டு நிற்கிறேன். நமது நாட்டுச் சமுதாய அமைப்பு காரணமாக, இதுபோன்ற கிசுகிசுக்களில் அடிபடும் ஆண், எந்தவித காயமும் இல்லாமல் தப்பி விடுகிறான். ஆனால் சம்பந்தப்பட்ட பெண்ணை நினைத்துப் பாருங்கள்! அவள் மனநிலை எவ்வளவு பாதிக்கப்படும் என்பதைப் புரிந்து கொண்டால் இதுபோன்ற செய்திகள் வராது'' என்கிறார் கோவிந்தாச்சார்யா.

சந்திப்பு : ப்ரியன்



போக் ரோடு. சிவாஜியின் பிரம்மாண்டமான வீடு. முதலில், கல்கிக்காக, செவ்வாய்க் கிழமை காலையில் நேரம் கொடுத்திருந்த சிவாஜி கணேசன், பின்னர் அதை புதன் கிழமைக்கு மாற்றி விட்டார். புதன் கிழமை காலை அவர் வீட்டுக்குள் நுழைந்தபோது, நம்மை அன்புடன் வரவேற்ற சிவாஜி, ''என் தம்பி தவறிவிட்ட நாள் செவ்வாய்க்கிழமை. எனவே செவ்வாயன்று நான் விரதம். பட்டினியாகக் கிடக்கிற தினத்தில் பேட்டி அளித்தால், ஃப்ரீயாய்ப் பேச வசதியாய் இருக்காது. அதனால்தான் உங்களை இன்னிக்கு வரச் சொல்லிட்டேன்'' என்று விளக்கமளித்தார்.. வெள்ளை வேட்டி. கதர் சட்டை. நெற்றியில் பளிச்சென்று விபூதிப் பட்டை. தலையில் லேசாய் நரை. நாம் சினிமாவில் பார்த்துப் பழகிவிட்ட அதே.... கம்பீரம். லேசாய்க் கனைத்தபடி, சிவாஜி பேச ஆரம்பித்தார்.

தேவர் மகன் கதையை உங்களிடம் கூறிய போது உங்கள் ரியாக்ஷன் என்ன?

கதையை என்கிட்டே சொன்னபோது, ரொம்ப நல்ல கதை என்று உடனேயே கமலிடம் சொன்னேன். நல்ல சப்ஜெக்ட் துணிச்சலான முயற்சி. நகர்ப்புறத்துல வாழறதால, ரொம்ப நாகரிகம்னு நெனைச்சுக்கிட்டிருக்கிறவங்களைவிட (இதில உங்களையும் சேர்த்திருக்கேன்; என்னையும் விட்டுடல) தென்னகத்துல இருக்கிற விவசாய மக்களும், சிறுகுடி மக்களும் - அவர்கள் தேவர் இனத்தவராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி - இந்தப் படத்தோட தம்மை வெகு இயல்பாக identify பண்ணிக்கிடுறாங்க.

''கதையைச் சொன்னவுடன் நீங்கள் நடிப்பதற்குச் சம்மதம் தெரிவித்தீர்களா?''

நான் எங்கே ஒ த் து க் கி ட் டே ன்! வேணாம்னுல்ல சொன்னேன்!

''நான்



அதற்கு என்ன காரணம்?

அவங்கள்ளாம் இளைஞர்கள். I am an old man - retired man. எனக்கு அவங்க மாதிரியெல்லாம் ஆக்ட் பண்ணத் தெரியாது. அவங்க டெக்னிக் வேற. அவங்க School of acting கிற்கும், என் School of acting கிற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. 'என்னைப் போடாத. உனக்கு நான் ஒத்து வர மாட்டேன். வேற யாரையாவது அந்த ரோலுக்குப் போடு'ன்னு தான் நான் சொன்னேன். 'இல்லை! நீங்கதான் அந்த ரோலுக்கு ரொம்பவும் பொருத்தமானவர்'னு சொல்லி ரொம்ப கட்டாயப்படுத்தினான் கமல். நம்ம வீட்லயும் புள்ளைங்கள்ளாம் சொல்லிச்சங்க. நானும் சரின்னுட்டேன்.



எங்கே நடித்தேன்?"

–'பெரியத் தேவர்' சிவாஜி பேசுகிறார்

முதல் மரியாதைக்குப் பிறகு மீண்டும் உங்கள் அற்புதமான, இயல்பான நடிப்பைப் பார்க்க முடிந்தது....

நான் எங்க ஆக்ட் பண்ணினேன்? சும்மா வந்துட்டுப் போனேன். அவ்வளவுதான். நடிச்ச மாதிரியான எண்ணமே எனக்கு வரலை. ஒரு பந்து நான் நம்ம சம்பந்தி வீட்டுக்குப் போய் இருந்துவிட்டு வந்த ஃபீலிங் தான். புள்ளைங்கள்ளாம்தான் சொல்லறாங்க. 'அண்ணே! பிரமாதமா நடிச்சிருக்கீங்க'ன்னு. 'அட மடயனுகளா! நான் ஆக்டே பண்ணலைடா!' (சில விநாடிகள் அமைதி) இப்பத்தான் ஒண்ணு புரியுது எனக்கு! ஆக்ட் பண்ணாம இருந்தாலே நல்லா இருக்கும் போல இருக்கு (சிரிக்கிறார்....)

பெரியத் தேவர் கதாபாத்திரத்தில் நீங்கள் நடித்ததற்கு... ஸாரி... உங்கள் கருத்துப்படி வந்துவிட்டுப் போனதற்கு - இன்ஸ்பிரேஷனாக யாராவது தேவர் இனத்தைச் சேர்ந்த பிரமுகரோ, தெரிந்த பெரியவரோ இருந்தார்களா?

அப்பரா நடிக்கணும்னா, பெரிய வாளைப் போய்ப் பார்க்கணும். பாரிஸ்டர் ரஜினிகாந்த்தா நடிக்கணும்னா, டீ.வி.எஸ். கிச்சாவைப் போய்ப் பார்க்கணும். நான் தேவர்! என் அப்பா தேவர்! என் மகனும் ஒரு தேவர்! அப்படி இருக்கும் போது பெரியத் தேவர் ரோலுக்கு நான் ஏன் இன்னொருத்தரைப் போய்ப் பார்க்கணும்? இதோ கட்டியிருக்கேனே இதே வேட்டி, வெள்ளைச் சட்டை. படத்துக்காகப் பெரிசா நிஜ மீசை வளர்த்துக்கிட்டேன். தட்ஸ் ஆல்!

இளம் வயதிலேயே பல முதிய வேடங்களை ஏற்றுத் திறமையைக்காட்டியவர் நீங்கள். இப்போது, வயதான பிறகு ஒரு முதிய கேரக்டரில் வந்தீர்கள். இப்போதைக்கும், அப்போதைக்கும் என்ன வேறுபாட்டை உணருகிறீர்கள்?

என்னால் செய்ய முடியும்கிற நம்பிக்கையில அப்ப, வயசான ரோல்களைக் கொடுத்தாங்க. நானும் கஷ்டப்பட்டு நடிச்சேன். இப்ப கஷ்டப்பட வேண்டாம்; ஆக்ட் பண்ணவே வேண்டாம். உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? பலவிதமான ரோல்

களில் நடிக்கிறது எனக்குப் புதுசேயில்லை. எட்டு வயசுல நாடகத்துல நடிக்க ஆரம்பிச்சேன். அதுதான் எனக்குக் குருகுலம். எனக்கு நீளமா முடி இருக்கும். அவிழ்த்து விட்டால் கால் வரை புரளும் - அத்தனையும் ஒரிஜினல் முடி. சவுரி இல்லை.... சீதையா நடிச்சிருக்கேன், பரதனா நடிச்சிருக்கேன்.... சூர்ப்பனகையா கூட நடிச்சிருக்கேன். அவ்வளவு ஏன்? ஆள் வரலைன்னு, தசரதனாக் கூட நடிச்சிருக்கேன். அதுதான் நமக்கு உரம். இன்னிக்கு நடிக்கவே அவசியமில்லை. சொக்கலிங்க பாகவதர் கிட்ட போய் 'கிழவன் மாதிரி நடிங்க'ன்னா சொல்லுறாங்க? இன்னிக்கு நடிக்க வரும் பெண்கள் சிலபேர்கிட்ட, 'பொம்பளை மாதிரி நடிம்மா'ன்னு சொல்ல வேண்டிய நிலைமை இருக்குங்கிறது வேற விஷயம் (சிரிப்பு).

பல சீனியர் டைரக்டர்களுடன் இணைந்து பணி புரிந்திருக்கிறீர்கள். இளைய தலைமுறை இயக்குனர் பரதனுடன் பணியாற்றிய போது ஏதாவது வித்தியாசமாக உணர்ந்தீர்களா?

நான் நடிக்கக் காமிச்சதும் கொஞ்சம் குறைச்சுக்கங்க இந்த இடத்துல... இங்க கொஞ்சம் கூட எக்ஸ்பிரஷன் குடுங்க...ன்னு முகபாவங்களைக் கூட்டவோ, குறைக்கவோ சொல்வாரு. அவர் வேலையை அவர் கச்சிதமா செஞ்சு, நல்ல ரிசல்ட் கொடுத்திருக்காரு.

தேவர் மகன் படத்தில் நடித்திருக்கும் மற்றவர்களைப் பற்றி....

சின்ன சின்ன கேரக்டர்களுக்குக் கூட முக்கியத்துவம் குடுத்து எடுத்திருக்கான் கமல். கை வெட்டுபட்டு, ஒரு பையன் வருவானே அவன் கூட என்னை அசத்திப்புட்டான். எனக்கு அண்ணனா, ஊனமுற்ற ரோலில் வர காக்கா ராதாகிருஷ்ணன் அருமையான செலக்‌ஷன். நல்லா மீசை, கிசையெல்லாம் வைச்சுக்கிட்டு, அசல் எங்க வூட்டுப் பையங்க மாதிரியே யாரு அந்த தம்பி....? (நம்மிடம் கேட்கிறார்).

நாசரைத்தானே சொல்றீங்க?

ஆமாம். ஆமாம்! நம்மளைவிட அசல் தேவர் வூட்டுப் பையன் போல இருக்கான்... அப்புறம்... இஞ்சி இடுப்பழகா..... (சிவாஜியே பாடிக் காட்டுகிறார்) பாட்டை எனக்கு டேப்புல போட்டுக் காட்டினாங்க. நான் ஒரு கிராமத்துப் பெண்ணைக் கற்பனை செஞ்சி, அந்தப் பொண்ணு 'இஞ்சி இடுப்பழகா...' (மறுபடி பாடுகிறார்)ன்னு பாடுறாப்போல நினைக்கப் பார்த்தேன். நாமளும், பொம்பளை வேஷம் போட்டிருக்

தேவர் மகன் சிவாஜி!



தனது சுய பர்சனாலிட்டியை, அல்லது தான் விரும்பியோ விரும்பாமலோ உருவாக்கிவிட்ட ஸ்க்ரீன் பர்சனாலிட்டியை முழுவதுமாகக் களைந்துவிட்டு, தான் ஏற்று நடிக்கும் கதாபாத்திரமாக - அந்தக் கதாபாத்திரத்தின் பர்சனாலிட்டியாக - நம்பத்தக்க வகையில் மாறிக் காண்பிக்கும் அந்தக் கூடு விட்டுக் கூடு பாயும் மாயா ஜாலத்தைச் சில நடிகர்களால்தான், அதுவும் சில சமயங்களில்தான் செய்து காண்பிக்க முடிகிறது.

மற்றபடி, ஒரு நடிகர் எந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்தாலும், அந்த நடிகரைத்தான், அவர் தனக்கென ஏற்படுத்திய ஸ்க்ரீன் பர்சனாலிட்டியைத்தான் நம்மால் பார்க்க முடிகிறதே தவிர, அவர் ஏற்றிருக்கும் கதாபாத்திரத்தையோ, அந்தக் கதா பாத்திரத்தின் பிரத்தியேகத் தன்மைகளையோ நம்மால் பார்க்க முடிவதில்லை. 'ஸ்டார்' என்று ஆகிப்போன எல்லா நடிகர்களுக்கும் இது பொருந்தும். நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல.

மிகப் பெரும்பாலான சமயங்களில் சிவாஜி பாணியிலேயே வந்து போகும் சிவாஜி அவர்களைத்தான் பார்க்க முடிகிறதே தவிர, சிவாஜி பாணியைத் துறந்த கதாபாத்திரமாக அவரை நாம் பார்க்க முடிவதில்லை.

இதற்கு அவர் பொறுப்பல்ல. ஏனெனில், ஒரு நடிகன் எப்பேர்ப்பட்ட திறமைசாலியாக இருப்பினும், தான் ஏற்று நடிக்கும் கதாபாத்திரமாக மாறிக் காட்டுவதற்கு, அந்தக்

கோபில்லை! என் கற்பனை கிராமத்துப் பொண்ணைவிட, படத்துல வர்ற பொண்ணு (ரேவதி) நல்லா நடிச்சது. அது நடிச்சிட்டு வந்ததும்; ''சபாஷ்! இப்படித் தான் நடிக்கணும்'னு தட்டிக் கொடுத்தேன்!''

கமலைப் பற்றி... ஒண்ணும் சொல் லாம....

சொல்லாம இருக்க முடியுமா? கமலைப் பத்திச் சொல்லறது, நம்ம பையன் பிரபுவைப்பத்திச் சொல்லறது மாதிரி. அவன் தம்மாத்தூண்டு (அபிநயம் பிடிக் கிறார்) பையனா இருந்தப்பலேர்ந்து எனக்குத் தெரியும். நீங்க உட்கார்ந்திருக் கிங்களே, இதே இடத்துலதான் அவன் அப்பா சீனிவாசன் உட்கார்ந்து பேசிக்கிட் டிருப்பாரு. நான் இப்ப உட்கார்ந்திருக்கிற இதே இடத்துல உட்கார்ந்து அவரோட பேசு வேன். கமல் பய, என் மடியிலேயே தான் உட்கார்ந்திருப்பான். நான் பிரபுவைத் தூக்கி னதைவிட, கமலைத் தூக்கினதுதான் ஜாஸ்தி. நான் கிழவன். என்னைவுடு! அவன் இளைஞன். Good looking fellow. வெரி கிரேட் ஆக்டர். பெரியத் தேவர் செத்தபின், அப்பா மாதிரியே அவரோட நாற்காலில வந்து உட்கார்ற தோரணை - நான் ரொம்ப ரசிச் சேன். அவன் நல்ல டெக்னிஷியன், டான் ஸர், சிங்கர், ரைட்டர்... அப்புறம்... What not?

அவனுக்கு இந்தப் படத்தை எடுக்கிற போது நிறைய கஷ்டங்கள். நிறைய பணம் செலவழிக்க எடுத்திருக்கான். செலவு பண் ணறது பெரிசில்லை. அதுக்கேத்த ரிசல்ட் கிடைக்கணும். கிடைச்சிருக்கு இதுல. ஒரு இளைஞன், தன்னந்தனியா நின்னு இத் தனை பெரிய முயற்சி பண்ணியிருக்கான். அவனைத் தாராளமா பாராட்டலாம். அந்தப் பாராட்டு, இன்னும் பல முயற்சி களை வெற்றிகரமா சாதிக்க அவனுக்கு உதவி பண்ணும். இத்தனை பெரிய விஷ யத்தைப் படம் எடுக்கிறபோது, ஏதாவது ஒரு சீன்ல குறுக்கால நடந்து போகணும்'னு என்கிட்டே கேட்டிருந்தா கூட, கமலுக்காக, தயங்காம அதைச் செய்திருப்பேன்...... 'போற்றிப் பாடடி பெண்ணே'ன்னு, கமலைப் போற்றணும் போல இருக்கு!

பேட்டி : எஸ். சந்திரமௌலி
அட்டை வண்ணப்படம் :
பிரவீண் குமார்
படங்கள் : **யோகா**

கதாபாத்திரத்தை உருவாக்கிய கதாசிரியரையும், அதை நெறிப்படுத்தும் இயக்குனரையும் நம்பவேண்டி இருக்கிறது.

உள இயல் ரீதியாகவும், யதார்த்தமாகவும் அழுத்தமாக ஒரு கதாபாத்திரம் படைக்கப் படவில்லையென்றால், அந்த அரை வேக்காட்டுக் கதாபாத்திரத்தை, எந்த நடிகனாலும் நம்பக்கூடிய மாதிரி நடித்துக் காண்பிக்க முடியாது.

அதே போல, படு யதார்த்தமாகவும், முழுமையாகவும் படைக்கப்பட்ட ஒரு கதா பாத்திரத்தைக்கூட, அதை நெறிப்படுத்தி இயக்க ஒரு சரியான டைரக்டர் இல்லையென்றால், அதை ஏற்று நடிக்கும் நடிகன் குறைபட்டுப் போகிறான்.

ஆக, திறமையாகப் படைக்கப்பட்ட ஒரு கதாபாத்திரமும், அதைத் திறம்பட இயக்க ஒரு நல்ல டைரக்டரும், அந்தப் பாத்திரத்தின் உள்-புறம் இரண்டையும் புரிந்து கொண்டு, அதை இயல்பாக வெளிப்படுத்திக் காட்டக் கூடிய ஒரு சிறந்த நடிகனும் சேரும் பொழுது, அங்கு உயிர்த்துடிப்புள்ள ஒரு பர்ஃபார்மன்ஸ் பிறக்கிறது. மேற்குறிப்பிட்ட விஷயங்கள் அனைத்தும் கைகூடி வந்த சமயங்களிலெல்லாம், சிவாஜி அவர்கள் தனது சிவாஜி பாணியை முற்றாகக் களைந்துவிட்டு அந்தந்தப் பாத்திரமாக மாறிக் காண்பித்துத்தான் இருக்கி றார்கள்.

தேவர் மகனிலும் இப்படியொரு அபூர்வ சேர்க்கை நிகழ்ந்திருக்கிறது.

கதாசிரியர் கமல் அவர்களால் வெகு இயல்பாகவும், முழுமையாகவும் படைக்கப்பட்ட அந்தத் தகப்பனார் கதாபாத்திரம், பரதன் என்ற கைதேர்ந்த இயக்குனர் துணையோடு, சிவாஜி என்ற அந்தப் புடம் போட்ட கலைஞனால் இமாலய நுனிகளைத் தொட்டிருக் கிறது.

சிவாஜி அவர்களின் சிகரங்களைப் பற்றியல்ல - இந்திய சினிமாவின் நடிப்பு உச்சங்களைப் பற்றிப் பேசும் பொழுது, தேவர் மகன் சிவாஜியின் நடிப்பும் நிச்சயம் பேசப்படும். இது அவருக்கும், கமலுக்கும், பரதனுக்கும் மட்டுமல்ல தமிழுக்கும் பெருமை.

மகேந்திரா



'நீங்க நல்லா இருக்கணும்'

முழுக்க முழுக்க பிரசாரப் படமாக இருக்கப் போகிறது என்கிற எதிர்பார்ப்போடு போனால்... இனிமையான ஆச்சரியம்!

வலுவான கதை. 'விசுத்தன'த்திற்கு அதிகம் இடமளிக்காத விறுவிறுப்பான திரைக் கதை.. எதிர்பாராத முடிவு. ஓரிரு காட்சிகளில் தமிழக முதல்வர். தொட்டுக் கொள்ள ஊறுகாயாக இன்னொரு விசுவின் (எம்.எஸ்.வி.) இசை.

படம் முழுதும் பானுப்ரியாவின் தோள்களில். மாமன் மாணிக்கத்தை (நிழல்கள் ரவி) மணக்கச் சம்மதிப்பதிலிருந்து, அவனுடைய குடிப்பழக்கம் எந்த முயற்சியாலும் திருத்த முடியாத நாய்வால் என முடிவுக்காட்சியில் மன்றாடுவது வரையில் உருக வைக்கும் உணர்ச்சிப் போராட்டம்.

அதன் பின் -

அந்தக் கிராமமே கள்ளச் சாராயத்திற்கெதிராகக் கொதித்து எழுகிறது. (கொஞ்சமாக ஆந்திராவை நினைவூட்டவில்லை?)

முதல்வருக்கு எதிரே நின்று, பயத்தில் தொண்டை அடைத்துப் போய், கிசுகிசுப்பாகப் பேசும்போதும் சரி, ஏர் இந்தியா விமானத்தில் இரண்டு இருக்கைகளை இனாமாகப் பெறுவதற்கு அந்த நிறுவன அதிகாரி வெ.ஆ. மூர்த்தியைக் குடைந்து குடைந்து கேள்வி கேட்டு மன்றாடும் போதும் சரி, காதர் பாச்சா விசு எழுப்புவது எக்கச்சக்க சிரிப்பலை. எம்.ஜி.ஆர். அவருக்குப் பரிசளித்திருந்த மோதிரத்தை விற்றுவிட்டதற்கு அவர் அளிக்கும் விளக்கம் மிக மிக நயம்.

நிழல்கள் ரவிக்கு இவ்வளவுதான் என நிர்ணயிக்கப் பட்டு விட்ட பாத்திரப்படைப்பு. அளவோடு இடம் பெற்று நிறைவோடு கு(ந)டிக்கிறார்.

சுறுசுறுப்பான அமெரிக்க மருத்துவமனைக் காட்சிகள். அதில் தயாரிப்பாளர் ஜி.வி... ஸ்ரீரங்கத்து நரசிம்மன் அமெரிக்க மூக்கு உச்சரிப்பில் 'டாக்டர் நாரி' என அழைக்கப்பட்டு, மிடுக்காக நடந்து, படபடவெனப் பொரிந்து தள்ளி, கொஞ்சமே வந்து போனாலும் சரியான கடுகு தாளிப்பு.

சினிமாத்தனமான காட்சிகள் இடையிடையே இடம் பெற்றாலும் அவை சேர்ப்பது சுவை. எனினும், பானுப்ரியாவின் நெருக்கடியைத் தெரிந்து கொண்டு, மிகப் பெரிய தொகையொன்றைத் தருவதாகச் சொல்லித் தவறான நோக்கத்தோடு அவரை நெருங்கும் அந்தப் பணக்காரச் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி நம்ப முடியாத கற்பனை என்பதோடு அவசியமில்லாததும் கூட.

'சிறு நீரகம் தேவை' என்கிற பத்திரிகை விளம்பரம் பானுப்ரியாவின் கண்களில் பட வேறு இயல்பான சம்பவமா கிடைக்காமல் போயிற்று?

– சி. ஆர். கே.

"டேய்! உனக்கு, வேலை பார்க்கிற பொண்ணு வேணுமா? வேலை பார்க்காத பொண்ணு - வேணுமா?"

"நானும் பார்க்கிறேன், இந்தக் கேள்வியைத்தான் நீங்களும் நாலு வருஷமா கேட்டுக் கிட்டிருக்கீங்க!"

- ஆர். வசந்தகுமார்



சில குழந்தைகள் மற்றவர்களை விடத் துறுதுறுவென இருப்பது ஏன்?

துறுதுறுவென இருப்பதற்குத் தேவையான சக்தியைப் பெறுவதற்கு, உங்கள் குழந்தைக்குச் 'சரியான' கலோரிகள் தேவை. புரோட்டீன்களும், கார்போஹைட்ரேட்ஸும், கொழுப்புச் சத்தும் சரியான சமச்சீர் விகிதத்தில் கலந்திருந்தால் தான் இந்தக் கலோரிகள் கிடைக்கும்.

இந்தச் 'சரியான' கலோரிகள் கிடைக்க வேண்டுமானால் அதற்குச் சிறந்த வழி ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைக் கொடுக்க வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனபிறகு பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவை உங்கள் குழந்தைக்குத் தர வேண்டும்.

பெரும்பாலான தாய்மார்களுக்கு இது முடிவதில்லை. வழக்கமான உணவு வகைகள் சரிப்பட்டு வருவதில்லை.

பிறகு என்னதான் வழி?

ஸெரிலாக். ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த, உங்கள் குழந்தைக்கு மிகவும் பழக்கமான பாலின் எல்லா நற்பயன்களும் அடங்கிய திட உணவு. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த பால் புரோட்டீன்கள் இதில் உள்ளன. மேலும், கொழுப்புச் சத்துக்கள், கார்போஹைட்ரேட்ஸ், இரும்புச்சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்கள் சரியான அளவில் கலந்த உணவு ஸெரிலாக். வைட்டமின்கள் A, D, E, B- காம்ப்ளெக்ஸ், மற்றும் C இதற்குப் பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, ஸெரிலாக் இப்போது நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-லேன் என்ஸைமேட்டிக் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகின்றன. ஸெரிலாக் மிக எளிதில் ஜீரணமாகிவிடுகிறது, மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் ஸெரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு கலோரிகள் உள்ளன. ஏனென்றால், இதில் பாலின் நற்பயன்கள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை துறுதுறுவென இருப்பதற்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு ஸெரிலாக்.





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்.

தமிழ்நாடு அரசுக்காக

GV பிலிம்ஸ் லிட்..

வழங்கும்



சென்னை
காசினோ A/c
பாலஅபிராமி
கிருஷ்ணவேனி
பிராட்வே
3 காட்சிகள்
மற்றும் தமிழகமெங்கும்



நீங்க நல்லா இருக்கணும்

வரி விலக்கு
TAX FREE

விசு

M.S.விஸ்வநாதன்

G.வெங்கடேஸ்வரன்



Elegant

பெங்களூர் ரிப்போர்ட் :

“மொய்லியவரு... மொய்லியவரு...”

“ஓ! மொய்லியவரு! மொய்லியவரு!” உணர்ச்சிவசப்பட்டு கத்திக் கொண்டு வெளியே ஓடி வந்து பத்திரிகையாளரிடமும் இதர ஆதரவாளர்களிடமும் செய்தியை வெளியிடுகிறார் மொய்லியின் ஆதரவாளரான ராமநாதராய். அன்று காலைப் பத்திரிகைகள் மட்டுமல்லாது பெங்களூரின் பரபரப்பான மாலைத் தினசரிகள் கூட “எஸ். எம். கிருஷ்ணா, இன்று மாலை பதவி ஏற்கிறார்” - என்பதாகத்தான் தலைப்பு வெளியிட்டிருந்தன. கவர் கிழிக்கப்பட்டு நரசிம்மராவின் ஒரு வரி வாசகத்தை நாவல் கிஷோர் சர்மா படிக்க, நிரம்பி வழிந்த ஹாலில் உட்கார இடம் கிடைக்காமல் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த மொய்லிக்கே ஆச்சரியம். மாலைகள், கைகுலுக்கல்கள் தழுவல்கள் என்று கர்நாடகத்தின் புதிய கதாநாயகனான வீரப்ப மொய்லியின் பயணம் துவங்குகிறது.

“உங்களுடைய முதல் நடவடிக்கை எது?” என்று ஒரு நிருபர் கேட்ட போது, “இருங்கள்... முதலில் செயலில் இறங்குவோம். அதிகமாகப் பேசிப் பேசியே நம்முடைய கௌரவம் வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது. ஆகவே உடனடியாகச் செயல்படுவோம்...” ஓர் எழுத்தாளர்தான் இப்படி பதிலளிக்க முடியும். அரசியல்வாதி அல்ல.

வீரப்ப மொய்லியின் எழுத்துக்களுக்கும் பேச்சுக்களுக்கும் செயல்களுக்கும் கூட முதல் ரசிகை அவரது மனைவி மாலதி மொய்லி. மாமன் மகள்தான் என்ற போதிலும் சண்டை-சச்சரவு, போராட்டம் என்று மிகவும் சிரமப்பட்டுத்தான் திருமணம் நடந்தது.

“என்னுடைய தந்தை தம்மையா மொய்லி கோவில்களில் நாதஸ்வரம் வாசிப்பார். மிகக் குறைந்த வருமானம். அம்மா பூவம்மாவின் தொழில் பால் விற்பதும் மாட்டுச் சாணத்தில் வறட்டி தட்டி விற்பதும்... சாப்பாட்டிற்கே நிறையக் கஷ்டப்பட்டிருக்கிறோம். ஒருமுறை நான் சிறுவனாயிருந்த போது வீட்டில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் நிலச் சுவான்தாரின் ஆட்கள் வந்து வீட்டிலிருந்த தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் தூக்கி வெளியில் வீசி விட்டு எங்கள் ஓட்டைக் குடிசையைப் பிய்த்துப் போட்டு விட்டுப் போய் விட்டனர். சாப்பிட்டுக் கொண்டிருந்த கவளம் கூட பிடுங்கி



● மொய்லி - மாலதி

எறியப்பட்டது. சில நிமிடங்களிலேயே நடுத் தெருவில் நிற்கும்படி ஆகி விட்டது. அந்த நேரத்தில் தோன்றிய எண்ணம்தான் அநீதியை எதிர்த்து நிற்க வேண்டும் என்பது. பின்னாளில் வக்கீலுக்குப் படிக்கத் தூண்டுதலாக அமைந்ததும் இந்த நிகழ்ச்சியே.”

“எனது கணவரின் விருப்பமே ஹைகோர்ட் நீதிபதியாக வர வேண்டும் என்பதுதான். இடையில் அரசியலில் நுழைந்து விட்டதால் முதலமைச்சராக வேண்டி வந்து விட்டது” - என்கிறார் மாலதி மொய்லி சிரித்துக் கொண்டே. “எங்கள் திருமணத்தைக் காதல் திருமணம் என்றுதான் சொல்ல வேண்டும். முதல்

பார்வையிலேயே காதல். ஆனால் அவ்வப்போது தமது பெற்றோருடன் இவர் எங்கள் வீட்டிற்கு வருவாரே தவிர என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டார். ஒருமுறை கொஞ்சம் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம். என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். பிரித்துப் பார்த்தால் ஒரு கவிதை எழுதியிருந்தது. காதல் கவிதை! அதன் பிறகு அவர் சட்டம் படிப்பதற்காக பெங்களூர் சென்று விட்டார். பெங்களூரிலிருந்து என்னையும் என் தந்தையையும் உடனே புறப்பட்டு வரச் சொல்லி இன்னொரு கடிதம் வந்தது. உடனடி யாகச் சென்றோம். அன்று மாலையே என்னைத் திருமணப் பதிவு அலுவலகம் கூட்டிச் சென்று பதிவுத் திருமணம் செய்து கொண்டார். ஒரு வாரம் கழித்து கோவிலுக்குச் சென்று சாஸ்திரப் படியும் கல்யாணம் செய்து கொண் டோம்.''

''என்னுடைய திருமணத்திற்கு நான் செலவிட்ட தொகை வெறும் ஐம்பது ரூபாய் மட்டுமே'' என்கிறார் முதல்வர்.

''எப்படி அரசியலுக்கு வந்தீர்கள்?''


''1969 வரை எனக்கு அரசியலைப் பற்றிய சிந்தனையே கிடையாது. அப்போது இந்திராகாந்தி விடுத்த அழைப்பு என்னைக் கவர்ந்தது. ஏழைகளுக்கு உதவ ஒவ்வொரு ஊரிலும் விவசாயச் சங்கங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று நினைத்து எங்கள் ஊரில் ஆரம்பித்தேன். மாவட்ட அளவில் தோன்றிய சங்கங்கள் மாநில அளவுக்குப் பரவி, அரசியலில் நுழைய வழிவகுத்து விட்டது.''

''அரசியல் உங்களுக்குப் பிடித்திருக் கிறதா?''

''பிடித்திருக்கிறதா இல்லையா, என்பது வேறு விஷயம். ஆனால் இங்கே நேர்மைக்கு மதிப்பு கிடையாது என்பதுதான் வருத்தத்திற்குரிய விஷயம்.''

இவரது தலைமையில் இனி கர்நாடகத்தைப் பொருத்தமட்டி லாவது நிலைமை மாறலாமே? கர்நாடக மக்கள் இவரிடம் நிறையவே எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

– அமுதவன்



பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை-600 003. ☎ : 582676

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5	19%	20%

தனயோகம் டிபாசிட் திட்டம் - வட்டி வீதம் 20%

குறைந்த அளவு டிபாசிட் ரூ.20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வரை வட்டி

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்
5-ம் ஆண்டு முடிவில் ரூ.6000/-ஐத் திரும்பப் பெறுவீர்
10-ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
15-ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ.50,000/- பெறுவீர்

பென்ஷனர் நலத்திட்டம்

முதியோருக்கென்றே அளிக்கப்படும் திட்டம்
சேமிப்பு ரூ.12500/- வட்டி வீதம் - 19.5%கால வரம்பு 12 மாதங்கள் மட்டுமே
முன்னதாகவே பெறும் காசோலைகள், விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும்
மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் சேர்ந்து பயன் பெறலாம்.

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

பிரதி மாத டிபாசிட்	ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை						
	12	24	36	48	60	72	84
ரூ.25	330	715	1,180	1,800	2,510	3,350	4,370
ரூ.100	1,320	2,860	4,720	7,200	10,050	13,400	17,500

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ.7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,20,000/- பெறலாம்
ரூ.9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,44,000/- பெறலாம்

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள், நகைக்கடன் சவரனுக்கு ரூ.2400/- வட்டி விகிதம் ரூ.1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D கட்ட வேண்டியதில்லை...

(Friday Weekly Holiday.)


கௌரவ ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை-3

இயக்குநர் குழுத் தலைவர்
R. விவேகானந்தன், B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும்: Business Hours: Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.

—— சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி ——

SURESH



சந்திரசேகர
அரசின் கடிதங்கள் 'வீச்'!
நேரே அடி! தொலைச்சா இந்த நாடு...!
அது பூமராங்குன்னு தெரியாம வீசிட்டாங்க, பாவம்!
அட ராமா... நம்ம கதி 'சிந்துபாத்தும் கடல் கிழவனும்' கதை ஆயிடிச்சே...!
அத்வானி
இன்னும் கொஞ்சம் ரோஸ் பவுடர் பூசப் பண்ணிக்கோங்க! 40 வயது மாதிரியே இருக்கும்... தலைமுடி இடை வெளியே தெரியாது...
முரளி மனோகர் ஜோஷி
அத்வானி
நரசிம்மராவ்
சோப்பா வைக்க மறந்துட்டீங்க!
ஜெயலலிதா



கல்கி

1992
டிசம்பர் 13
மலர் : 51
இதழ் : 20
ஆங்கீரச
கார்த்திகை 28



தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்

பெண்ணாய்ப் பிறந்ததும் தலைமுறை இடைவெளியும்!

"நான் பெண்ணாகப் பிறந்ததே எனக்கு மிகப் பெரிய இடையூறு"; "மத்திய அரசு என்னைச் சரியாக நடத்தவில்லை"; "எனக்கும் பிரதமருக்கும் இடையில் தலைமுறை இடைவெளி" என்றெல்லாம் புலம்பிக் கொண்டிருந்த முதல்வருக்குப் பிரதமரின் தமிழக விஜயமும் வெளிப்படையான பேச்சும் ஆறுதல் அளித்திருக்க வேண்டும். அளிக்கவில்லை என்றால் அது பிரதமரின் குற்றமல்ல. இதைவிடத் தெளிவாகப் பிரதமரால் பேசியிருக்க முடியாது.

சுப்பிரமணிய சுவாமியின் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்திய அரசின் அல்லது காங்கிரஸின் ஆதரவு இல்லை என்பதைத் தெளிவாக்கியுள்ளார். சு. சுவாமி-சந்திரலேகாவின் பேச்சுக்களுக்குப் பிரதமரால் தடை விதிக்க முடியாது என்பது வேறு விஷயம். அதே போல் 'அ.தி.மு.க.-காங்கிரஸ் உறவு நீடிக்கும்; ஆட்சியைக் கவிழ்க்கும் உத்தேசமில்லை' என்று உறுதியளித்திருக்கிறார். இப்படி கூறியதால் அ.தி.மு.க அரசு செய்யும் தவறுகளையெல்லாம் தமிழக இ.காங்கிரஸ் கண்டு கொள்ளாமல் மௌனம் சாதிக்கும் என்று ஜெ. எதிர்பார்த்தால் ஏமாற்றமே அடைவார். "நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற் சென்று இடித்தற் பொருட்டு" என்ற குறள் வாக்கியம், 'ஜெ' க்குத் தெரியுமோ தெரியாதோ, நரசிம்ம ராவுக்கு நன்றாகவே தெரியும். "தலைமுறை இடைவெளி இருக்கத்தான் செய்கிறது; வெளிப்படையாகத் தெரியும் இந்த விஷயத்தில் நான் மேற்கொண்டு கூற என்ன இருக்கிறது?" என்று ராவ் சகஜமாகக் கேட்டது, அவரது பெருந்தன்மைக்கு எடுத்துக் காட்டு.

"பெண்ணாகப் பிறந்தது என் பாக்கியம்" என்று கருதி, முதல்வர் நடந்து கொண்டு, பெண் குலத்துக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர, குறைப் பட்டுக் கொள்ளக் கூடாது. முதல்வரின் கருத்தால் தமிழகத்தின் பெண் குலமே சிறுமைப் பட்டுப் போயிற்று. பெண்ணுரிமை பற்றி எவ்வளவோ பேசப்பட்டு, சட்டங்களும் இயற்றப்பட்டு வரும் இந்நாளில், முதல்வரின் சொல்லும் செயலும் பெண்குலத்துக்குத் தன்னம்பிக்கையை மேலும் வளர்ப்பதாக அமையட்டும். எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும், ஜன நாயகத்தில். "எதிர்ப்பிலே காணும் வெற்றியிலேதான் இன்பம் இருக்கிறது" என்பதைப் புரிந்து கொண்டால் முதல்வர் எதிர்ப்புக்கு அஞ்சவும் மாட்டார்; தாழ்வு மனப்பான்மை தோன்றப் பேசவும் மாட்டார்.

முதல்வருக்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்புப் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது தவறுதான். அது பற்றிய கேள்வி எழுந்தால், "ஆமாம், ஆனால் மத்திய அரசுதான் தவறை உணர்ந்து விட்டதே; தவறு திருத்தப்பட்டு விட்டதே" என்று கூற வேண்டுமே தவிர, முடிந்து போன பிரச்னையை மறுபடி பெரிதுபடுத்திப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

"சந்திரலேகாவை நீங்கள் ஏன் போய்ப் பார்க்கவில்லை" என்றால், "எனக்கு வேலைகள் மிகுதி; என் பிரதிநிதியாக ஒரு முக்கியஸ்தரை மலர்ச் செண்டுடன் அனுப்பினேன்" என்று கூறி முடித்துக் கொள்வதுதான் ஒரு முதல்வருக்கு அழகே தவிர, "நான் உடல் நலம் குன்றி படுத்திருந்த போது சந்திரலேகா என்னைக் காண வந்தாரா? அன்றைய முதல்வர் கருணாநிதிக்குப் பயந்து கொண்டுதானே வராமலிருந்தார்?" என்றெல்லாம் கேட்பது சிறுபிள்ளைத் தனமாகப் பூசலை வளர்ப்பதாக உள்ளது. காரணம் தெரிந்தே இருக்கும்போது கேள்வி தொடுப்பானேன்?

இவையெல்லாம் அற்ப விஷயங்கள் என்று ஒதுக்க ஒரு முதல்வருக்குத் தெரிந்து இருக்க வேண்டும். பேச்சில் பெருந்தன்மையும் கம்பீரமும் வேண்டும். பெரிய விஷயங்களைச் சிந்திக்கவே நேரம் ஒதுக்க வேண்டும். வெள்ளச் சேதத்தைப் பார்வையிட வந்த நரசிம்மராவ், திரும்பத் திரும்பத் தோன்றும் இந்தப் பிரச்னையை நிரந்தரமாகச் சமாளிக்க ஒரு மத்திய அமைப்பை உருவாக்குவது, வருமுன் காப்பதற்கு முக்கியத்துவம் தருவது போன்ற விஷயங்களைச் சிந்தித்துப் பேசியிருப்பது ஒரு பாடமாக அமையக் கூடும் - பாடம் கற்க விரும்பினால்.


ஜோர்ப் பறக்கும் பெருமை புறா

!! தங்கள் உடல் எடையின் பாதி அளவு உணவாவது தினந் தோறும் உட்கொண்டால்தான் பறவைகள் உயிர் வாழ முடியும். பறவைக் குஞ்சுகளுக்கு இன்னும் கூடுதலாக உணவு தேவை.

!! உலகின் மிகப் பெரிய முட்டையை இடும் பறவை ஆஸ்ட்ரிச். (நெருப்புக் கோழி) பிறந்த ஒரு மாத காலத்துக்குள் நெருப்புக் கோழிக் குஞ்சு, தன் பெற்றோரைப் போலவே மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் ஓடும்.

!! அளவில் சிறியதாகவும் எடை குறைவாகவும் இருந்தாலும் பறவை இறகு மிகவும் வலிமை வாய்ந்தது.

!! மனிதனின் கண் பார்வையைவிட ஆந்தையினுடையது எண் பத்திரண்டு மடங்கு கூர்மையானது.



!! சிட்டுக் குருவிகள் தத்தித் தத்தி நகருமேயொழிய நடக்க மாட்டா; ஒரு சிட்டுக் குருவியின் இதயம் நிமிடத்துக்கு ஆயிரம் முறை துடிக்கிறது.


!! வாத்துகள் அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்.

!! ஹம்மிங் பர்ட் என்ற தேன் சிட்டு வகைப் பறவை, தேனை உறிஞ்சுவதற்காகப் பூக்களின் அருகே வந்து இறகுகளைப் படபடத்துக் கொண்டே அந்தரத்தில் நிலையாக நிற்கும். அப்போது அது ஏராளமான எரிசக்தியைச் செலவிடுகிறது. அதே வேகத்தில் ஒரு மனிதன் தன் எரிசக்தியைச் செலவிட்டால் அவன் நாளொன்றுக்கு 285 பவுண்ட் உணவு உட்கொள்ள வேண்டியிருக்கும். அந்தச் சமயத்தில் உடல் சூடேறி கொதிநிலையை அடையாமல் இருக்க, அவன் மணிக்கு நூறு பவுண்ட் வியர்வையை வெளியேற்ற வேண்டியிருக்கும்.

!! குளிர்காலத்தில் இந்தியக் கடற்கரைக்கு வருகை தரும் பறவை கோல்டன் ப்ளோவர். இது கடல் கடந்து ஹவாய்த் தீவுகளுக்கு ஒரே மூச்சில் (மூவாயிரம் கி.மீ.) பறக்கிறது.

!! வலசை போகும் (migrating) பறவைகள் தாங்கள் வழக்கமாகக் கூடு கட்டும் இடங்களுக்கே திரும்ப வந்து சேர்கின்றன. ஆயிரக்கணக்கான மைல்களை இரவு பகலாகக் கடந்தாலும் அவை வழியிழந்து தவிப்பதில்லை. நட்சத்திரங்களின் நிலையைக் கொண்டு வழி கண்டுபிடிக்கின்றன என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

!! மரங்கொத்திப் பறவைகள் மரப் பட்டைகளைக் கொத்துவது இரை தேடவும் பொந்து உருவாக்கவும் மட்டும் அல்ல. அவ்வாறு கொத்துவதன் மூலம் எழுப்பும்



ஒலியினால் அவை பிற பறவைகளுக்குச் செய்திகளை உணர்த்துகின்றன. துணையை அழைக்கவும்; 'இது என் பிரதேசம்' என்று உணர்த்தவும்; பிற இனப் பறவைகளை எச்சரிக்கவும் வெவ்வேறுவிதமான தாளகதியில் அவை மரங்களைக் கொத்தி ஓசை எழுப்புகின்றன.

!! முதல் உலக யுத்தத்தின் போது போர்க் களத்துக்குச் செய்திகள் எடுத்துச் சென்ற ஒரு புறாவுக்கு வீர விருது வழங்கப்பட்டது. விருதைப் பெற அந்தப் புறா உயிரோடு இல்லை - ஒரு அபாயகரமான பயணத்துக்குப் பின் உயிரை விட்டிருந்தது.

!! இரண்டாம் உலகப் போரின் போதும் ஹிட்லரின் ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் விடுதலைப் புரட்சியாளர்கள் தேச நாடுகளுக்குச் செய்திகளையனுப்ப புறாக்களைப் பயன்படுத்தினார்கள்.

தொகுப்பு : **உதய்லால்**



* அமைச்சர் சிந்தியா, தமக்கு அளிக்கப்பட்ட பரிசுடன் ஜே.ஆர்.டி. டாட்டா

ஏர்-இந்தியா: எதிர்காலம் வைரமாக ஒளிரட்டும்!

* சென்டார்

தொழிலதிபர் ஜே.ஆர்.டி. டாட்டாவின் கரத்திலே உள்ள ஏரோப்ளேன் பொம்மையைக் கவனியுங்கள். அது போன்ற ஒரு சின்னஞ்சிறு விமானத்திலேதான் ஏர்-இந்தியா நிறுவனத்தின் சரித்திரம் தொடங்கியது. இன்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்பு. ஒரு நபர் மட்டுமே அமர்ந்து செலுத்தக் கூடிய அந்த விமானத்தைக் கராச்சியிலிருந்து அகமதாபாத் வழியாக பம்பாய்க்குப் 'பைலட்' செய்து வந்தவர் ஜே.ஆர்.டி. டாட்டாவேதான். விமானத்தில் இருந்தது, ஒரு சிறிய 'விமானத் தபால்' பை.

நாளடைவில் விமானத் தபாலுக்கும் மவுசு அதிகரிக்க, விமானப் பயணத்துக்கும் தேவை கூடுதலாக, ஏர்-இந்தியா, டகோடா விமானங்களையும் பிறகு, சூப்பர் கான்ஸ்டலேஷன் எனப்பட்ட நாலு இஞ்சின் விமானங்களையும் பெற்றது. இந்திய நகரங்களுக்கு இடையே மட்டுமின்றி, அயல் நாடுகளுக்கும் அதன் விமானங்கள் பறந்தன. ஏர்-இந்தியா மகாராஜா, கம்பீரத்துடன் கூடிய பணிவான உபசரிப்புக்குச் சின்னமாக விளங்கி, பயணிகளை மட்டுமின்றி விமானப் பயணம் செய்யுமளவுக்கு வசதியற்றவர்களைக் கூட விளம்பரங்கள் மூலம் கவர்ந்து மகிழ்வித்து வந்தார். நவீனமான நகைச்சுவைக்கு எடுத்துக்காட்டாக உலவினார்.

ஏர்-இந்தியா அரசுடைமை ஆகிற்று. படிப்படியாக அதன் செயல்பாட்டில் அரசுடைமையான நிறுவனங்களுக்கே உரிய மெத்தனமும் அலட்சியப் போக்கும் புகுந்து கொண்டன. போட்டா போட்டி அதிகமாக உள்ள சர்வதேச விமான சர்வீஸில் ஏர்-இந்தியா நன்மதிப்பிழந்து தடுமாற, இந்தியப் பயணிகளே வேறு அயல்நாட்டு விமான நிறுவனங்களை விரும்பிப் போகிற பரிதாப நிலை ஏற்பட்டது. எல்லாக் கஷ்ட நஷ்டங்களுக்கும் காரணம் இந்த ஏர்-இந்தியா மகாராஜா சின்னமும், சென்டார் (பாதி மனிதன் - பாதி குதிரை) சின்னமும் தான் என்பது போல் நிர்வாகம் அவற்றை ஒழித்துக் கட்டியது!

இந்த மாபெரும் சாதனைக்குப் பிறகும் நிலைமை முன்னேறவில்லை! பிறகுதான் இதில் ஏதோ கோளாறு இருக்கிறது; சரிபண்ண வேண்டும் என்று சமீபத்தில் புரிந்து கொண்டிருக்கிறார்கள்! ஏர்-இந்தியாவின் வைர விழாவில் பேசிய மாதவராவ் சிந்தியா, 'இந்த நிறுவனம் அரசுத் துறையைச் சேர்ந்த ஒரு கார்ப்பரேஷன் என்ற நிலையிலிருந்து மாறி, ஒரு கம்பெனி போல் நடத்தப் படும்' என்று கூறியிருக்கிறார். விரிவாக்கத் துக்கு அரசை நம்பாமல், மக்களை நம்பி, பங்குகள் விநியோகிக்க வேண்டும் என்றும் லாபத்தை நம்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சிந்தியாவின் எண்ணங்கள் நிறைவேற வேண்டுமானால், இதே வைர விழாவில் ஜே.ஆர்.டி டாட்டா கொடுத்த அறிவுரைகள் ஏற்கப்பட வேண்டும். 'உலகின் சிறந்த விமானக் கம்பெனியாக ஏர்-இந்தியா ஒரு காலத்தில் இருந்தது. அந்த நிலை திரும்பவும் தோன்ற, ஏர்-இந்தியா ஊழியர்கள் ஒருவர் பாக்கியிராமல் தங்களை அப்பணிக்கு அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்' என்றார். 'தலைமைப் பொறுப்பில் உள்ளவர் அடிக்கடி மாற்றப்படும் போது ஊழியர்களுக்கு விசுவாசம் ஏற்படுவது கஷ்டம்' என்பதை எடுத்துக் காட்டினார்.

ஏர்-இந்தியா தனது தவறுக்கு வருந்தி, மகாராஜா சின்னத்தையும் சென்டார் சின்னத்தையும் இப்போது திரும்பவும் ஏற்றுக் கொண்டுள்ளது. அதே போல டாட்டாவின் அறிவுரைகளையும் ஏற்றால், இழந்த புகழைத் திரும்பப் பெறுவது நிச்சயம். வைர விழா இதற்கு அடிக்கல் நாட்டியிருப்பதாக நம்புவோம்.

— லக்ஷ்மி கண்ணன்

தெரிந்து கொள்ளுங்கள்

உங்கள் குழந்தையின் மேனிபற்றி

மலர் என்பார் இறகு என்பார் மழலைச் செல்வத்தை. அதன் மேனி மலரிலும் மென்மை. இறகிலும் மிருது. ஆகவேதான் அதற்குத் தேவை உங்கள் சிறப்பான கவனிப்பு.

மென்மையான ஆடைகள். இதமான ஸ்பரிசம். அத்துடன் சிறப்பான சோப்பு - ஜான்ஸன்ஸ் பேபி சோப்.

ஆரம்பத்தில் சில வாரங்களுக்கு குழந்தையின் சருமத்தில் சில மாற்றங்கள் ஏற்படும். அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். அது இயல்பான மாற்றம் ஆகும். சிறிது சிறிதாக மறைந்துவிடும்.

சருமத்தில் பூனை முடி: ஆரம்பத்தில் குழந்தையின் உடல் முழுதும் பூனை முடி போன்ற உரோமம் இருக்கும். அது இரண்டு வாரங்களுக்குள் தானாக உதிர்ந்துவிடும்.

சினைப்பு மற்றும் கரப்பான்கள்: இவை குழந்தையின் உடல் அமைப்பு (ஸிஸ்டம்) முழுதும் செயல்படத் துவங்காததால், அவை சிலநாட்களில் பொதுவாக மறைந்துவிடும்.

பிறப்புப் புள்ளிகள்: பிறக்கும்போது குழந்தையின் மேனியில் நீல சிவப்பு அல்லது பழுப்பு நிறத்தில் சில புள்ளிக்குறிகள் ஏற்படுகின்றன. சில மாதங்களில் அவை மறைந்துவிடுகின்றன. குழந்தை வளரும்போது சில புள்ளிகள் காணப்படலாம்.

தலையின் கவர்: இளஞ்சிவப்பு நிறத்தில் குழந்தையின் தலை உச்சியில் காணப்படும் பத்தை போன்ற கரப்பான் ஆகும். அது சில சமயங்களில், குழந்தையின் முகம் உடல் அல்லது அரைப் பகுதியிலும் பரவும். அது மறைந்துவிடும். அதற்கு பேபி ஆயில் போட்டு இதமாக்கவும்.

இளஞ்சிவப்பு சினைப்பு: முகம் அல்லது சதை மடிப்பு போன்ற வியர்வை தங்கும் பகுதியில் இளஞ்சிவப்பு சினைப்புகள் ஏற்படும். இது அதிக உஷ்ணத்தால் ஏற்படுகிறது. குழந்தையை வெதுவெதுப்பான நீரில் குளிப்பாட்டவும். மென்மையான சோப்பு உபயோகிக்கவும். பின்பு மெல்லிய பருத்தி ஆடைகளை அணிவிக்கவும்.

ஜான்ஸன்ஸ் பேபி சோப்: **குழந்தையின் மேனிக்கான சிறப்பான படைப்பு.** தூய்மையான பொருட்களால் மட்டுமே தயாரிக்கப்பட்டது ஜான்ஸன்ஸ் பேபி சோப்— இதில் மென்மையான குழந்தை மணம் கலந்துள்ளது. ஜான்ஸன்ஸ் பேபி சோப்— ஜான்ஸன்ஸ் பேபி ஆயில் மற்றும் லனோலின் சேர்ந்துள்ளது. இவை குழந்தையின் சருமத்தில் ஈரப்பதம் உண்டாக்கி, மென்மையோடு வைத்துக் கொள்கிறது. இதில் சருமத்தில் அலர்ஜி மற்றும் புள்ளிகளை உண்டாக்கும் கடுமையான இரசாயனம் மற்றும் எரிச்சலான பொருட்கள் இல்லை. அதன் இதமான மென்மையான செயல், இயற்கை எண்ணெய்களை நீக்காமலே, சருமத்தை சுத்தமாக்குகிறது. உங்கள் குழந்தையின் மேனிபனித்துளிபோல் மிளிரும், ஒளிரும்.

உங்கள் குழந்தைக்கு வேறு எந்த சோப்பையும் நம்புவீர்களா ?





காரணம், குழந்தையின் மேனிக்கு விசேஷ கவனம் தேவைப்படுகிறது.

"பேபி கேர்" என்ற இலவசப் பிரசுரம் பெற்றிட எழுதுங்கள்:
பேபி கேர் அட்வைசர், ஜான்ஸன் அன்ட் ஜான்ஸன்,
30, ஃபோர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய்-400 036.
உங்கள் குழந்தையின் பெயர் மற்றும் பிறந்த தேதியையும் குறிப்பிடவும்.

ஜான்ஸன் & ஜான்ஸன்

கண்துடைப்பும் கற்பனையும்

வாகவின் முறை வரும் போது மணி ஒன்றாகி விட்டது. இண்டர்வியூவுக்கு வந்திருந்த எட்டு பேரில் அவனைத்தான் கடைசியாக அழைத்தார்கள். ஏ.சி. அறையின் சூழ்நிலை இதமாக இருந்தது. இண்டர்வியூ போர்ட் சேர்மன் தவிர அறையில் மூன்று பேர் இருந்தார்கள். எடுத்தவுடன் சேர்மன், அவனுடைய படிப்பு, சொந்த ஊர், பொழுது போக்கு என்று எளிமையான கேள்விகளுடன் ஆரம்பித்தார். வாகவுக்கு ஒருவித நம்பிக்கை பிறந்தது. பிறகு பொது அறிவு சம்பந்தமான கேள்விகள் கேட்டார்கள். விடை தெரியாத கேள்விகளுக்குத் 'தெரியாது' என்று பதில் சொன்னான். ஒரு சாதாரண கேள்விக்கான விடையை அவனால் சொல்ல முடியாமல் போய் விட்டது.

''என்ன மிஸ்டர் வாக, இந்த கேள்விக்குக் கூடவா, பதில் தெரியலை?'' போர்ட் மெம்பர் ஒருவர் அவனை உகப்பினார்.

''சாரி சார்'' என்றான்.

மீண்டும் கேள்விகள் கேட்டார்கள். எல்லாம் ஏழாம் எட்டாம் வகுப்பு மாணவன் கூட பதில் சொல்லக்கூடிய மிகச் சாதாரணமான கேள்விகள். பதில் சொல்லிக் கொண்டே வந்த வாகவுக்குச் சட்டென்று கோபம் மூண்டது. இவர்களுடைய கூட்டு நாடகம் புரிந்து போயிற்று. இதுவரை எத்தனை இண்டர்வியூ போயிருக்கிறான்! எல்லாவற்றிலும் இப்படித்தான் பெயரளவுக்குக் கேள்விகள் கேட்டு விட்டு வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். 'வருந்துகிறோம்' கார்டு பின்னாலேயே வரும். நாற்காலியிலிருந்து திடீரென்று எழுந்தவன்,

''ஏன் சார்... யாருக்கு வேலை தர்றதுன்னு முன்னாடியே முடிவு செய்துடுவீங்க.. அப்புறம் இப்படி ஏதோ ஃபார்மாலிட்டிக்கு நாலஞ்சு கேள்வி கேட்டுட்டு எங்களை வீட்டுக்கு அனுப்பிச்சிடுவீங்க... ஏன் சார் இப்படி ஏழைங்க வயித்துல அடிக்கறீங்க...'' தன்னுடைய ஆதங்கத்தையும், இயலாமையையும் வார்த்தைகளாகக் கொட்டி விட்டு ஆத்திரத்துடனும், அழுகையுடனும் வெளியேறினான் வாக.

''இண்டர்வியூ எப்படி செய்திருக்க...?'' என்று அப்பா கேட்ட போது, ''நல்லா செய்திருக்கேன்'' என்று சொல்லி, போலியாகத் தலையாட்டினான். ''அண்ணனுக்கு எப்படியும் இந்த வேலை கிடைச்சிடும்'' - தங்கை சொன்ன போது மனத்துக்குள் உடைந்து போனான்.

அந்த இண்டர்வியூவுக்குச் சென்று வந்து ஒரு வாரம் கழித்து... ஒருநாள் மாலை... வீட்டுக்கு வந்தவரைப் பார்த்ததும், 'வாங்க' என்று சொல்லத் தோன்றியதே தவிர, சட்டென்று அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

''என்னப்பா, வாக சௌக்யமா...?'' என்று அவர் கேட்டதும் மூளைக்குள் பொறி தட்டி அடையாளம் புரிந்து போயிற்று. அவனை இண்டர்வியூ செய்த கமிட்டியில் சற்று வயதானவராக இருந்தவர்தான் அவர். அவர் அவனுடைய அப்பாவின் பால்ய சிநேகிதராம். அவனுடைய பயோடேட்டா வைத்து வாகவின் அப்பாதான், தன் நண்பர் என ஊகித்து அவனுடைய வீட்டிற்கு வந்திருக்கிறார். அப்பாவும் மிகவும் சந்தோஷப்பட்டுப் போனார். விஷயத்தைச் சொன்னதும்,

''என்ன பையன் இண்டர்வியூ நல்லா பண்ணியிருக்கானா...? வேலை கிடைக்குமா...'' என்று அப்பா கேட்டதற்கு,



''பார்க்கலாம்'' என்று தலையாட்டினார். கடைசியில் விடைபெறும் போது வாகவை மட்டும் தனியாக அழைத்தார்.

''வாக என்னப்பா கடைசியில் இப்படி பண்ணிட்டியே...'' என்றார்.

வாகவுக்கு அலுப்புத் தட்டியது. ''வேறு என்ன சார் செய்யச் சொல்றீங்க... என் நிலையில் வேறு யார் இருந்தாலும் அப்படித்தான் செய்திருப்பாங்க...'' என்றான்.

''தப்பு வாக... உனக்கு வந்த வேலையை நீயே உதறித் தள்ளிட்டு வந்துட்டே.''

சட்டென்று ஆச்சர்யத்தில் புருவங்கள் உயர, ''என்ன சார் சொல்றீங்க...?'' என்றான்.

''ஆமாம்பா... இண்டர்வியூவுக்கு வந்திருந்த எல்லோரையும் விட உனக்குத்தான் திறமையும், அறிவும் இருக்குங்கறது எங்க போர்ட் மெம்பர்ஸ் எல்லோருடைய கருத்தும். நீ மட்டும் கடைசியில் கொஞ்சம் பதற்றப்படாம இருந்திருந்தா அந்த வேலை நிச்சயம் உனக்குத்தான் கிடைச்சிருக்கும்...''

''உண்மையாவா சார்...?''

''ஆமாம் வாக... உன்னால் ஒரு சாதாரண கேள்விக்குப் பதில் சொல்ல முடியாம போனது உண்மைதான். அதனால நீ இந்த குறிப்பிட்ட வேலைக்கு தகுதியில்லாதவன்னு அர்த்தம் இல்லையே... உனக்குள்ள ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தத்தான் அடுத்தடுத்துச் சலபமா பல கேள்விகளைக் கேட்டோம். அதை நீ தப்பாப் புரிஞ்சுக்கிட்டியே...?''

வாகவின் மனத்துக்குள் ஏதோ ஒன்று உடைந்து போனது.

''இதோ பார் வாக... ஏதோ ஒரு சில இடங்களில் தவறுகள் நடக்கத்தான் செய்யுது. அதுக்காக, எல்லா இண்டர்வியூக்களுமே கண் துடைப்புன்னு சொல்லிடறதா?''

வாக பொறுமையாக நின்று கொண்டிருந்தான்.

''வாக... உன்னோட குடும்ப நிலைமைக்காகப் பரிதாபப்படறேன் நான். இப்ப நான் நினைச்சாக் கூட உனக்கு இந்த வேலையை வாங்கித் தர முடியும். ஆனா உன்னைப் போல யாரோ ஒருவனைப் பலிகொடுத்து உனக்கு இந்த வேலையை வாங்கித் தர்றதுல எனக்குப் பிரியமில்லை. தன்னம்பிக்கையையும் துணிவையும் வளர்த்துக்கிட்டிருக்கிற அளவுக்குப் பொறுமையையும் வளர்த்துக்கோ. வேற வேலை உனக்கு நிச்சயம் கிடைக்கும்.''

இப்போது வாகவுக்குள் ஒரு புதிய நம்பிக்கை பிறந்துவிட்டிருந்தது.

தபசி

20

ஷிப்ட் முடிந்ததும், டைம் ஆபிஸுக்கு வந்தான். முகம், கால் கையைக் கழுவிக் கொண்டான், பழநி. யூனிஃபார்ம் டிரஸ்ஸைக் களைந்து, பிளாஸ்டிக் கூடைப் பைக்குள் மடித்து வைத்தான். கைலியையும், ஸிலாக் ஷர்ட்டையும் உடுத்திக் கொண்டான்.

கார்டை வாங்கி வைத்துக் கொண்டான். மற்ற சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகள் இவனுக்கு மரியாதையோடு வணக்கம் செய்தனர். வயதானவர்கள் கூட இவனை மதித்து... மரியாதையோடு பேசுகிற போது கூசிப் போகிறான்.

சங்கத்துத் தோழர் ஒருவர் ஷிப்ட்டுக்குப் போவதற்காகக் காத்திருந்தார்.

''வணக்கம் பழநி.''

''என்ன ஷிப்ட்டுக்கா?''

''ம். என்னோட மெடிக்கல் லீவ் இன்னும் அப்ரூவல் ஆகலே போலிருக்கே...''


''அப்படியா? நேத்தே பேசிட்டேனே. சரி... இன்னிக்கு மறுபடியும் போன்லே சொல்லிடுறேன்...''

''சரி பழநி... காலனிலே குவார்ட்டர்ஸ் ஒதுக்குறதுலே நம்ம ராமசாமிக்கு ஏதோ பாரபட்சம் காட்றாங்களோ?''

''ஆமா. நம்ம ராமசாமிதான் முந்தி அப்ளிகேஷன் குடுத்தது. ஆனா... ஆளுங்கட்சிச் சங்கத்துக்காரன் ஒருத்தனுக்காக ராமசாமி அப்ளிகேஷனைப் 'பெண்டிங்'லே வைச்சிருக்காக.''

''அது எப்படி நியாயமாகும்?''

''நியாயமில்லேதா. நிர்வாகம் அந்த லட்சணத்துலே இருக்கு. ஆனா, நாம




விடப் போறதில்லே. கேட் மீட்டிங்லே இதைப் பேசப் போறேன். ஆபீஸர் கிட்டேயும் பேசுவோம். விட மாட் டோம்...''

வெளியே வந்தான். உள்ளே போவ தும், வெளியே வருவதுமாகத் தொழிலாளி கள். கூட்டம் கசகசத்தது. வழிநெடுக இவ னுக்கு நிறைய 'விஷ்' பண்ணினர்.

நெஞ்சு வறண்டது. ஒரு டீ குடித்தால் நல்லது. அப்படியே வேறு ஏதாவது தின் பண்டம் தின்னக் கிடைத்தால் பரவா யில்லை.

கேண்டீனுக்குள் நுழைந்தான். நிறைய புன்சிரிப்புகள். கேலி கிண்டலான உரை யாடல்கள்.

ரெண்டு வடைக்கும், டீக்கும் டோக் கன் வாங்கிக் கொண்டான். யாருடனோ



பேசிக் கொண்டே வயிற் றுக்குள் தள்ளி விட்டுப் புறப்பட்டான்.

''பழநி சார்... எங்கே? இருக்கா?''

''ம்...''

''சைக்கிள் இருக்கா?''

''இல்லே.''

''அப்ப வாங்க. பின் னாடி ஏறிக்கங்க...''

அறைக்குள் வந்தான். மணி ஐந்தாகி விட்டது. அப் படியே வந்து கட்டிலில் சாய்ந்தான். அன்றைய பேப் பரை எடுத்தான். படுத்துக் கொண்டே மேய்ந்தான்.

இவன் கலந்து கொண்ட பாரதி விழா நாலு வரிச் செய்தியாக இருந்தது. ஏனோ... அதைத் திரும்பத் திரும்ப வாசிப்பதில்... ஒரு சுகம். ஒரு மயக்கம்.

'தொழிற் சங்கத் தலைவர் பழநி வாழ்த்துரை வழங்கினார்...' என்ற வரி இவனுள் தேன் பாகாகக் கீழிறங்கி... இனித்தது.

பேசி முடித்தவுடன் அன்றைக்கு ஏன் சொர ணத்தை நினைத்தான்? சொர்ணத்தின் மதிப்பில் உயர வேண்டும் என்கிற உள் மன ஏக்கம்.

...அப்போது பழ நிக்கு நல்ல டவுசர் கூட கிடையாது. பட்டன் அறுந்து போன டவுசர், அர்ணாக்கயிறில் செருகப்பட்டு... அதன் பலத்தில் தொங்கும்.

கன்னங்கரேல் என்று கருவேலங் கட்டை மாதிரி இருக்கும். எந்நேரமும் மூக்குச் சளி வழியும். 'புருட், புருட்' டென்று அடிக்கொருதரம் உள்ளிழுத்துக் கொள்வான்.

சொர்ணத்துடன் படப்படியில் விளை யாடுவான். மற்ற பெண் பிள்ளைகளும் கூட விளையாடும். ஒருநாள் வேலாயி வந்து சொர்ணத்தை அதட்டினாள்.

தராதரமில்லாத பிள்ளைகளோடு விளையாடுவதற்காக அவளைக் கண்டித்

மேலாண்மை பொன்னுச்சாமி

தான். மிரண்டு நின்ற சிறுமிகளையும் அதட்டினாள். சீறலான அதட்டல்.

''கேடு கெட்ட மூதிகளா... உங்களுக்கு வெளையாடுறதுக்கு இந்த எடம்தான் கெடைச்சதோ? கெதி கெட்ட கொரங்குக வெளையாடுற எடமா, இது? போங்க நாய்களா...''

பிள்ளைகள் கல்லடிபட்ட தேன் குளவிகளாக ஓடிப் பறந்து விட்டனர். பழநி கடைசியாகப் போனான். அந்த அம்மாளையே முறைத்துப் பார்த்தான்.

''என்னடா பார்வை பாக்கே? திமிர் பிடிச்ச நாயே... போடா!''

இவன் மீதும் சிதறி விழுந்த தீக்கங்குகள். மனசு முழுவதும் கொதித்தது. முதுகைத் துரத்தி வந்த தீக் கங்குகள்...

''ஈ சாதிக்காரப் பயலுக புள்ளைக கூட நிமிர்ந்து பாக்குதுகளே... கொஞ்சம் கூட பயமில்லாம!''

இந்தக் கங்குதான் இவனுள் ஆழத்தில் போய் விழுந்தது. அந்தப் புண், ரொம்பக் காலம் வரை வலித்துக் கொண்டேயிருக்கிறது. அதற்குப் பிறகு அவன் அந்த திசைப் பக்கமே தலைவைத்துப் படுக்கவில்லை.

....இவனுக்கு இவன் வளத்தையாதான் எல்லாம். அம்மா அய்யா எல்லாம். எல்லா விஷயத்திலேயும் இவனுக்கு வளத்தையா ரொம்பப் பிடிக்கும். அவரது பேச்சு, அறிவுரை, உழைப்பு... எல்லாமே பிடிக்கும். ஒன்றே ஒன்று மட்டும் இவனுக்குக் கசந்து வரும்.

எசமானியம்மாவின் தர்ம குணம் பற்றியும்... அவர்கள் கொடிகட்டி வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு இருந்த பெருமைகள் பற்றியும் லயித்துப் பேசுவது அவனுக்குக் கட்டோடு பிடிக்காது.

வெறுப்பில் மௌனமாகிப் போவான். அவரது பேச்சிலுள்ள அடிமை மோகம், இவனுள் எரிச்சல் ஏற்படுத்தும்.

ஆஸ்டலில் தங்கி, பாலிடெக்னிக்கில் படித்துக் கொண்டிருந்த சமயம். வளத்தையாவைப் பார்த்து விட்டு, பணம் வாங்கிக் கொண்டு புறப்பட்டான் பழநி.

அதிகாலை பஸ்ஸைப் பிடித்தாகணும். ஊரின் கீழ்க் கோடியில் பஸ் ஸ்டாப். காத்திருந்தான்.

இவனைக் கடந்து மூன்று பெண்கள் தூக்குச் சட்டிகளுடன் சென்றனர். அவர்கள் கொஞ்ச தூரம் போய்த் தேங்கி நின்றார்கள். யாருக்காகவோ காத்திருக்கின்றனர்.

மேற்குத் திசையிலிருந்து ஓர் இளம் பெண் வந்தாள். கையில் தூக்குச் சட்டி. பிளாஸ்டிக் டப்பா. பெண்ணா, அது? தேவதை!

தங்கத் தகதகப்பாய் ஒரு நிறம். பார்த்த மனசைச் கண்டியிழுக்கிற தோற்றம். கண்டி யிழுத்த மனசை சூறைக் காற்றாய்ச் சுழற்றி யடிக்கிற வசீகரம். சின்ன உடல். மெல்லிய பூ மாதிரியான ஒரு உடல்வாகு. சொர்ணமா... அது?

பாவாடையில் என்னோடு விளையாடிய சொர்ணமா, இது? இது என்ன... பௌர்ணமி நிலவைக் கூட தலைகுனிய வைக்கிற ஒரு பேரழகு. அழகில் எதையும் மிச்சம் வைக்காமல்... அத்தனையையும் அள்ளிப் பூசிக் கொண்டாளா?

அவளது அழகு அந்த இளைஞனை அதிர வைத்தது. பிரமிப்பிலிருந்து அவனால் விடுபடவே முடியவில்லை.

அப்புறம் பாரதி கவிதைகளில் பெண்களைப் பற்றி படிக்கிறபோதெல்லாம்... சொர்ணத்தின் தோற்றம்தான் அவனுள்.

அப்படியே கிறங்கிப் போவான். உள்ளுக்குள்ளேயே வார்த்தைகளைக் கோத்துக் கோத்து அவளை வர்ணித்துப் பார்ப்பான். இயலாமையுடன் தலையைக் குலுக்கிக் கொள்வான். முடியவே முடியாது.

'அடடா... ஓ... அடடா...' பாரதியின் இந்தப் பிரமிப்புச் சொல்தான்... அவனது வேதமாயிற்று. அந்த வர்ணனைதான்... இவனுக்கு ஓரளவு திருப்தியாக இருந்தது.

சொர்ணத்தின் இன்றைய நிலை... அவனுக்குள் பரிதாபமாக இருந்தது.

புழுதியில் விளையாடுகிற போது கூட பட்டுப் பாவாடை கட்டிக் கொண்டு, பட்டுப் பூச்சியாகத் திரிந்த சொர்ணம், சாயம் போன நைலக்ஸ் சேலையும், மலிவு விலைச் செருப்பும் அணிந்து கொண்டு கால்நடையாக நடந்து... பசை ஒட்டிப் பிழைக்கிற இன்றைய அவலம்...

இவனுக்குள் பரிதாபமாக இருக்கிறது.

தான் வாங்குகிற சம்பளம் முழுவதையும் செலவழித்து... அவளை ராணி போல வைத்துப் பராமரிக்க வேண்டும் என்கிற ஆசை... அவனுள் ஒரு வெறியாகவே எழும்.

இப்போது கூட... அவன் மனசு முழுக்க நினைவாக நிறைந்து ததும்புவது, அவள்தான். பௌர்ணமி நிலாவாக, அவள்.

ஒருவேளை... அவள் நிலாதானா? அவளுக்கு ஆசைப்படுவது குழந்தைத்தனம் தானா? அவள் என்ன ஜாதி? இவன் என்ன ஜாதி? தாங்குவாளா? சம்மதிப்பாளா? ஊர் சம்மதிக்குமா? எட்டாத் தூரம்தானா? இட்டு நிரப்ப முடியாத இடைவெளியா? கடக்க முடியாதா? கலக்க முடியாதா?

நிலாவை எட்டிப் பிடிக்க நினைப்பது அறியாமையா?

''சந்திரனைத் தொட்டதின்று
மனிதசக்தி
சரித்திரத்தை மீறியது மனிதசக்தி''

பட்டுக் கோட்டையின் வரிகள், இவனுக்குள் ஒரு நம்பிக்கை தரும். கனவுகளுக்குக் கால் வழங்கும்.

எப்படிப் பார்த்தாலும்... அறிவுபூர்வமாக யோசித்தால்... சொர்ணத்தை எட்டிப் பிடிப்பது இயலாதுதான். அவளைக் காதலிப்பது கூட.... அநியாயம்தான். அனாவசியம்தான். அசாத்தியம்தான்.

ஆனால், இதையெல்லாம் மனசு பார்ப்பதில்லை. அடங்குவதில்லை. குரங்காகக் குதிக்கிறது. தவ்வுகிறது. தாவுகிறது.

அறிவின் லகானுக்குள் மடங்க மறுக்கிறது...


(தொடரும்)

மனிதனின் நான்கு பருவங்கள்



நன்றி : ஸ்பான்

இது பொது வழி அல்ல...



சின்னக் கபாலிக்கு ரொம்ப நாளாய் ஓர் ஆசை. எத்தனை நாளைக்குத்தான் அடுத்தவன் கடையில் எடுபிடியாய் அலைவது. தனியாய் ஒரு துணிக் கடை போட வேண்டும். மற்றவர்களைப் போல நாலு காசு பணம் பார்க்க வேண்டும். தன்னாலும் முடியும் என்று கம்பீரம் காட்ட வேண்டும். மதன் லால் சேட்டு மூலம் துணி வாங்கி விடலாம். ரெடிமேட் துணிகள். உள்பாவாடை, பனியன், ஜட்டி, குழந்தைகளுக்கான டிரெஸ் என்று வாங்கிக் குவித்து வைத்தால் அமோகமாய் வியாபாரம் நடக்கும். சரக்கு விற்ற பிறகு பணம் கொடுத்தால் போதும். மதன் லால் நல்ல சிநேகிதர். ஆனால் கடை போட நல்ல இடம் கிடைக்க வேண்டும். பிளாட்ஃபாரக் கடை. எல்லா இடத்திலும் போட்டு விட முடியாது. அதற்கென்று சில இடங்கள் உண்டு. பிளாட்பாரக் கடை போடுவது என்பது சாதாரண காரியமில்லை. ராசி வேண்டும். அதற்கென்று சில லட்சணங்கள் உண்டு. போலீஸ் உபாதை கூடாது. தாதாக்கள் ஆர்ப்பாட்டம் இல்லாது கூட்டம் கூடுகின்ற இடமாக இருக்க வேண்டும். முத்துமணி ஓர் இடம் சொல்லியிருக்கிறான். கொத்தவால் சாவடிக்கு எதிரில் ஓர் இடம். கூட்டம் கூடுகின்ற இடம். வியாபாரிகள்.. காய்கறிகள் வாங்க வருகின்ற கூட்டம் என்று நல்ல இடம். ஜாதிக்காய் பலகை அடித்துச் சின்ன மேடை மாதிரி போட்டிருக்கிற பிளாட்ஃபாரக் கடை! அந்த இடத்தைப் பிடித்துத் தருகிறேன் என்கிறான். பகடியாய் இருபதாயிரம் கேட்கிறார்களாம். 'பகடி' என்றால் அந்த இடத்தை விட்டுத் தருவதற்கு லஞ்சம். கார்ப்பரேஷன் இடம். யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. கிடைத்த வரை லாபம்! அகப்பட்ட வரை அறுவடை செய்து கொள்ள வேண்டியதுதான். நிலம் சொந்தமில்லை. யாருக்கு எது சொந்தமாக இருக்க முடியும்?

இருபதாயிரத்திற்கு எங்கே போக முடியும்? மூச்சு முட்ட உழைத்தாலும் ஒரு நாளைக்கு முப்பதுக்கு மேல் பார்க்க முடியாது. வீட்டில் இரண்டு சிறிசுகள் பள்ளிக்கூடம் போகின்றன. கஞ்சித் தண்ணி வைத்துக் குடித்தாலும் கையைக் கடிக்கிறது! இப்படி இருக்கிற போது இருபதாயிரத்திற்கு எங்கே போவது? சின்னக் கபாலிக்கு அது முடிகிற காரியமா என்று மலைப்புத் தட்டிற்று! கபாலி கண்ணை மூடிக் கொண்டான். உள்ளே யோசனைகள் உருண்டு ஓடின!

''என்ன கபாலி?''

''முடியாது முத்துமணி!''

''புரட்டிடலாம்பா. ஒரு தபா எங்கனா முட்டி மோதிப் பாரேன். இருபதாயிரம் இந்தக் காலத்துல பெரிசுனு நினைக்கறியே! சும்மா பணத்தை வெச்சு வித்தை காட்டிக்கினு கீறானுவ... நீ என்னடான்னா இருபதாயிரத்துக்குப் போயி பேஜாராயிடுறே...''

''நமக்கு முடியாது.''

''ஒரு வழி கீதுப்பா! கஷ்டம்னு நினைச்சா கஷ்டம்தா. யோசனை பண்ணு! நம்ம ஃபிரண்டு ஒருத்தன் ஆஸ்பத்திரியிலே வேலை பண்றான். அவன் சொன்னான் கிட்னி கொடுத்தா முப்பதாயிரம் தாராங்களாம்...''

பாரதிபாலன்

''கிட்னினா?''

''அதாம்பா 'சிறுநீரகம்'. அது கஷ்டமில்லைங்கிறான். ஒவ்வொருத்தருக்கும் ரெண்டு கிட்னி இருக்குதாம். ஒண்ணுபோதுமாம். ஒண்ணுதேவை இல்லையாம். யாருக்குனா கொடுக்கலாமாம்!''

''எதுனா பேஜாராயிடாதே!''

''ஆவாது.''

''உசிருக்குக் கெடுதல்...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை.''

''பயமா இருக்குபா.''

''முப்பதாயிரம் தர்றான் கபாலி.''

''செத்துட்டா?''

''எதுக்குச் சாவுறே! ஈகா அண்ட வேலை பண்றானே ரங்கபாஷியம், அவன் கூட கிட்னி கொடுத்துட்டுப் பணம் வாங்கியிருக்கான். இப்ப எப்படி இருக்கான்? ரிக்ஷா வலிக்கக்கினு போறானே! நம்ம வாத்தியாருக்கு (எம்.ஜி.ஆர்.) ஒரு அம்மா கிட்னி கொடுத்துச்சே இப்ப நல்லாத்தானே இருக்கு! பயமில்லை கபாலி!''

''முப்பதாயிரம் தருவானா?''

''தருவான்.''

''கூடக் கேட்டுப் பார்க்கலாமா?''

''கேட்கலாம்.''

''நோவு இருக்குமா?''

''இருக்காது. எறும்பு கடிக்கிறது மாதிரி வலிக்கும். அப்புறம் ஒண்ணும் தெரியாது. மயக்கம் தெளிஞ்சவுடனே வூட்டாண்ட கொண்டாந்து வுட்டிடுவான்.''

''எப்படினா கடையை முடிச்சிடணும்.''

''பண்ணலாம்.''

''முப்பதாயிரம் தருவான்லெ?''

''கண்டிப்பா.''

''கூடக் கேட்கலாமா?''

''முதல்ல பேசிப் பார்க்கலாம்.''

''சரி.''

''வெளியிலெ சொல்ல வேண்டாம் கபாலி!''

''சரி.''

இரவு முழுக்க கபாலிக்கு தூக்கமில்லை. எப்படித் தூங்க முடியும்? ஏதேதோ சிந்தனைகள் குடைகின்றன. பயம். ஒரு பொட்டுத் தூக்கம் கண்ணில் ஒட்டவில்லை. முத்துமணி சொல்வதெல்லாம் நிஜம்தானா? என்று கேள்வியாயிற்று. அப்படியெனில் அதற்கு எத்தனை பேர் தயாராக இருப்பார்கள். முழுசாய் முப்பதாயிரம்! மூன்று மணி நேர உபாதை மட்டும்தான். மற்றபடி ஒன்றுமில்லை. முத்துமணிக்கு இது எப்படித் தெரிந்தது. பணம் பணம் என்று பறந்து கொண்டிருக்கும் என்னிடம்தான் வந்து இப்படி ஒரு சேதியைச் சொல்ல வேண்டுமா? இதுதான் நேரமா? அதற்கெல்லாம் ஒரு நேரம் வர வேண்டும் என்கிறார்களே அந்த நேரம் இதுதானா? ஆயுசு முழுக்க உழைத்தாலும் மொத்தமாய் முப்பதாயிரம் பார்க்க முடியுமா? சரி என்று சொல்லி விடலாம்.

ஒருவேளை, ஒன்று கிடக்க ஒன்று ஆகி விட்டால்... ஒரு புள்ளி பயம் சுழன்று ஆளைத் திசை திருப்பிற்று! ஒன்றுக்கும் உதவாது பண்ணி விடுமோ? ஓடியாடித் திரிகின்றவனை முடக்கி விடுமோ? யோசிக்க வேண்டும். மெல்ல நிதானமாய் யோசிக்க வேண்டும்.

படுக்கையை விட்டு எழுந்தான். பக்கத்தில் ராமக்கா பயமின்றித் தூங்கிக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் அவளையே பார்த்தான். இறுக்கம் தளர்ந்தது! பயம் விலகி நெஞ்சில் மெல்லிய காற்று வீசிற்று! பெண் வீட்டில் இருக்கிறவள்தான். அவளுக்கு முடியாது போனாலும் சமாளித்து விடலாம். ஆண் முடங்கிக் கிடக்க முடியாது. விடிந்ததும் ராமக்காவிடம் பேச வேண்டும். ஆண், பெண் யார் வேண்டுமானாலும் கிட்னி கொடுக்கலாம் என்று சொன்னது நினைவு! ராமக்காவிடம் கிட்னி என்றெல்லாம் பேசினால் பயந்து விடுவாள். நோவாமல் பேச வேண்டும். வேறு ஏதாவது காரணம்



சொல்ல வேண்டும்.

''ராமக்கா...''

''என்னா?''

''இந்தண்ட பக்கமா வாயேன்.''

''என்னவாம்?''

''ம்.''

''ஒரு காரியம் பண்ணணும்.''

''என்னது?''

''ஆபரேஷன்.''

''ஆபரேஷனா?''

''குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் தான்.''

''ச்சீய்! இப்பப் போயா?''

''ஏன் பண்ணினா என்னவாம்? பணம் தர்றானாம். பண்ணினா நல்லது ராமக்கா. வூட்டுலையும் முடை தீரும். நானும் ஒரு கடை போடுவேன். பிற்பாடு நமக்கு ஒரு தொந்தரவும் இல்லெ.''

''இத்தனை பிறகானு வருது..''

''பண்ணிக்கம்மா, நம்ம பிள்ளைங்க நல்லா இருக்கணும் ராமக்கா. நம்மளை மாதிரி ஒண்ணுமில்லாம போயிடக் கூடாது. அதுக்காகத்தான் கடை போடணுங் கிறேன்...''

''பணம் தர்றாங்களாக்கும்.''

''ஆமாம்.''

''செவிலி மவ குடும்பக்கட்டுப்பாடு ஆபரேஷன்தான் பண்ணிட்டு வந்தா, ஒண் ணும் தரக் காணோம். மாத்திரைங்களும் மிக்ஸர் மருந்தும்தானே வாங்கியாந்தா...''

''நமக்குத் தருவாங்க. நான் ஒரு ட்ரிக் பண்ணியிருக்கேன்.''

''எவ்வளவு?''

''தருவாங்கனா வுடு.''



''மந்திரி விவரம் புரியாதவர் போலி ருக்குன்னு எதை வச்சுச் சொல்றே?''
''பதவி பறிபோயிடுத்து'ன்னு போலீஸ் ஸ்டேஷனிலே கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுத்திருக்கிறாரே!''
- காழி சாமா

''சரி.''

''யாரண்டையும் சொல்லாதே!''

நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னார்கள். ஏதேதோ டெஸ்ட் எடுத்தார்கள். இரண்டு மூன்று அறைகளுக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தார்கள். வீட்டுக்குப் போய் விட்டு ஒரு வாரம் கழித்து ஒரு சோதனை. ''மறுநாள் காலை ஆறு மணிக்கெல்லாம் வந்திடுங்க'' என்றார்கள். இத்தனைக்கும் கூடவே சின்னக் கபாலி இருந்தான். அவ னுடன் முத்துமணியும் இன்னும் ஒருத்த னும் இருந்தார்கள். அவன்தான் டாக்டரிடம் அடிக்கடி ரகசியமாகத் தணிந்த குரலில் பேசிக் கொண்டிருந்தான். ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தவுடன் ராமக்காவுக்கு ஆப்பிள் ஜூஸ் வாங்கிக் கொடுத்தான்.

''எதுக்கு இதெல்லாம்...''

''குடி. தெம்பு வேண்டாமா?''

''எனக்குப் பயந்து வர்றது. குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன்னா இப்படி இழுத்து அடிக்க மாட்டாங்க...''

''ப்ச! அதான்.''

''இல்லைனு படுது.''

''எதுனா சாப்பிடுறீயா?

''எனக்குப் பயமா இருக்கு!''

''காலையிலெ ஆஸ்பத்திரிக்கு வர ணுமா?''

''பின்ன? பயப்படாதடி. அதான் ஒண்ணு மில்லைங்கிறேன். பணம் தர்றானே... அதுக் குத்தான் இப்படி அலைய வுடுறான். காலை யிலெ ஆபரேஷன் முடிச்சுட்டா மதியம் போயிடலாம்...''

''கூட யார்னா கூப்பிட்டு வரலாமா?''

''வேண்டாம்.''

''வேலம்மாளைக் கூட்டியாரலாம்.''

''வேண்டாம். நான் இருக்கிறேன்.''

ராமக்காவுக்கு அந்த ஆஸ்பத்திரி பிடிக்கவில்லை. ஊரை விட்டு ஒதுங்கி ஓர் ஓரமாக இருந்தது. பழைய கட்டடம். பாழ டைந்த பழைய மாளிகை போல் இருந்தது. கண்ணை உருட்டி கோரப் பல் காட்டிப் பயம் காட்டுகின்ற மாளிகை. டாக்டரையும் பிடிக்கவில்லை. அங்கு இருக்கிற நர்ஸ், ஆயா, வண்டி தள்ளுகின்றவன்... யாரையும் பிடிக்கவில்லை. எல்லோருடைய முகத் திலும் ஏதோ ஒன்று உக்கார்ந்து கொண்டு பயம் காட்டுகிறது. ஆஸ்பத்திரிக்கு உண் டான அம்சம் எதுவும் தெரியவில்லை. அமைதி. மனுஷனைக் கொல்கின்ற அமைதி. பின் பகுதியில் ஒரு வார்டு இருக்கிறது. ஒருவேளை அங்கு கூட்டம் இருக்கலாம். மெயின் வார்டைத் தாண்டி ஸ்பெஷல் வார்டுக்குள் கூப்பிட்டுப் போனார்கள். சின்னக் கபாலியிடம் கையெ ழுத்து வாங்கினார்கள். ராமக்காவையும் கையெழுத்துப் போடச் சொன்னார்கள்.

''மகமாயி!''

ராமக்கா கண்ணை மூடி மனசுக்குள் மாரியாத்தாளை வேண்டினாள். மூடிய கண்களுக்குள் காலண்டரில் இருக்கும் ஆத்தாவின் உருவத்தை நிரப்பினாள். உடல் பதறிற்று!

டாக்டர் மருந்துப் பாட்டிலை எடுத்து உதறி ஊசியைச் செருகினார். டாக்டரின் ஒவ்வொரு அசைவும் நெஞ்சுக்குள் அதிர்வாய் இருந்தது. என்ன ஆகுமோ என்று ஆட்டி வைக்கின்ற அதிர்வு! ஒவ்வொரு தெய்வமாய் நெஞ்சுக்குள் நிறுத்தி விழுந்து வணங்கினாள். டாக்டர் ஊசி போட்டார். கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு கரைந்து முழுவதுமாய்த் தப்பிற்று!

மூன்று மணி நேரம் கழித்து விழிப்புத்



"அமைச்சர் டிடர்ஜென்ட் பவுடரைக் கையிலே எடுத்துக்கிட்டுக் கோட்டைக்குப் போகிறாரே, ஏன்?"

"தூய்மையான அரசியல் நடத்துவதாக எல்லோருக்கும் உணர்த்தத்தான்!"

- காழி சாமா

தட்டியது. மெல்லக் கண்ணைப் பிரித்துப் பார்த்தாள். கலங்கலாகத் தெரிந்தது. உடல் பலத்தை முழுவதுமாக உறிஞ்சி எடுத்து விட்டது போலத் தோன்றியது. உரித்துப் போட்ட நார் மாதிரி உடம்பு கிடந்தது. அரை இருட்டில் சின்னக் கபாலி நின்றிருப்பது தெரிந்தது. டாக்டர்கள் நின்றிருந்தார்கள். ராமக்காவுக்குப் பேச முடியவில்லை. 'வலிக்கிறது' - என்று சொல்ல வேண்டும் போல் வந்தது. முடியவில்லை.

தொண்டைக் குழியை விட்டு வார்த்தை வெளியேறவில்லை. மூச்சு இரைத்தது. நெஞ்சுக் கூடு மேலும் கீழும் அலைந்தது! டாக்டர் ராமக்காவின் கையைப் பிடித்துச் சோதித்தார். கபாலியைப் பார்த்து, "ஷி இஸ் ஆல் ரைட்" - என்றார்.

"பிரச்னை இல்லையே டாக்டர்?"

"ஒண்ணுமில்லை."

"வூட்டுக்கு கூப்பிட்டுப் போகலாமா?"

"ஈவ்னிங் போகலாம்."

"சரி, டாக்டர்."

"முத்துமணி வந்தாப்லையா?"

"இல்லை டாக்டர்."

"வரட்டும்."

"இன்னைக்குக் கொடுத்திடுவீங்களா?"

"ரெடியா இருக்கு."

"கொஞ்சம் கூட முடியுமான்னு பாருங்க டாக்டர்."

டாக்டர் சிரித்தார்.

மதியம் முத்துமணி வந்தான். இருவரும் டாக்டர் அறைக்குள் சென்றார்கள். டாக்டர் சின்ன சூட்கேஸ் வைத்திருந்தார். மூன்று நூறு ரூபாய்க் கட்டுக்களை எடுத்து டேபிளில் போட்டார். கபாலியின் கண்கள் அகன்றன. முப்பதாயிரம் எண்ணிக் கபாலியிடம் நீட்டினார். கை நடுங்கிற்று! இப்போதுதான் இத்தனை ரூபாயை மொத்தமாய்ப் பார்க்கிறது! முத்துமணிக்குத் தனியாய்க் கொஞ்சம் கொடுத்தார். முத்துமணியின் அழுக்குக் கையைப் பற்றிக் குலுக்கி, 'மீண்டும் பார்க்கலாம்' என்றார். முத்துமணி தலையை அசைத்தான். டாக்டர் அறையை விட்டு வெளியேறியவுடன் சந்தோஷமாக இருந்தது. முத்துமணி கபாலியைப் பார்த்து "சரியா?" என்றான். கபாலி அவன் கையைப் பிடித்து டாக்டர் குலுக்கியது போல் குலுக்கினான். நாளைக்கு முத்துமணியைத் தனியாகக் கவனிக்க வேண்டும். சாயங்காலம் டாக்டர் வந்தவுடன் ராமக்காவைக் கூட்டிக் கொண்டு வெளியேறினான். ராமக்கா ஒரே நாளில் வாடிப் போனாள்.

"எதுனா சாப்பிட வாங்கித் தரட்டுமா?"

"வேண்டாம்."

"ஆட்டோவிலே போயிடலாம்."

"வூட்டுலெ பிள்ளைங்க எப்படி இருக்குதுங்களோ?"

"நல்லாத்தான் இருக்கு."

"எனக்கு என்ன ஆபரேஷன்?"

"குடும்பக் கட்டுப்பாடுதான்."

"இல்லை. அப்படித் தெரியலை."

"அதான்."

"இல்லை. இது வேற."

"அதாங்கிறேன்."

"பொய் சொல்லாதீங்க."

"சத்தியமா அதான்."

"உடம்புக்கு என்னவோ போல வர்றது. வேற இடத்துலெ ஆபரேஷன் செஞ்ச மாதிரி இருக்கு... என்னைச் சாகடிச்சுடாதீங்க..."

"சும்மா வாமே!"

ராமக்காவுக்கு எதுவும் பேச முடியவில்லை. அவனுடைய அரட்டலுக்கு அடங்கினாள். ஆட்டோவில் ஏறினாள். தலையை வெளியே நீட்டி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு வந்தாள். ஆட்டோ வேகமாக - புதிதாக ஏதோ ஒரு பாதை வழியாக ஓடிக் கொண்டிருந்தது.

இவர்கள் அனைவரும் உங்கள் இல்லத்திற்கு வந்தால்,
அவர்கள் பருக எதை வழங்குவீர்கள்...



ஒவ்வொரு சாகர் ஸ்கிம்ட் மில்க் பவுடர் பேக் உங்களுக்கு வளமான புரதச் சத்துள்ள $5^1/_4$ லிட்டர் பாலைத் தருகிறது ஆம்! இத்தனை எளிதாக இவ்வளவு பாலை நீங்கள் இதுவரை தயாரித்தது இல்லை. அபரிமிதமான பாலைப் பெற, இன்றே வாங்குங்கள் சாகர்.

சிவகாமியின் சபதம்

நாற்பத்து நாலாம் அத்தியாயம்

கடைசி பரிசு

எல்லையற்ற அந்தகார சமுத்திரத்தின் கர்ப்பத்திலேயிருந்து மோனக் கடலின் அடிவாரத்திலிருந்து, சிவகாமி மெதுவாக மேலே வந்து கொண்டிருந்தாள்.

கன்னங்கரிய இருளிலே திடீரென்று சிறு சிறு ஒலித் திவலைகள் தோன்றிச் சுழன்று வந்தன.

நிச்சப்தத்தின் மத்தியிலிருந்து ஸ்வரூபம் தெரியாத ஒரு சப்தம் எழுந்தது. முதலில் அது மெல்லியதாயிருந்தது. வரவரப் பெரிதாகச் சமுத்திரத்தின் பேரிரைச்சல் போலக் கேட்டது.

அந்தப் பெரிய அகண்டாகார சப்தத்தின் நடுவே சிறு சிறு ஒலிகள் விட்டு விட்டுக் கேட்கத் தொடங்கின.

அந்தச் சிறு ஒலிகள் சிறிது நேரத்துக்கெல்லாம் மனிதர்களின் பேச்சுக் குரலாக மாறின.

ஆ! இரண்டு குரல்கள் மாறி மாறிக் கேட்கின்றன. அவற்றில் ஒன்று சிவகாமிக்குத் தெரிந்த குரல்; நாகநந்தி பிக்ஷுவின் அடிவயிற்றிலிருந்து கிளம்பி வரும் கம்மலான கர்ஜனைக் குரல்.

இன்னொருவரின் குரலும் தெரிந்த குரல் போல்தான் தோன்றுகிறது. ஆனால் அது யாருடையது?

சிவகாமி தன்னுடைய கண்ணிமைகள் இன்னும் மூடியிருக்கின்றன என்பதை மனத்திற்குள் உணர்ந்தாள்.

ஒரு பெருமுயற்சி செய்து கண்களை இலேசாகத் திறந்தாள்.

அப்போது அவள் முன்னால் தோன்றிய காட்சியானது, வியப்பையும் இரக்கத்தையும் பரபரப்பையும் பயங்கரத்தையும் ஒருங்கே அளித்ததோடு, இது தூக்கத்திலே காணும் கனவா அல்லது பிரமை கொண்ட உள்ளத்திலே தோன்றும் கற்பனைக் காட்சியா என்று சந்தேகிக்கும்படியும் செய்தது.

கற்பாறையில் குடைந்தெடுத்த பௌத்த விஹாரம் ஒன்றில் தரையிலே தான் கிடப்பதை உணர்ந்தாள். மேடு பள்ளமான பாறைத் தளமானது தேகம்பட்ட இடமெல்லாம் சில்லிடும்படி அவ்வளவு குளிர்ந்திருந்தது.

அவள் கிடந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் தரையிலே ஒருவர் விழுந்து கிடக்க, அவருக்குப் பக்கத்தில் சம்ஹார ருத்ர மூர்த்தியைப் போல் கையில் வாளுடன் ஒருவர் கம்பீரமாக நின்றார். இன்னும் சற்றுத் தூரத்தில் வாளும் வேலும் ஏந்திய வீரர்கள் பலர் முகத்தில் வியப்பும் ஆங்காரமும் குரோதமும் மரியாதையும் போட்டியிடும் பாவத்துடனே நின்றார்கள். அவர்களில் சிலர் ஏந்திக் கொண்டிருந்த தீவர்த்திகளிலிருந்து கிளம்பிய ஒளிப்பிழம்பும் புகைத் திரளும் அந்தக் குகை மண்டபத்தை ஒரு யமலோகக் காட்சியாகச் செய்து கொண்டிருந்தன.

பிரம்மாண்டமான சிலை வடிவில் யோக நிஷ்டையில் அமர்ந்திருந்த பகவான் புத்தர், மேற்படி காட்சியை அரைக் கண்ணாலே பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருந்தார்.

சிவகாமி தனக்கு முன் தோன்றியதெல்லாம் கனவா, பிரமையா அல்லது உண்மைக் காட்சிதானா என்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காக ஒரு தடவை கண்ணை மூடி மறுபடியும் திறந்தாள். உண்மைக் காட்சிதான் என்று அறிந்து கொண்டாள். கொஞ்சங் கொஞ்சமாக அறிவு தெளிவடைந்தது. சிந்தனா சக்தியும் ஏற்பட்டது. தரையில் கிடப்பது நாகநந்தி பிக்ஷு என்பதைக் கண்டாள். அவருக்கு அருகில் கம்பீரமாகக் கையில் வாள் ஏந்தி நின்று கொண்டிருப்பவர் தளபதி பரஞ்சோதிதான் என்பதையும் ஊகித்து உணர்ந்தாள்.

அவர்களைச் சுற்றிலும் சற்றுத் தூரத்தில் விலகி நிற்பவர்கள், தளபதியுடன் வந்த பல்லவ வீரர்களாய்த்தானிருக்க வேண்டும்.

ஆனால், அவர்கள் எல்லோரும் இங்கே எப்படி வந்து சேர்ந்தார்கள்? தான் இவ்விடம் வந்த விதம் எப்படி?

ஸ்வரூபம் தெரியாமல் கேட்டுக் கொண்டிருந்த பேச்சுக் குரல்கள் தெளிவடைந்தன. நாகநந்தி சொல்லிக் கொண்டிருந்தார் :

''அப்பனே, பரஞ்சோதி! நீ நன்றாயிரு! நீ மிக்க குணசாலி; மிக்க நன்றியுள்ளவன்! உன்னை ஒரு சமயம் நாகப் பாம்பு தீண்டாமல் இந்தக் கை காப்பாற்றியது. உன்னைப் பல்லவன் சிறையிலிருந்து இந்தக் கை விடுதலை செய்தது. நீ ஆசாரியராகக் கொண்ட ஆயனச் சிற்பியாரின் உயிரை இந்தக் கை ரட்சித்தது. அவருடைய மகள் சற்று முன்னால் காபாலிகையின் கத்திக்கு இரையாகாமல் இந்தக் கை காப்பாற்றியது. அப்படிப்பட்ட என் வலக்கையை நீ வெட்டி விட்டாய். அடியோடு துண்டித்து விட்டாய்! ஆ! ரொம்பவும் நன்றியுள்ள பிள்ளை நீ!''

அப்போது பரஞ்சோதி குறுக்கிட்டுப் பேசினார் : ''ஆஹா! கள்ளப் பிக்ஷுவே! உம்முடைய திருக்கரத்தின் அற்புத லீலைகளை ஏன் நடுவிலே நிறுத்தி விட்டீர்? மகேந்திர பல்லவர் மீது விஷக் கத்தியை எறிந்தது அந்தக் கைதானே? சற்று முன்னால் ஆயனர் குமாரியைத் தூக்கிக் கொண்டு சுரங்க வழியில் நீர் ஓடப் பார்த்ததும் அந்தக் கையின் உதவியினால்தானே? தப்பி ஓட வழியில்லை என்று தெரிந்ததும் தேவியின் பேரிலேயே உமது கொடூரமான விஷக் கத்தியை எறியப் பார்த்ததும் அந்தக் கைதான் அல்லவா?''

''ஆமாம், அப்பனே! ஆமாம்! நீ சொல்வதெல்லாம் உண்மைதான். ஆனால், எதற்காக ஆயனர் மகளை நான் கொண்டு போக முயற்சித்தேன்? தெரிந்து கொண்டாயா? ஆ! பரஞ்சோதி! ஆயனர் மகள் மீது என்னைக் காட்டிலும் உனக்கு அதிக அன்பு, அதிக பக்தி, அதிக சிரத்தை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன் எஜமானனான அந்த மூட மாமல்லனும் அவளை என்னைக் காட்டிலும் அதிகம் காதலிப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்! அப்பனே! அன்பு என்பதற்கு உனக்கு அர்த்தம் தெரியுமா? உன்னுடைய தலைவன் மாமல்லனுக்குக் காதலின் தன்மை தெரியுமா? பரஞ்சோதி! இன்று இந்த வாதாபி நகரம் பற்றி எரிந்து நாசமாவதற்குக் காரணமானவன் நான். சிவகாமிக்காகச் சொந்த சகோதரனைப் பலி கொடுத்தேன். ஹர்ஷவர்த்தனனை நடு நடுங்கச் செய்த சளுக்க மகா சாம்ராஜ்யத்தையே என் காதலுக்குப் பலியாக அர்ப்பணம் செய்தேன். ஆஹா! அன்புக்கும் காதலுக்கும் அர்த்தம் உங்களுக்கு என்ன தெரியும்?''

''அடிகளே தாங்கள் சொல்வது உண்மையே. அன்பு என்பதற்குப் பொருள் எனக்குச் சற்று முன்னால்தான் தெரிந்தது. ஒருவரிடம் நம்முடைய அன்பைக் காட்டுவதென்றால் அவர்மேல் விஷக் கத்தியை எறிந்து கொல்ல வேண்டும்! இல்லையா? இதைச் சற்று முன்னால் நான் தெரிந்து கொண்டேன். வஞ்சகப் பிக்ஷுவே! உம்மிடம் பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. உம்முடைய வேஷத்தை மட்டும் கலைக்காமல் நீர் இராஜரீக உடை தரித்திருந்தால் இத்தனை நேரம் உம்மைப் பரலோகம் அனுப்பியிருப்பேன். காவி வஸ்திரம் தரித்த பிக்ஷுவைக் கொல்ல மனம் வரவில்லை. ஒரே ஒரு நிபந்தனையின் பேரில் உம்மைக் கொல்லாமல் விடுகிறேன். பத்து வருஷத்துக்கு முன்னால் அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வருவதற்காக ஆயனர் என்னை அனுப்பினார். நானும் அப்படியே செய்வதாக வாக்களித்து விட்டுக் கிளம்பினேன். அஜந்தா வர்ணத்தின் இரகசியம் உமக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். இதோ, இந்தச் சுரங்க விஹாரத்தின் சுவர்களிலே கூட வர்ணச் சித்திரங்களைக் காண்கிறேன். உமக்குக் கட்டாயம் இந்த இரகசியம் தெரிந்துதானிருக்க வேண்டும். அதை உடனே சொன்னீரானால் உம்மை உயிரோடு விடுகிறேன். இல்லாவிடில் உமது இஷ்ட தெய்வத்தை... உம்மைப் போன்ற கிராதகனுக்குத் தெய்வம் என்பதாக ஒன்றிருந்தால் அந்தத் தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொள்ளும்!''

''அப்பனே! உன்னுடைய கருணைக்காக மிக்க வந்தனம். என் இஷ்ட தெய்வம் ஒன்றே ஒன்றுதான். அது சிவகாமிதான்;

அமரர் கல்கி



அந்தத் தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். ஆயனரையும் அவர் மகளையும் அஜந்தாவுக்கே அழைத்துப் போய் அழியா வர்ண இரகசியத்தை நேரிலேயே காட்டிக் கொடுக்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அது எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அவர்களும் கொடுத்து வைக்கவில்லை. அந்த அற்புதமான இரகசியத்துக்கு உலகத்தில் வேறு யாரும் கற்பனை செய்ய முடியாத இரகசியத்துக்கு - என்னுடைய உயிரை ஈடாக வைத்தாயே! நீ நன்றாயிருக்க வேண்டும்! சொல்லுகிறேன், கேள்: மரஞ் செடிகளின் இலை, வேர், காய், விதை முதலிய தாவரப் பொருள்களைச் சாறு பிழிந்து காய்ச்சிச் சாதாரணமாக வர்ணங்கள் குழைப்பது வழக்கம். தாவரப் பொருள்கள் காய்ந்து உலர்ந்து அழிந்து போகக் கூடியவை. ஆகையால், அவற்றிலிருந்து உண்டாக்கப்படும் வர்ணங்களும் சீக்கிரத்தில் மங்கி அழிந்து போகின்றன. ஆனால், மலைகளிலும் பாறைகளிலும் சிற்சில பகுதிகள் இயற்கை வர்ணம் பெற்று விளங்குகின்றன. இந்த வர்ணங்கள் காற்றுக்கும் வெயிலுக்கும் மழைக்கும் மங்குவதில்லை; அழிவதில்லை. ஆகவே, இந்த வர்ணப் பாறைகளைப் பொடி செய்து அதற்கேற்ற பக்குவப்படி அரைத்துக் குழைத்து உண்டாக்கும் வர்ணங்கள் அழிவதே கிடையாது. இம்மாதிரி வர்ணப் பாறைகளைப் பொடித்துக் குழைத்த வர்ணங்களைக் கொண்டுதான் அஜந்தாவில் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன... பரஞ்சோதி! சென்ற ஐந்நூறு வருஷ காலமாக அஜந்தா சங்க்ராமத்தைச் சேர்ந்த பிக்ஷுக்களைத் தவிர வேறு யாரும் அறியாத பரம இரகசியத்தை உனக்கு நான் சொல்லி விட்டேன், இனி நான் போகலாமா?''

''அடிகளே! உடனே போய் விடுங்கள். அடுத்த நிமிஷம் என் மனம் மாறினாலும் மாறி விடும். சிவகாமி தேவியுடன் நீர் ஓடிப் போக யத்தனித்த கள்ளச் சுரங்க வழியாகவே இப்போது போய் விடுங்கள். சீக்கிரம்! சீக்கிரம்!''

நாகநந்தி மிக்க பிரயாசையுடன் எழுந்திருந்தார். வெட்டுப்பட்ட தம்முடைய வலது கையை இன்னொரு கையினால் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றார்.

''பரஞ்சோதி! நீ நல்ல பிள்ளை. நான் உயிர் தப்ப விட்டு விட்டாய். என் கையை வெட்டியதற்குப் பதிலாகக் கழுத்தை வெட்டியிருந்தாயானால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். ஆனால், எனக்கு இன்னும் உயிர் மேல் ஆசை விடவில்லை. உன்னிடம் உயிர்ப் பிச்சை கேட்டேன். நீயும் கொடுத்தருளினாய். மாமல்லன் வருவதற்குள்ளே நான் போய் விட வேண்டுமென்பது உன் கருத்து என்பதை அறிந்து கொண்டேன். இதோ போய் விடுகிறேன். ஆனால், இன்னும் ஒரே ஒரு கோரிக்கை : சிவகாமி, சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து எழுவாள். அவளிடம் ஒரு விஷயம் அவசியம் தெரியப்படுத்து. அவள் மேல் நான் விஷக் கத்தியை எறிந்து கொல்ல முயன்றேன் என்பதைக் கட்டாயம் சொல்லு! அதுதான் அவள்பேரில் நான் கொண்ட காதலின் கடைசிப் பரிசு என்றும் சொல்லு!''

இவ்விதம் கூறிக் கொண்டே நாகநந்தி சிவகாமி கிடந்த பக்கம் நோக்கினார். சிவகாமி மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து பாறைத் தூணின் பேரில் சாய்ந்து கொண்டு சிலையைப் போல் அசைவற்று நிற்பதை அவர் பார்த்தார்.

''ஆ சிவகாமி! எழுந்து விட்டாயா? ஆயனரின் சீடர் பரஞ்சோதியிடம் நான் சொன்னது உன் காதில் விழுந்ததா? ஆம்! உன் மீது கத்திஎறிந்து கொல்லப் பார்த்தேன். எதிர்காலத்தை நினைத்து உன் மேல் இரக்கங்கொண்டுதான் அந்தக் காரியத்தைச் செய்ய முயன்றேன். பல்லவ சேனாதிபதி குறுக்கே வந்து உனக்கு அந்த நன்மையை நான் செய்ய முடியாமல் தடுத்து விட்டார். சிவகாமி! வருங்காலத்திலே... வேண்டாம்; வருங்காலத்தில் என்னை நீ நினைக்க வேண்டாம். இந்தப் பாவியை மறந்து விடு! உடல் பொருள் ஆவி அனைத்தையும் இகத்தையும் பரத்தையும் உன் காலடியில் அர்ப்பணம் செய்த இந்தக் கள்ள பிக்ஷுவை மறந்து விடு. மறந்து விட்டு, கூடுமானால் சந்தோஷமாயிரு! ஆனால், நான் மட்டும் உன்னை மறக்க மாட்டேன். பரஞ்சோதியையும் மாமல்லனையும் கூட நான் மறக்க மாட்டேன்! போய் வருகிறேன், சிவகாமி! போய் வருகிறேன். உன்னைப் புத்த பகவான் காப்பாற்றட்டும்!''

இவ்விதம் பேசிக் கொண்டே தள்ளாடித் தள்ளாடி நடந்து நாகநந்தி பிக்ஷு புத்த பகவானுடைய சிலைக்குப் பின்னால் மறைந்தார்.

நாகநந்தி அவ்விதம் தப்பிச் சென்று சுரங்க வழியில் மறைந்ததை அனைவரும் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சேனாதிபதியின் அநுமதியின் பேரிலேயே பிக்ஷு செல்கிறார் என்பதை அறிந்திருந்தபடியால் யாரும் அவரைத் தடுக்க முயலவில்லை.

சிவகாமியும் பார்த்த கண் பார்த்த வண்ணம் நாகநந்தி மறையும் வரையில் அவரையே நோக்கிக் கொண்டு நின்றாள். சற்று முன்னால் காபாலிகையின் கத்திக்கு இரையாகாமல் அவர் தன்னைக் காப்பாற்றிய போது, அவர் புலிகேசிச் சக்கரவர்த்தியா

அல்லது நாகநந்தி பிக்ஷுவா என்று ஐய முற்றாள். இப்போது அவர் மனிதனா, மனித உருக்கொண்ட அரக்கனா, ஏதோ பெருந் துக்கத்தினால் மூளை சிதறிப் போன பைத்தியக்காரனா, அல்லது ஈவு இரக்கமற்ற கொடிய பிராதகக் கொலைகாரனா என்னும் சந்தேகங்கள் அவளுடைய மனத்தில் தோன்றி அலைத்தன.

இதற்கிடையில் சேனாதிபதி பரஞ்சோதி, "சத்ருக்னா, நல்ல சமயத்தில் வந்தாய்! இந்தப் பாதாள புத்த விஹாரத்திலிருந்து வெளியேறுவதற்கு ஏதாவது நல்ல மார்க்கம் இருக்கிறதா என்று பார்! நாங்கள் வந்த கிணற்றுச் சுரங்க வழியாக எல்லாரும் போவது கஷ்டம். பிரதான வாசல் எங்கேயாவது இருந்து அடைபட்டிருக்க வேண்டும். சீக்கிரம் கண்டுபிடி!" என்றதும், சத்ருக்னன், "சேனாதிபதி! பிரதான வாசலை ஏற்கெனவே கண்டுபிடித்து விட்டேன். அந்த வழியை உடனே திறப்பதற்குக் கட்டளையிடுகிறேன்!" என்றான்.

சேனாதிபதிக்குச் சட்டென்று ஒரு நினைவு வந்தது. "சத்ருக்னா! குண்டோதரன் எங்கே?" என்று கேட்டார்.

"ஆ! சேனாதிபதி! என் அருமைச் சீடர்களில் அருமைச் சீடன் காபாலிகையின் கத்திக்கு இரையாகி விட்டான். அந்த ராட்சஸியைக் குகையில் காணாமல் சுரங்க வழியிலே தேடிக் கொண்டு வந்தோம். தாங்கள் அந்தச் சண்டாளியைப் பார்த்தீர்களா?" என்று சத்ருக்னன் கேட்க, "பார்த்தேன். சத்ருக்னா! கண்ணனும் காபாலிகையும் பக்கத்து வீட்டிலே செத்துக் கிடக்கிறார்கள். கண்ணன் எப்படிச் செத்தான் என்பது தெரியவில்லை. அவ்விடம் போய்ப் பார்க்க வேண்டும்" என்றார்.

பரஞ்சோதி இவ்விதம் சொல்லிக் கொண்டே தூணின் மேல் சாய்ந்து நின்று கொண்டிருந்த சிவகாமியின் அருகிலே சென்று பக்தியுடன் வணங்கினார்.

"அம்மணி! எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்தீர்கள். ஏகாம்பரர் அருளால் எல்லா அபாயமும் தீர்ந்தது. ஒன்பது வருஷத்துக்குப் பிறகு தங்களை மறுபடியும் உயிருடன் பார்க்க முடிந்தது. சிறிது நேரம் உட்கார்ந்து இளைப்பாறுங்கள்! இந்தக் குகையின் வாசல் திறந்ததும் வெளியேறலாம். தங்கள் தந்தையும், சக்கரவர்த்தியும் கோட்டைக்கு வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள்!" என்றார்.

சிவகாமி துக்கம் நெஞ்சம் அடைக்க, நாத் தழுதழுக்க "தளபதி! போவதற்கு முன்னால் எனக்குக் கமலியின் கணவனை மறுபடியும் பார்க்க வேண்டும். என்னை அந்த வீட்டுக்கு அழைத்துப் போங்கள்" என்றாள்.

அதே சமயத்தில், அடைக்கப்பட்டிருந்த அந்தப் புத்த விஹாரத்தின் பிரதான வாசலைப் பல்லவ வீரர்கள் 'படார் படார்' என்று இடித்துத் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

அருள்வாக்கு

ஒரு காரியமும் இல்லாமல் தன்னைத் தானே அனுபவித்துக் கொண்டிருக்கிற பிரம்மத்தையே சிவன், சிவம் என்று சொல்கிறோம். காரியமில்லாமல், ரூபமில்லாமல், வர்ணமில்லாமல், குணமில்லாமல் இருக்கிற அந்த சாந்தமயமான பிரம்மத்திலிருந்துதான் இத்தனை காரியங்கள், ரூபங்கள், வர்ணங்கள், குணங்கள் எல்லாம் உண்டாகியிருக்கின்றன. மாயா சக்தியினால் ஒரே பிரம்மம் இத்தனை உருவங்களும் குணங்களும் உள்ள பிரபஞ்சங்களாகவும் ஜீவராசிகளாகவும் தோன்றியிருக்கிறது. ஒன்றான பிரம்மத்தைப் பலவான பிரபஞ்சமாகக் காட்டுகிற அந்த மாயா சக்தியைத்தான் அம்பாள், அம்பாள் என்று சொல்கிறோம். இந்தச் சக்தியினால்தான் நாம் எல்லாம் தோன்றியிருக்கிறோம். உண்மையில் நாமும் பிரம்மத்தைத் தவிர வேறு இல்லை. ஆனால் வேறாக நினைக்கிறோம். இதற்குக் காரணம் பிரம்ம சக்தியான அம்பாளின் மாயைதான். இப்படி நம்மை மாயையில் போட்டு எடுப்பது அவளுடைய லீலை. ஆனால் அவள் மாயையில் நம்மைக் கட்டிப் போடுகிறவள் மட்டும் அல்ல. மனமுருகி அவளை எந்நாளும் பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தால் அவளே இந்த மாயை முழுவதையும் நீக்கி, நமக்குப் பிரம்ம ஞானத்தை அநுக்கிரகம் செய்வாள்.



ஞானம் பெறுவதற்கு சாக்ஷாத் அம்பாளைத் தவிர வேறு கதி இல்லை. அவள்தான் மாயையால் ஒரே பிம்பத்தை மறைத்துப் பலவேறான பிரபஞ்சமாகக் காட்டுகிறாள். இந்தப் பிரபஞ்ச ஆட்டத்திலிருந்து விடுதலை பெற்று, சம்சாரத்திலிருந்து - ஜனன மரணச் சுழலிலிருந்து - விமோசனம் அடைந்து பிரம்மமாகவே நாம் ஆக வேண்டும் என்றால், எவள் இந்த மாயையைச் செய்தாளோ, அவளுடைய அநுக்கிரகம் ஒன்றினால்தான் முடியும். மாயா சக்தியாக இருக்கிற அம்பாளேதான் ஞானாம்பிகையாக வந்து நமக்கு மோக்ஷத்தை அநுக்கிரகம் செய்கிறவளும் ஆவாள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கனவுக் குதிரைகள்



முதுகில் அமர்ந்தால்
மூன்று உலகமும்
காட்டுவேன் என்று
கனைக்கும் குதிரை!

அடுத்தநூற் றாண்டுக்கே
அழைத்துச் செல்வதாய்
அறிக்கை விடுக்கும்
அழகுக் குதிரை!

ஆகாயத்தில்
அமர்த்துவேன் என்று
ஆசை காட்டும் ஓர்
அரபுக் குதிரை!

ஏழு கடல் தாண்டி
இன்ப உலகிற்குத்
தோளில் சுமப்பதுவாய்ச்
சூளுரைக்கும் ஒரு குதிரை

தடைகளைத் தாண்டி
முன்னேறுகிறோம் என்று
தாவிக் காட்டும்
சர்க்கஸ் குதிரை...

ஒவ்வொரு குதிரையும்
ஒவ்வொரு விதமாய்...
வார்த்தைகளெல்லாம்
மனதிற்கு இதமாய்...

□ □ □

குடிசைகளைச் சுற்றி
குதிரைகள் கூட்டம்
குதிரைகளுக் கெல்லாம்
கோட்டையில் நாட்டம்!

□ □ □

கரைகாண நிற்கும் சிலர்
கண் விழித்தார் -
இவையெல்லாம்
மணல் குதிரை என்றுரைத்தார்

□ □ □

மணல் குதிரை கரைந்துவிடும்
வாக்குறுதிக் குதிரைகளோ
கரையாது!
நம்மைத்தான்
கரைத்து விடும்!

குதிரைகள் மட்டும்
குண்டு குண்டாய்க்
கொழுத்துவிடும்!

□ □ □

மு.மேத்தா

கோப முடிச்சுகள்...

சுந்தலைக்கு மூச்சு வாங்கியது. கைகளைத் தரையில் ஊன்றி மெள்ள எழுந்தாள்.

ஒரு கை இடுப்பைத் தாங்கியிருக்க, சின்னச் சின்ன அடி எடுத்து நடந்தாள். இப்பொழுதெல்லாம் வேகமாக நடக்க முடிய வில்லை.

இவளது சரிந்த வயிற்றைப் பார்த்து, பக்கத்து வீட்டுப் பாட்டி தீர்மானமாய்ச் சொல்லி விட்டார்.

'கட்டாயம் இரட்டைக் குழந்தை தான்.'

சூர்யாவிடம் இந்தச் செய்தியைச் சொன்ன போது அட்டகாசமாய்ச் சிரித்தான்.

''ரொம்ப சௌகர்யமாப் போச்சு... இதோட முடிச்சுக்கு வோம்... நாமிருவர்... நமக்கு இரு வர்...!''

''போப்பா... எல்லாமே உங்க ளுக்குக் கிண்டல்தான்...!''

சுவர் கடிகாரம் இவள் சிந்தனை யைக் கலைத்தது.

கொஞ்ச நேரத்தில் சூர்யா அலு வலகம் விட்டு வந்து விடுவான். வெறும் காப்பி மட்டும் அவனுக்குப் பிடிக்காது. துணைக்கு டிபன் வேண் டும். இன்றைக்குத் தோசை வார்த்துக் கொடுத்து விடலாம்.

சமையலறையில் ஒற்றைக் காலை நீட்டியவாறு அமர்ந்தாள். வெங்காயத்தைச் சின்ன துண்டுக ளாக நறுக்க ஆரம்பித்தாள். நெடி தாங்காமல் கண் பொங்கிய போது சடாலென அம்மா ஞாபகம் வந்தது.

அம்மா ஒவ்வொரு முறையும் வெங்காயம் நறுக்கும் போது தாரை தாரையாய்க் கண்ணீர் வடிப்பாள்.

புறங்கையால் துடைத்துக் கொண்டே ஒவ்வொரு முறையும் இவளிடம் விளையாட்டாய்ச் சொல் வாள் :

''இங்க பாருடி.... இந்த மாதிரி நிறைய பங்கு உங்கப்பா என்னை அழ வச்சிருக்காரு...!''

அப்பா சுபாவத்தில் கொஞ்சம் முகடுதான். ஆனால் இவளிடம் கொள்ளைப் பிரியம். அதே அப்பா தான் சூர்யாவைக் கன்னத்தில் பளாரென அறைந்தார்.

இவள் குறுக்கே விழுந்திராவிட்டால் மிகவும் அசிங்கமாகியிருக்கும்.

இவளை வார்த்தைகளால் அடித்தார்.

''ஏண்டி.... உனக்கு மேல பெரியவ இருக் கறப்ப உனக்கு எதுக்குடி இவ்வளவு அவ சரம்... அப்பன் பெரிசையே கட்டிக் கொடுக் கல்லே. நம்பளுக்கு எப்ப நடக்கு முன்னு நீயா முந்திக்கிட்டியா...?''

பதிவுத் திருமணம் செய்து கொண்டு வந்தவர் களை முன் ஹாலில் நிற்க வைத்தே பேசினார்.



மதுமிதா

அம்மாதான் சமாதானம் பேசினாள். அக்கா கூட சற்று முறைப்பாகத்தான் இருந்தாள். அவள் கவலை அவளுக்கு - சும்மாவே அவளுக்கு வந்த எல்லா வரன்களும் தட்டிக் கொண்டே போயின - இதில் தங்கைக்குக் காதல் திருமணம் என்றால் இன்னமும் சிக்கல்...

அன்றைக்குப் பார்த்ததுதான் அம்மாவை.

டாக்ஸியில் ஏறும் போது ஜன்னலில் அம்மா முகம் தெரிந்தது.

முழுவதாக ஒரு வருடம்.

இப்பொழுதெல்லாம் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வெறியாய் மாறி வருகிறது.

எதிர் வீட்டுக் கயல்விழி தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுவாள் :

''ஆமாம் குந்தவை... இந்த நேரம் மனசு அம்மா வீட்டுப் பக்கம்தான் தாவும்... அதுதான் பெண்ணுக்குச் சௌகர்யம்... உடம்பு முழுக்க ஒரு சோம்பல் படர்ந்திருக்கும். அம்மா கையால் தலை பின்னிக் கொண்டு, நினைத்த நேரம் தூங்கி, விச்ராந்தியாய் இருக்க அம்மா வீடுதான் சௌகர்யம்... பாவம் நீ... இங்க தனியா ரொம்ப சிரமப்படறே...!''

கயல் சொல்லச் சொல்ல அம்மா பற்றிய ஏக்கம்



வளர்ந்து கொண்டே போனது.

சூர்யாவின் வீட்டிற்கு இவர்கள் மேல் அவ்வளவு கோபமில்லை. ஆனால் பெரிய அளவில் பிரியமுமில்லை.

சூர்யாவின் அம்மா இரண்டு தடவை வந்து போனாள். சம்பிரதாயமாய்ப் பேசிப் போனாள். அவளிடம் அதிகம் எதிர்பார்க்க முடியாது.

அழைப்புமணி அலறியது. கை ஊன்றி எழுந்தாள். மெள்ள நடந்து போய்க் கதவு விலக்கினாள்.

அப்பா!

வயிற்றுக்குள் அமிலம் பாய்ந்தது. நிதானித்துக் கொண்டாள்.

''வாங்கப்பா... உள்ள...!''

அப்பா தயங்கினார். மென்மையாய்ச் சிரித்தார்.

நாற்காலி தட்டி நகர்த்தினாள்.

அப்பா இவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''எல்லாரும் சௌக்யமா அப்பா...? அம்மாவை அழைச்சிட்டு வரலையா?''

அப்பா சடக்கெனத் தலைகுனிந்தார். இந்த ஒரு வருடத்தில் அவர் நிறைய மாறியிருந்தார். உடம்பு இன்னும் மெலிந்திருந்தது.

''குந்தவை எப்படிம்மா இருக்கே?''

''நல்லாயிருக்கேம்பா...!''

''அவரு உன்னை எப்படி வச்சிருக்காரும்மா?''

''உங்க மாப்பிள்ளை தங்கம்பா... நல்லா பார்த்துக்கறார். நீங்க ஒதுங்கிட்டது தான்பா அவருக்குப் பெரிய குறை...!''

அப்பா மௌனமாய் இருந்தார்.

''அவர் அடிக்கடி சொல்வார்ப்பா... குழந்தை பிறந்துட்டா உங்க அப்பா கோபம் மறைஞ்சிடும்னு... அது பலிச்சிடுச்சப்பா...!''

அப்பா சங்கடமாய்ப் பேசினார்.

''எனக்கு உன் மேல கோபமில்லே குட்டிமா... கோபம் என் மேலதான். என்னோட கையாலாகாத்தனத்தின் மேல்... உன் அக்காவுக்கே கல்யாணம் பண்ணி வைக்கிற யோக்யதை இல்லை. அது கேவலமில்லையா... அத மறைக்கத்தான் கோபப்பட்டேன்...!''

''பழைய கதைய விடுங்கப்பா... அக்கா எப்படியிருக்கா?''

''ப்ச்... இருக்கா... என்னை மன்னிச்சிடும்மா...''

குந்தவை பதறினாள்.

''என்னப்பா இது... நீங்கதானே எங்க ரெண்டு பேரையும் மன்னிக்கணும்... நாங்க கொஞ்சம் அவசரப்பட்டுத்தான் நடந்துகிட்டோம்... அக்கா கல்யாணம் முடிஞ்சிருந்தா... நீங்க ஒத்துக்கிட்டிருப்பீங்க... எந்த தகப்பனும் இதைத்தான் செய்ய முடியும்...!''

அப்பா தலையசைத்தார்.

வாசலில் ஸ்கூட்டர் சப்தம் கேட்டது.

சூர்யாதான்.

அப்பா சடக்கென எழுந்து கொண்டார்.

அப்பாவைப் பார்த்த சூர்யா ஆச்சர்யமானான்.

''வாங்க...!'' - தயக்கமாய்க் கூப்பிட்டான்.

''உட்காருங்க...!''

அப்பா அமர்ந்தார்.

''சௌக்யம்தானே...!''

சூர்யா தலையசைத்தான்.

''குந்தவை உண்டாயிருக்கிற விஷயம் ரெண்டு நாளுக்கு முன்னாலதான் தெரியும்... இந்தக் கோபம், வருத்தம் எல்லாவற்றையும் விட பாசம்தானே முக்கியம். குந்தவையோட அம்மா ஒவ்வொரு ராத்திரியும் நா தூங்கிட்டதா நினைச்சிக்கிட்டு அழுவா... நானும் இவ்வளவு நாளா கல்லா இறுகிக் கிடந்தேன்... நீங்க மறுதடவை வந்திருந்தாக்கூட நான் மனசு மாறியிருந்திருப்பேன். ஏதோ வறட்டுப் பிடிவாதம்...!''

அப்பா நீளமாய்ப் பேசினார்.

''எங்களுக்கும் ஆசைதான். உள்ளுக்குள்ள ஒரு பயம்... குந்தவை உங்கள் மகள்தான்.. ஆனால் அவள் என் மனைவியானபின் யாரிடமும் - அவள் தகப்பனாரிடம் கூட - அவமானப்படக் கூடாது என்று என் மனசுக்குள் ஒரு வைராக்கியம்.. அதான் வரலை...!''

அப்பா சூர்யாவையே பார்த்துக் கொண்டிருந்தார். மெள்ள நகர்ந்து போய் அவன் விரல்களைப் பற்றிக் கொண்டார்.

''சார்! நான் புதுசா 'சிவகாமியின் சபதம்'னு ஒரு நாவல் எழுதியிருக்கேன், வேணுமா?''

''வேண்டாங்க. இதே பேர்லே அமரர் கல்கி ஏற்கெனவே எழுதிட்டார்!''

''என்ன சார் இது அக்கிரமம்? போன வருஷம் 'பார்த்திபன் கனவு'ன்னு ஒரு நாவல் எழுதினேன். அதுக்கும் இப்படித்தான் சொன்னாங்க!''

– கே. இந்து குமரப்பன்



சக்கரவர்த்தித் திருமகன்

11. கொழுமுகத்துக் குழந்தை

மிதிலாபதியான ஜனகர் மிகவும் நல்ல முறையில் தம் தேசத்தை ஆண்டு வந்தார். தசரத சக்கரவர்த்திக்குப் பழைய மித்திரர். தசரதன் புத்திரப் பேறுக்காகச் செய்த பெரிய யாகத்திற்கு அரசர்களை அழைத்த போது மிதிலா பதியிடம் தூதர்களை அனுப்ப வேண்டாம். மந்திரிகளே நேரில் போய் அழைக்க வேண்டும் என்று தனி உத்தர விட்டான். ஜனகர் ஒரு ராஜ ரிஷி; சூரர்; எல்லா சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்றவர்; வேத வேதாங்கங்களில் நிபுணர்; நியமம் காத்தவர்; பிரம்ம ஞானி; கடமைகளைச் செய்தே சித்தி யடைவதைப் பற்றி அருச்சுனனுக்கு எடுத்துச் சொல்லும் போது கண்ணன் ஜனகரைச் சிறந்த உதாரணமாக எடுத்துச் சொன்னான். சீதையை மகளாகப் பெறத் தகுதி கொண்ட மகான்.

ஒரு காலத்தில் ஜனக மகாராஜா, யாகம் செய்வதற்கென்று இடம் கண்டு அதைத் தாமே கலப்பை பிடித்து உழுதார். உழுது புதரும் பூண்டுமாக இருந்த பூமியைச் சமன் செய்து ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கும் போது மண் ணில் ஒரு திவ்ய ரூபமான பெண் குழந் தையைக் கண்டார். ஜனகருக்குக் குழந் தையில்லை. தரையில் புரண்டு உட லெல்லாம் மண் பூசிக் கிடந்த அக் குழந் தையைப் பூதேவியே தமக்குத் தந்த வரம் என்று மகிழ்ச்சி பரவசமாகக் கை யில் எடுத்துக் கொண்டு தம் பிரிய பார் யையிடம் சென்று, ''இதோ, நமக்குக் கிடைத்த பெருந்தனம்! யாக பூமியில் இவளை அடைந்தேன். இவளே நம்மு டைய சந்தானம்!'' என்று குழந்தை யைப் பட்டமகிஷியிடம் தந்தார். அவ ளும் அக் குழந்தையைத் தான் பெற்ற குழந்தையாகவே வளர்த்தாள். கம்பர் பாடியிருக்கும் மிக அழகிய பாட்டை இவ்விடம் சொல்லலாம்.

பூதேவியை நாம் நேரில் பார்க்க முடியாது. உழுகின்ற கொழு முகத்தில் தன் அபார அழகைப் பச்சைப் பயிர்களின் வாயிலாகக் காட்டுகிறாள். உதிக்கும் சூரியனுடைய கிரணங்க ளுக்குச் சமமான பொலிவுடன் பூமா தேவி முளைக்கும் பயிர்களில் விளங்கு கிறாள். உள்ளே மறைந்து நிற்கும் தேவி யின் முழு அழகு நமக்குத் தெரியாது. அந்த பூதேவியே சீதையாக வெளிப்

ராஜாஜி

பட்டு ஜனகருடைய கலப்பைக் கொழு முகத்தில் தோன்றினாள். கடலைக் கடைந்த போது அமுதத்தோடு எழுந்த ஸ்ரீதேவியும் சீதையின் அழகைக் கண்டு வியந்து தொழுவாள் என்று பாடுகிறார் :

உழுகின்ற கொழுமுகத்தின்
  உதிக்கின்ற கதிரின்ஒளி
பொழிகின்ற புவிமடந்தை
  உருவெளிப்பட் டெனப்புணரி*
எழுகின்ற தெள்ளமுதோ(டு)
  எழுந்தவளும்இழிந்(து)
                ஒதுங்கித்
தொழுகின்ற நன்னலத்துப்
  பெண்ணரசி தோன்றினாள்.

(* புணரி - பாற்கடல்)


பாட்டில் மொழிச் சிக்கனம் அதிகம். பொருளோ மிக அடர்த்தி. இது கம்பர் பாட்டுகளின் தனிப் பண்பு.

தெய்வீகக் குழந்தையான சீதையை மிகவும் அன்போடு ஜனகரும் அவர் பிரிய பத்தினியும் வளர்த்தார்கள்.

விவாகத்துக்குரிய காலம் வந்தது. இவளை விட்டுப் பிரிய வேண்டுமே என்று ஜனகர் துக்கப்பட்டார். தெய்வீகப் பெண்ணாகிய இவளை மனைவியாகப் பெறக்கூடிய அரச குமாரன் யார் என்று யோசித்து ஒருவரையும் காணாமல் வெகு காலம் ஜனகர் வருத்தப்பட்டார். அரசர்கள் பலர் வந்து கேட்டார்கள். ஆனால் அவர்களில் யாரும் சீதையைப் பெறும் தகுதி வாய்ந்தவராக ஜனகர் மதிக்கவில்லை. இந்த நிலையில் ஒருநாள் ஜனகர் நிச்சயித்தார், முன்னொரு சமயம் மகாயாகம் செய்த காலத்தில் வருணன் ஜனகருடைய யாகத்தைப் போற்றி ருத்திர வில்லையும் இரண்டு அம்பறாத் தூணிகளையும் ஜனகருக்குத் தந்திருந்தான். அந்த வில்லானது மிகப் புராதன தெய்வீகமான வில். அதைச் சாமான்ய ஜனங்கள் கையால் அசைக்கக் கூட முடியாது. எடுத்து, வளைத்து நாண் ஏற்றுவதைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை! முடியாத காரியம். ஜனகர் அரச சமூகத்துக்குத் தெரியப் படுத்தினார் :

''என்னிடமிருக்கும் வருண தேவப் பிரஸாதமான இந்த ருத்திர வில்லை எந்த அரச குமாரன் வளைத்து நாண் பூட்டுகிறானோ அவனுக்கு என் மகள் சீதையைத் தருவேன். இதுவே என் மகளுடைய சுயம்வர நிபந்தனை.''

சீதையின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டு, பல அரச குமாரர்கள் வந்து, வில்லைப் பார்த்து விட்டு ஒன்றும் செய்ய முடியாமல் திரும்பி விட்டார்கள்.



12. சகரன்

விசுவாமித்திரர் தலைமையில் புறப்பட்ட ரிஷிகள் மாட்டு வண்டிகளில் சாமான்கள் ஏற்றி மிதிலை நோக்கி வடக்கே சென்றார்கள். ஆசிரம வனத்திலிருந்த பட்சிகள், மான்கள் எல்லாம் கூடவே சென்றதைப் பார்த்து விசுவாமித்திரர் அவற்றை அன்புடன் அங்கேயே நிறுத்தினார்.

சோணா நதிக்கரை சேர்ந்ததும் மாலையாயிற்று. அங்கே அந்த இரவு தங்கினார்கள். அந்த இடத்தின் பூர்வ கதைகளை ராஜ குமாரர்களுக்கு முனிவர் சொல்ல இரவு சந்தோஷமாகக் கழிந்தது. அடுத்த நாள் காலை எழுந்து ஒரு நதியைத் தாண்டினார்கள். ஜலம் ஆழமில்லாமலிருந்தபடியால் நடந்தே தாண்டினார்கள். பிறகு நடுப் பகலில் புண்ணியநதி கங்கைக் கரையை அடைந்தார்கள். எல்லோரும் கங்கையில் ஸ்நானம் செய்து தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் முன்னோர்களுக்கும் தர்ப்பணம் செய்தார்கள். அங்கேயே ஆகாரம் சமைத்து, பூஜை செய்து, போஜனம் செய்தார்கள். எல்லோரும் விசுவாமித்திரரைச் சுற்றி உட்கார்ந்தார்கள்.

''முனிவரே! கங்கையின் வரலாற்றைச் சொல்ல வேண்டும்'' என்று ராஜ குமாரர்கள் ஆவலுடன் கேட்க, முனிவரும் சொல்லப் புகுந்தார்.

பர்வத ராஜனான ஹிமவானுக்கும் மனைவி மனோரமைக்கும் அபூர்வ லட்சணம் பொருந்திய இரண்டு புதல்விகள் இருந்தார்கள். மூத்தவளாகிய கங்கா தேவியை தேவர்களின் பிரார்த்தனையின் பேரில் ஹிமவான் தேவலோகத்துக்கு அனுப்பிக் கொடுத்தான். இளைய குமாரி உமை, சங்கரனை விரும்பி, பெரும் தவம் புரிந்தாள். பரமசிவனும் திருப்தியடைந்து உமாதேவியைத் தன் பத்தினியாகப் பெற்றான். ஹிமவானுடைய இரு பெண்களும் இவ்வாறு மிகப் புண்ணிய நிலையை அடைந்தார்கள். எல்லாப் பாவங்களையும் போக்கும் கங்கா தேவி தேவலோகத்திலேயே இருந்து வந்தாள்.

அயோத்தியாதிபதி சகரன் என்ற மகாராஜன் வெகுநாள் சந்தானமில்லாமல் வருந்தினான். கேசினி, சுமதி என்ற தன் இரு பத்தினிகளையும் அழைத்துக் கொண்டு இமயமலையில் தவம் செய்தான்.

பிருகு முனிவர் அவன் தவத்தைக் கண்டு மகிழ்ந்து சந்தானம் பெறுவாய் என்று வரம் தந்தார்.

''வீரனே! நீ மகத்தான சந்தானம் பெறுவாய். அபார கீர்த்தியும் பெறுவாய். உன் பத்தினிகளில் ஒருத்தி ஒரு புத்திரனைப் பெறுவாள். உன்னுடைய வம்சம் அவன் வழியாகப் பெருகும். இன்னொரு பத்தினி பலவான்களான அறுபதினாயிரம் புத்திரர்களைப் பெறுவாள்'' என்று ஆசிர்வதித்தார்.

ராஜபத்தினிகள் முனிவரைப் பணிந்து ''சுவாமி, யாருக்கு ஒரே மகனும் யாருக்குப் பல குமாரர்களும் தந்தீர்?'' என்று கேட்டார்கள்.

''ஒருத்தி பெறும் ஒரே மகன் வழியாகத்தான் வம்சம் பெருகும். மற்றவள் பெறும் அநேக புத்திரர்கள் பலவான்களாக வளர்ந்து பெரும் புகழ் பெறுவார்கள். உங்களில் யாருக்கு எது இஷ்டம்?'' என்று முனிவர் கேட்டார்.

மக்களின் ஆசை பலவிதம். கேசினியானவள் வம்சம் வளர்க்கும் ஒரு மகன் தனக்குப் போதும் என்றாள். சுமதியோ பலமும் கீர்த்தியும் அடையப் போகும் அநேக மக்களைப் பெற விரும்பினாள். ''அப்படியேயாகட்டும்'' என்று முனிவர் சொன்னார். வரம் தந்த முனிவரை வலம் செய்து வணங்கி இரு மனைவிமாருடன் அரசன் மிக்க திருப்தியோடு நகரத்துக்குத் திரும்பிப் போனான்.

கொஞ்ச காலங் கழிந்தபின் கேசினியானவள் அசமஞ்சன் என்ற மகனைப் பெற்றாள். சுமதி வடிவமற்ற ஒரு பிண்டத்தைப் பிரசவித்தாள். அந்தப் பிண்டம் பொரிந்து அதனின்று முனிவர் சொன்னபடி அறுபதினாயிரம் குழந்தைகள் உண்டானார்கள். குழந்தைக் கூட்டத்தைத் தாத்திரிமார்கள் நன்றாகப் பாதுகாத்து வளர்த்தார்கள்.

காலக்கிரமத்தில் குழந்தைகள் யௌவன நிலையடைந்து மிக்க அழகும் வீரமும் கொண்ட ராஜ குமாரர்

[illegible] தமிழ்நாட்டில் மட்டும் நகரப்படுவது எவ்வளவு இருக்கக்கூடும் என நினைக்கிறீர்கள்? கிட்டத்தட்ட ஐம்பது சதவிகிதம் : 27,000 முதல் 30,000 டன்கள் வரை!- கைலாஸ்

களாக வளர்ந்தார்கள். மூத்த மனைவியின் குமாரன் அசமஞ்சன் வளர வளரக் குரூர குணத்தையடைந்தான். ஊரிலுள்ள குழந்தைகளைப் பிடித்து ஆற்றில் மடுவில் போட்டு அவை தத்தளித்துச் சாவதைக் கண்டு சிரித்துச் சந்தோஷப்படுவான்.

இவ்வாறு பைத்தியம் பிடித்துப் போன அசமஞ்சனை ஜனங்கள் மிகவும் வெறுத்தார்கள்.

அரசனுடைய அனுமதியுடன் அவனை ராஜ்யத்தை விட்டே துரத்தி விட்டார்கள். ஆனால் அவனுக்குப் பிறந்த மகன் அம்சுமான் என்ற ராஜகுமாரன் மிகவும் குணசாலி. எல்லோருடைய அன்பையும் நன்மதிப்பையும் சம்பாதித்தான். சீலமும் அறிவும் பொருந்தியவனாக வளர்ந்தான்.

சகரன் ஒரு பெரும் அசுவமேத யாகம் செய்ய நிச்சயித்ததின் பேரில் அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அசுவமேத யாகத்துக்குரிய குதிரையை ராஜகுமாரன் அம்சுமான் காத்து வந்தான். ஆனால் இந்திரன் ராக்ஷச வேஷம் பூண்டு குதிரையைக் கொண்டு போய் விட்டான்.

அசுவமேத யாகங்களைத் தடை செய்வது தேவர்களுடைய வழக்கம். இந்திரனுடைய பதவிக்குப் போட்டி ஏற்படும் என்கிற பயம். ஆயினும் தடைகளைத் தாண்டி யாகம் நடைபெற்று விட்டால் யாகத்தில் தரப்படும் அவிசுகளைத் தேவர்கள் பெற்றுத்தான் போக வேண்டும். அதன் மேல் யாகத்தைச் செய்தவன் யாகத்தின் பலனை அடைவான்.

குதிரை காணாமல் போயிற்று என்று அரசனுக்குத் தெரிந்ததும் மிக வருத்தப்பட்டு எப்படியாவது கண்டு பிடித்துக் குதிரையைக் கொண்டு வர வேண்டுமென்று சுமதி புத்திரர்களான அறுபதினாயிரம் ராஜ குமாரர்களையும் பூமண்டலம் முழுதும் தேடி வரும்படி அரசன் அனுப்பினான். "யாகக் குதிரையை இழந்ததால் யாகம் கெடுவதுமல்லாமல் சம்பந்தப்பட்ட எல்லோரையும் பாவம் சுற்றிக் கொள்ளும். ஆகையால் போய், திருடிப் போனவன் எங்கே மறைத்து வைத்திருந்தாலும் கண்டு பிடித்துக் குதிரையைக் கொண்டு வர வேண்டும்" என்று சகரன் வீரமும் சௌகரியமும் கொண்ட தன் புத்திரப் பெருங்கூட்டத்துக்கு உத்தரவிட்டான்.

சகர புத்திரர்களும் மிக உற்சாகமாக உலகமெல்லாம் சுற்றி அட்டகாசம் செய்தார்கள். எங்கும் கிடைக்கவில்லை.

பூமியை வெட்டித் தோண்டினார்கள். எங்கும் வெட்டித் தள்ளி வெட்டித் தள்ளிப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கினார்கள். "நீதான் திருடினாய்! நீதான் திருடினாய்!" என்று எங்கேயும் எல்லோரையும் குற்றம் சாட்டி, அதட்டி, தொந்தரவு செய்து வந்தார்கள். எங்கு தேடியும் அகப்படவில்லை. இதை அரசனிடம் சொன்னார்கள். துயரப்பட்ட அரசன், "நீங்கள் பூமியைப் பிளந்து, பாதாளம் புகுந்து பாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

தந்தை சொற்படி சகர குமாரர்கள் பூமியைத் தோண்டி பாதாளம் புகுந்து, பூமியைத் தாங்கி நின்ற யானைகளை நமஸ்கரித்து விட்டு, யாகக் குதிரையைத் தேடிச் சென்றார்கள். அங்கே வடகிழக்கு மூலையில் ஓரிடத்தில் தங்கள் குதிரையைக் கண்டார்கள்.

மகாவிஷ்ணுவாகிய கபிலர் அங்கே யோகத்திலிருந்தார். பக்கத்தில் யாகக் குதிரை தன் பாட்டுக்குப் புல் மேய்ந்து கொண்டிருந்தது. இதைக் கண்டதும், சகர புத்திரர்கள் "இதோ திருடன், குதிரையைத் திருடி விட்டுத் தவவேஷம் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்" என்று கோபாவேசமாய்க் கபிலர் மேல் பாய்ந்தார்கள்.

யோகத்திலிருந்த கபில முனிவர் கண்களைத் திறந்து "ஹூம்" என்று மூச்செறிந்தார். ராஜ புத்திரர்கள் அறுபதினாயிரம் பேரும் அங்கேயே சாம்பற் குவியலாய்ப் போனார்கள். இந்திரன் குதிரையைக் கொண்டு போய்ப் பாதாளத்தில் அங்கே ஒளித்து வைத்திருந்தான். அதனால் இவ்விதம் சகர புத்திரர்கள் சாபமடைந்து மாண்டார்கள்.

(தொடரும்)



"சார், நான் உங்க தொகுதியிலிருந்து வர்றேன்.."

"எதுக்குச் சுத்தி வளைக்கப் பேசறே? எந்தத் தொகுதின்னு 'பளிச்'சுன்னு சொல்லேன்."

– எம். அசோக்ராஜா





சிரிப்பே செல்வம்

பக்கத்தில் சிரிக்கும் சிறுமியின் புகைப்படத்தை எடுத்தவர் சி. ராஜகோபால்.

Photographic Society of America என்ற அமைப்பு உலகெங்கிலும் உள்ள தொழில் ரீதியான புகைப்படக் கலைஞர்களின் 'மெக்கா' வாகக் கருதப்படுகிறது. இந்த அமைப்பின் 'Honorary Fellowship' ராஜகோபாலுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த கௌரவத்தைப் பெறும் முதல் இந்தியரும் ஆசியருமான ராஜகோபால் பெங்களூர் National Aeronautical Laboratory யில் பணியாற்றி ஓய்வு பெற்ற விஞ்ஞானி. கடந்த முப்பது ஆண்டுகளாக சர்வதேச புகைப்படக் கண்காட்சிகளில் பங்கேற்று வருகிறார். 67 வயது ராஜகோபாலுக்குச் சொந்த ஊர், தமிழ் நாட்டிலுள்ள காட்டாங்குளத்தூர்!

– பெத்தகாலூரான்

* ராஜகோபால்



பிரதோஷ காலம் – பிரதோஷ வரலாறு

சுக்கில பக்ஷம், கிருஷ்ண பக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்திலும் வருகின்ற திரயோதசி திதியில் சூரியாஸ்தமனத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும், பின் மூன்றே முக்கால் நாழிகையுமாய் உள்ள காலமே பிரதோஷம் எனப்படும்.

பிரதோஷ வரலாறு

தசமி திதியன்று (பத்தாவது நாள்) நடந்தது:

தசமி திதி அன்று ஒருவேளை உண்டு இந்திராதி தேவர்களும் அசுரர்களும் மந்திரகிரியை மத்தாகவும், வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக் கயிறாகவும் அமைத்தார்கள். அசுரர்கள் தலைப்புறமாகவும்; தேவர்கள் வால்புறமாகவும் நின்று அமிர்தம் கடையலானார்கள். கடைந்தபோது வாசுகி நஞ்சை உமிழ்ந்தது. கடலில் இருந்தும் நஞ்சு தோன்றியது. வாசுகி கக்கிய ஆலமும் கடலில் தோன்றிய ஆலமும் ஒன்று சேர்ந்து ஆலாலம் எனப் பேர் பெற்றது. அக்கொடிய விடத்தை வானவர்கள் விருப்பப்படி அடியவர்களாகிய அமரர்கள் உய்ய அமுதம் போல் சிவபெருமான் உண்டருளினார்.

ஏகாதசி திதியன்று (பதினோராவது நாள்) நடந்தது:

சிவபெருமான் சொற்படி தேவர்கள் மறுபடியும் பாற்கடலைக் கடைந்தார்கள். ஏகாதசியன்று பகல் முழுவதும் பட்டினி இருந்து இரவு முழுவதும் உறக்கமின்றி பாற்கடலைக் கடைந்தார்கள்.

துவாதசியன்று நடந்தது (பன்னிரண்டாவது நாள்):

துவாதசியன்று அதிகாலையில் அமிர்தம் கிடைத்தது. அதைத் தேவர்கள் பகிர்ந்து உண்டார்கள். அந்த மகிழ்ச்சியில் தேவர்கள் துவாதசியன்று ஆடியும் பாடியும் பொழுதைப் போக்கினார்கள்.

திரயோதசி அன்று நடந்தது (பதிமூன்றாம் நாள்):

தேவர்கள் சிவபெருமானை முன்னாலே வணங்காது பொழுது போக்கிய தங்கள் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானிடம் பணிந்து தங்கள் குற்றத்தை மன்னித்தருளுமாறு வேண்டினார்கள்.

பரம கருணாநிதியாகிய சிவபெருமான் மகிழ்ந்து தேவர்களுக்கு அருள் புரியத் திருவுளம் கொண்டு கயிலையில் அன்று மாலை (4.30 மணி முதல் 6.00 மணி வரை.) பிரதோஷ வேளையில் தவத்திரு முன் இருந்த ரிஷப தேவரின் இரு கொம்புகளுக்கிடையில் நின்று அம்பிகையைக் காணத் திருநடம் செய்தருளினார். தேவர்கள் அதனைத்

தரிசித்து சிவபெருமானை துதி செய்து வணங்கினார்கள். அது முதல் திரயோதசி திதியன்று மாலை நேரம் பிரதோஷம் ரஜனீ முக வேளை பாபத்தை போக்கும் நேரம்.

பிரதோஷ பூஜாபலன்:

சிவ மூர்த்திக்குரிய பல வித விரதங்களில் தலையாயது. இவ் விரதத்தை அநுஷ்டிப்போர் துன்பங்களினின்றும் நீங்கி இன்பத்தை எய்துவர்.

பிரதோஷ மகிமை:

சிவபெருமான் பிரதோஷ காலத்தில் இடப தேவரின் இரு கொம்புகளுக் கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டு திருநடம் புரிந்தார். அப்போது சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினார். பிரம்ம தேவர் தாளம் போட்டார். இலட்சுமி தேவி பாடினாள். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், யக்ஷர்கள், கின்னர்கள், திசை பாலர்கள் முதலிய அனைவரும் வந்து பிரதோஷ காலத்தில் இறை வனை வழிபடுகிறார்கள்.

கண்ணாடி அணிந்த மனிதனின் கார்ட்டூன் வரைந்த கேஷ் கவுண்ட்டர்.

வாடிக்கையாளர் கவுண்ட்டரில் டோக்கன் வைத்து சூட்கேஸ் திறக்கிறார்.

''எத்தனை ரூபாய்?''

பணத் துவாரத்தில் தலையை வைத்து லக்ஷ்மி நாராயணன் கேட்கிறான்.

''பத்து லட்சம்.''

சூட்கேஸின் பதில் மிதப்பாய் வருகிறது.

''அவ்வளவு பணம் இங்கே தர முடியாது சார்.''

''பின்னே?''

''ராத்திரி ரெண்டு மணிக்குப் பல்லாவரம் பாழடைஞ்ச பங்களாவுக்கு வாங்க. அங்க தர்றேன்.''

கழுத்துச் சங்கிலி குலுங்கச் சிரித்து, பணத்தை வாங்கி சூட்கேஸ் நகர்கிறது.

''லக்ஷ்மிநாராயணன்!''

இடது கையில் ரிசீவர் வைத்து பாலக்காடு அக்க

8

வுண்டண்ட் குரல் கொடுக்கிறார்.

''டெலிபோன்.''

சிரித்துக் கொண்டே லக்ஷ்மிநாராயணன் அவர் மேஜைக்கு வருகிறான். கரகரத்த குரலில் வந்த செய்தியில் அவன் முகம் மாறி விடுகிறது. உடன் புறப்பட்டு வருவதாகச் சொல்லி போனை வைக்கிறான்.

''சார்!''

பாலக்காடு அக்கவுண்டண்ட் நிமிர்ந்து பார்க்கிறார்.

''மாமனார் சீரியஸ்னு வீட்டுக்கு அவசரத் தந்தி வந்திருக்காம் சார்.''

''ஓ!''

''நான் உடனே போகணும்...''

''ஓ!''

''தாங்க்யூ சார்.''

உற்சாகத்தில் கிள்ளி விட்டு வெளியே ஓடுகிற லக்ஷ்மிநாராயணனைப் பாலக்காடு அக்கவுண்டண்ட் செயலற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

பீச் ஸ்டேஷன் எதிரே நடைபாதை. அழுக்குத் துணிகள், அலுமினியப் பாத்தி



ரங்கள், அனாதை போல் குழந்தைகள். சற்று தள்ளி ஒருவன் ஸ்டவ் பின் விற்கிறான். பல அளவுகளில் ஸ்கூரு டிரைவர் கிடைக்கிறது. சோன்பப்படி பாக்கெட் ஒரு ரூபாய். சுரங்கப் பாதை நுழைவில் வாசனை காட்டி

பாப்கார்ன் கனவுகள்

ம.வே.சிவகுமார்

ஊதுபத்தி விற்கிறார்கள். அருகிலேயே நண்பன் சுரேஷ் பாபு காத்து நிற்கிறான்.

''டேய், கவுண்டரைப் பார்த்துக்கோ. டெலிபோன் பண்ணினதுக்கு தாங்க்ஸ்.''

வேகமாய் வார்த்தைகள் உதிர்த்து, லக்ஷ்மிநாராயணன் ஹவாய் செருப்பில் படியிறங்கி, சுரங்கப் பாதை இருளில் மறைகிறான்.

தெருக்கதவு சைக்கிள் மோதித் திறக்கிறது. சப்தத்தில் விஜயலக்ஷ்மி வாசலுக்கு ஓடி வருகிறாள். இவ்வளவு தீவிர முகத்தில் அவள் லக்ஷ்மிநாராயணனைப் பார்த்ததில்லை. போன சுருக்கில் அவன் வந்திருக்கிற காரணமும் புரியவில்லை. எனினும் எது குறித்தும் அவள் அவனை எதுவும் கேட்பதில்லை. அவனைக் காண்கிறபோதெல்லாம் மலர்கிற முகத்தைத் தவிர அவள் வேறு விதம் இருக்கிறதில்லை.

''நகரு!''.

லக்ஷ்மிநாராயணன் பரபரப்பாய் வீட்டிற்குள் நுழைகிறான். மறைவிடத்திலிருந்து சாவி எடுக்கிறான். பெரும் பொக்கிஷம் போல் அவன் சேர்த்திருக்கிற சினிமா புத்தகங்கள். அலமாரியைத் திறந்து வேண்டிய புத்தகங்களைத் தேடாமல் எடுக்கிறான். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆல்பம். பராசக்தி முதல் முதல் மரியாதை வரை. சிவாஜி தத்துவப் பாடல்கள். சிவாஜி காதல் பாடல்கள். பராசக்தி, கட்டபொம்மன், திருவிளையாடல். குருநாதர் சிவாஜி வசனங்கள்.

''ஏய், அந்த ரூம்லே இருக்கேன். சரியா ரெண்டு மணிக்குக் கதவைத் தட்டு.''

அறைக் கதவை லக்ஷ்மிநாராயணன் உள்பக்கமாய்த் தாளிட்டுக் கொள்கிறான். 'மொண மொண' என்று அவன் படிக்கிற சப்தம் கேட்கிறது. வெளியே திடீரென்று காற்று பலமாய் வீசுகிறது. அடித்துக் கொண்ட ஜன்னலுக்கு விஜயலக்ஷ்மி கொக்கி மாட்டித் திரும்புகிறாள். சைக்கிள் மணி ஒலித்துத் தபால்காரர் வருகிறார். வளைகாப்பு, சீமந்தம் சாக்கிட்டு, சேர்ந்து இருக்கலாமென்று முன்னாலேயே புறப்பட்டு டில்லியிலிருந்து அவன் பெற்றோர்கள் வரவிருக்கிறார்கள்.

பீச் ஸ்டேஷன் அலுவலகம். புதிய பவுடரில் வியர்த்து லக்ஷ்மிநாராயணன் நுழையும் போது மணி மூன்றரையாகி விடுகிறது. அவனும், இன்னொருவனுமாக ஸ்கூட்டர் பில்லியனில் பூக்கடையில் நல்ல மாலை வாங்கிக் கொள்கிறார்கள். வழியில் வேறு ஒருவன் வீட்டில் டேப்ரெக்கார்டரில் நாதஸ்வரம். அவன் கேட்டுக் கொண்டதற்கிணங்க இதழ்க் கடையில் சிரித்துக் கொண்டு கரண்ட் அக்கவுண்ட் வனஜா வரவேற்றுக் கோலம் போடுகிறாள். அலுவலக நாற்காலிகள் இடம் மாறுகின்றன.

''கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கங்க சார்.''

லக்ஷ்மிநாராயணன் பாலக்காடு அக்கவுண்டண்ட் நாற்காலியை எடுத்துக் கொள்கிறான்.

''எப்படியிருக்கார் உங்க மாமனார்?''

''அவருக்கென்ன? குண்டுக் கட்டையாட்டம் நல்லாயிருக்கார். சென்னையை நோக்கிக் கடும் புயல் - இந்த வாரத்துலே வர்றாராம்.''

''ஏதோ சீரியஸ்னு சொன்னேளே?''

''எப்போ?''

யாரோ கூப்பிட லக்ஷ்மிநாராயணன் நாற்காலியுடன் நகர்கிறான். அவன் சென்ற திசையை இன்ன உணர்ச்சியென்று எளிதில் புலப்படாத முகத்துடன் பார்த்தபடி, பாலக்காடு அக்கவுண்டண்ட் மேஜையருகே நின்று கொண்டு கையெழுத்துகளைத் தொடர்கிறார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன். அவர் என்றைக்குச் சொன்ன நேரம் தவறியிருக்கிறார்? மணி ஐந்து. வெளியே நீலநிற அம்பாஸிடர் நிற்கிறது. நாதஸ்வரம் ஒலிக்கிறது. வரவேற்பில் கவர்ச்சி சிரிப்பும், கற்கண்டுத் தட்டுமாய் வனஜா நிற்கிறாள். டிரைவர் சுற்றி ஓடி வந்து கதவு திறக்க, சூழ்நிலையில் பரபரப்பு கம்பீரமாய் இறங்குகிறது. தலையசைவில் அனைவரையும்

பார்த்து விட்டுப் படியேறுகிறது. கதவருகில் நுழையும் போது யாருக்கும் தெரியாமல் லக்ஷ்மிநாராயணன் அவரைத் தொட்டுப் பார்க்கிறான். எதேச்சையாய்த் திரும்பிப் பார்த்து, சிவாஜி நாற்காலிக்கு நடக்கிறார். வங்கி அதிகாரிகள் தத்தம் பதவிகளில் அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறார்கள். முன்வரிசை நாற்காலியில் முண்டியடித்து இடம்பிடித்து, லக்ஷ்மிநாராயணன் மேடையை ஆர்வமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

சிறப்பு விருந்தினரை வரவேற்று முடிந்ததும் கல்கத்தா நாடகப் போட்டியின் முக்கியத்துவங்களைப் பற்றி வங்கியின் ஸ்போர்ட்ஸ் கிளப் செயலாளர் விளக்குகிறார். அகில இந்திய அளவில் நடக்கிற போட்டி. மொத்தம் பதினாறு நாடகக் குழுக்கள் பரிசுக்கு மோதுகின்றன. வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு மொழிகளில் நாடகங்கள். சென்ற ஆண்டு போட்டி பரோடாவில் நடந்தது. அதற்கு முந்தைய ஆண்டு ஜெய்பூர். மொத்தம் பதினோரு நாட்கள். தேசிய ஒற்றுமை மற்றும் ஊழியர்கள் பரஸ்பரம் அறிமுகம் பெறுகிற வாய்ப்பு. ஊர் சுற்றிப் பார்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும். இன்னும் யாராவது தேர்வுக்குப் பெயர் கொடுக்க வேண்டும் என்றால் சீக்கிரம் கொடுத்து விடுங்கள்.

சென்னையின் அனைத்துக் கிளைகளிலிருந்தும் கூடியிருக்கிறார்கள். மேடையில் கூல்டிரிங்க்ஸ் வருகிறது. முதலில் விருந்தினர் குடிக்கட்டுமென்று மற்றவர்கள் காத்திருக்கிறார்கள். தேர்வுக்கான முதல் பெயர் வாசிக்கப்படுகிறது.

''சுரேஷ் பாபு.''

பெயர் கொடுக்கிற போது யோசனையில்லை. எதிரே சிவாஜியைக் கண்டதும் எழ முடியாமல் கால்களில் பலகீனம் வந்து விடுகிறது. எல்லோரும் சொல்லியும், மறைந்து குரல் கொடுத்தும், பின்னால் இருந்து தள்ளியும் அசையாதவனாக, தேர்விலிருந்து விலகிக் கொள்வதாக சுரேஷ் பாபு அறிவித்து விடுகிறான்.

''செல்வகுமார்.''

லேசாய்த் தலையசைத்து சிவாஜி பார்க்கிறார்.

''செல்வகுமார்.''

மேலும் ஒருமுறை அறிவிப்பு செய்தும் அந்தப் பெரிய ஹாலில் எங்குமே செல்வகுமாரைக் காணவில்லை. ''ஆள் அப்ஸ்காண்டு''. கும்பலில் யாரோ குரல் கொடுக்கிறார்கள். சிவாஜி ஓரமாய்ச் சிரித்துக் கொள்கிறார்.

''லக்ஷ்மிநாராயணன்.''

சிவாஜி நேராய்ப் பார்க்கிறார். முன் வரிசையில் லக்ஷ்மிநாராயணன் எழுந்து கொள்கிறான்.

''ஆல் தி பெஸ்ட்!'' கீச்சுக் குரலில் வனஜா கத்துகிறாள். ''அப், அப்'' என்று அனைவரும் ஆரவாரிக்கிறார்கள். சிரித்துக் கொண்டே நடந்து வந்து சிங்கத்தை நமஸ்கரித்து லக்ஷ்மிநாராயணன் ஆரம்பிக்கிறான்.

''நீதிமன்றம். பல விசித்திரமான வழக்குகளைச் சந்தித்திருக்கிறது. கோவிலில் புகுந்தேன். பூசாரியைத் தாக்கினேன். குற்றம்சாட்டப்பட்டிருக்கிறேன் இப்படியெல்லாம். கோவிலில் புகுந்தேன். கோவில் கூடாது என்பதற்காக அல்ல. கோவில் கொடியவர்களின் கூடாரமாகி விடக் கூடாதேயென்பதற்காக. பூசாரியைத் தாக்கினேன். பக்தி, கூடாதென்பதற்காக அல்ல. பக்தி, பகல் வேஷமாகி விடக் கூடாதேயென்பதற்காக.''

பிசிறில்லாத கணீர் குரல். உணர்ச்சி பாவங்களிலும் பிழையில்லை. கடகடவென அடுக்கு வசனங்கள் மேலும் உருண்டு வருகின்றன. அனைவரும் சிவாஜியின் முகத்தையே பார்க்கிறார்கள். கீழுதட்டைக் கடித்துக் கொண்டு சிவாஜி இறுக்கமாய்க் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

''தம்பி!''

லக்ஷ்மிநாராயணன் திரும்புகிறான்.

''இங்கே வா.''

லக்ஷ்மிநாராயணன் நடந்து வந்து வெட்கமாய் அருகில் நிற்கிறான். அவன் முதுகில் தட்டிக் கொடுத்து சிவாஜி கணேசன் தொடர்கிறார்.

''நல்லாத்தான் இருந்துது. ஆனா மிமிக்ரி வேற. நடிப்பு வேற. தெரிஞ்சுதா?''

லக்ஷ்மிநாராயணன் அறிந்து கொண்டதாய்த் தலையசைக்கிறான்.

''போ.''

மேற்கொண்டும் பெயர்கள் படிக்கப்படுகின்றன. அவரவர்களும் தைரியம் பெற்று வெளிப்படுகிறார்கள். அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க சிவாஜி கரகரத்த குரலில் வசனம் பேசுகிறார். தேர்ந்தெடுத்த பதிமூன்று பெயர்களை விளையாட்டுச் செயலாளர் படிக்கிறார். லக்ஷ்மிநாராயணன் பெயர் அதில் பதிமூன்றாவதாக வருகிறது.

''எலேய்.''

புறப்படுகிற சமயம் லக்ஷ்மிநாராயணனை சிவாஜிகணேசன் அருகில் அழைக்கிறார்.


''ஒழுங்கா இருக்கணும். தெரிஞ்சுதா?''

அவன் தோளைப் பிடித்துக் கொண்டு நடக்கிறார். கார் வரைக்கும் அனைவருமே அவருடன் நடக்கிறார்கள். காலத்தை வென்ற கலைஞன் காரினுள் கையசைக்கிறான். மகிழ்ச்சியில் நிறைந்த கண்களில் பதிலுக்கு லக்ஷ்மிநாராயணன் கையசைக்கிறான். நீலநிற அம்பாசிடர் கார் புறப்படுகிறது.

(தொடரும்)

சேற்றுப்புண் குணமாக : வேப்பெண்ணெயைக் காய்ச்சி சிறிய வெள்ளைத் துணியில் நனைத்து விரல்

தங்கால் மௌனகுரு ஸ்வாமிகள் ஆஸ்ரமம்



மயிலை குருஜி சுந்தரராம் ஸ்வாமிகள்

அன்னதான கைங்கர்யத்துக்கு அன்புக் காணிக்கை வேண்டுகோள்

குருதேவ் தர்ம ஸ்தாபனம் பக்தர்கள் குழுவினரால் தங்கால் மௌன குரு ஸ்வாமிகள் ஆஸ்ரமத்தில் மாதா மாதம் பௌர்ணமி பூஜை சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் நோக்கங்கள் :

1. ஆகம விதிப்படி பற்பல யாக யக்ஞங்கள் செய்தல்
2. நாட்டு மக்களுக்கு நல்ல பக்தி உணர்வு ஏற்படக் காவடி உற்சவங்கள் நடத்துதல்.
3. மாதாமாதம் பௌர்ணமி பூஜையில் பங்குகொள்ளும் எல்லா பக்தர்களுக்கும் (5000 நபர்களுக்கு மேல்) இரண்டு வேளையும் பசி தீர ருசியான அன்னப்பிரசாதங்கள் வழங்குதல்.

இந்த நல்ல நோக்கங்கள் தொடர்ந்து நடைபெறவும், மற்றும் பல தெய்வீக நற்காரியங்களைத் தொடங்கிச் செய்யவும் அனைவரின் ஆதரவை வேண்டுகிறோம்.

ஆன்மிக அன்பர்கள் தங்கள் அன்புக் காணிக்கைகளை வழங்க வேண்டிய முகவரி :

மயிலை மாமுனிவர் குருஜி சுந்தரராம் சுவாமிகள்,
குருதேவ் தர்ம ஸ்தாபனம் (REGD)
பக்தர்கள் குழு,
ஜெயராம் விலாஸ்,
235, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

மேற்படி நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு (*Under 80 G of Income Tax Act*) உண்டு.
அரசு ஆணை - நம் 80G & 1146 (36)/83

தங்கால் ஆஸ்ரமம் பொங்கல் மலர் - குருபூஜை
மலரில் விளம்பரங்கள் செய்ய வேண்டுகிறோம்.
முன்/பின் பக்க அட்டை விளம்பரக் கட்டணம் ரூ 5000.
முழுப் பக்க விளம்பரக் கட்டணம் ரூ 1000.
அரைப் பக்கம் ரூ 500 - கால் பக்கம் ரூ 250

உங்கள் செல்வம் :

நேர்மை ~~ஹர்ஷத்~~ மேத்தாக்களுக்கு...

பங்கு மார்க்கெட்டில் புகுந்து விளையாடி ஹர்ஷத் மேத்தா ஆகிவிட வேண்டும் என்று ஆசைப்படவும் வேண்டாம்; மாட்டிக் கொண்டு முழிக்கவும் வேண்டாம். ஆனால் நம்மிடம் உள்ள சேமிப்பை அளவாக முதலீடு செய்து நேர்மையான முறையில் லாபம் காண்பதில் ஒரு தவறுமில்லையே. இதோ, பங்கு மார்க்கெட்டுக்கு மூலதனம் கோரி வரும் சில சிறந்த நிறுவனங்கள் :

SQUARE D SOFTWARE LTD

கம்ப்யூட்டர்களில் பல்வேறு நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப புரோகிராம் தயாரித்து அளிக்கும் நுணுக்கம் பொதுவாக "ஸாஃப்ட் வேர்" எனப்படுகிறது. இதனை அமெரிக்கா போன்ற மேல்நாடுகளில் தயாரிக்க ரொம்ப செலவு ஆவதால் இந்தியா போன்ற நாடுகளை அணுகுகிறார்கள். சென்னையில் தொடங்கப்படும் இந்தப் புதிய நிறுவனம் முழுக்க முழுக்க "ஸாஃப்ட் வேர்" ஏற்றுமதிக்காகவே உருவாகிறது. உலகப்புகழ் பெற்ற IBM கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துகிறது. இவற்றை இயக்கும் மூளை இந்தியனுடையது! பல பெரிய புள்ளிகள் இந்த நிறுவனத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். முகமது குலாம் கௌஸ், தினேஷ் டால்மியா, எம்.ஜி. பாலசுப்பிரமணியன், போன்றோர். இதில் முதலீடு ஆகும் ரூ.40 கோடியில் சரிபாதி அயல்நாட்டுக் கடன். பாக்கி 20 கோடிக்குப் பங்குகள் விநியோகமாகின்றன. நிறுவனத்தைத் தொடங்குகிறவர்கள் ரூ. 10 கோடி எடுத்துக் கொள்ள மீதமுள்ள பத்து கோடி பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொன்றும் பத்து ரூபாய் பெறுமானமுள்ள பங்குகள். இரண்டாவது ஆண்டிலிருந்து நிறுவனம் நல்ல லாபம் சம்பாதிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

INDO NIPPON FOODS LTD

இந்தப் புதுதில்லி நிறுவனம் பாலிலிருந்து பால் பவுடர் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. "மது" என்ற வியாபாரப் பெயரில் விநியோகமாகும் இந்த பால் பவுடர், வட மாநிலங்களில் ரொம்பப் பிரசித்தி. நிறுவனம் தற்போது வெண்ணெய் தயாரிப்பிலும் பால் விநியோகத்திலும் விரிவாக்கம் செய்ய எண்ணுகிறது. டில்லி அருகே மூன்றரைக் கோடி ரூபாயில் உருவாகிறது இதற்கான வசதிகள். நிர்வாகம் ஏற்றுக் கொள்ளும் மூலதனப் பங்கு போக, பொது மக்களுக்கு ஒவ்வொன்றும் ரூ. 10 பெறுமானமுள்ள 30 லட்சம் பங்குகளை வழங்குகிறது. நன்றாக நடந்து வரும் இந்த நிறுவனத்தின் எதிர்காலமும் சிறப்பானதே.

BIRLA CENTURY FINANCE LTD

இதன் சேர்மன் பிரபலமான பி.கே. பிர்லா. பிர்லா குருப் நிறுவனங்களில் செஞ்சுரி டெக்ஸ்டைல்ஸ், கேசோராம் இண்டஸ்ட்ரீஸ் முதலியனவும் அடங்கும். கல்கத்தா நிறுவனமான செஞ்சுரி ஃபைனான்ஸ், பொது மக்களிடம் டெபாசிட் பெற்று, சிறந்த முறையில் முதலீடு செய்து நல்ல லாபம் கண்டு வருகிறது. புதிதாகத் தொடங்கப்படும் நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் வழங்கி, அவற்றின் பங்குகள் விநியோகத்தையும் நிர்வகிக்கும் துறையில் தற்போது விரிவாக்கம் செய்ய எண்ணுகிறது. இதற்காகத் திரட்டப்படும் ரூ. 25 கோடி மூலதனத்தில் நிர்வாகத்தில் உள்ளவர்களே பத்து கோடிக்குப் பொறுப்பு ஏற்க, ஏற்கெனவே பங்குதாரர்களாக உள்ளவர்களுக்கு ஒதுக்கப்பட்டது போக, மீதம் ஆறு கோடி பொது மக்களுக்கு விநியோகமாகிறது. பிர்லா குருப் கம்பெனிகள் திறம்பட நிர்வகிக்கப்படுகின்றவை என்பதையும், லீசிங் - நிதி நிறுவனங்கள் பொதுவாகவே நன்றாக நடந்து வருவதையும் நோக்க, இதில் முதலீடு ஆகும் நம் பணம் வெகு சீக்கிரமே குட்டி போட்டுப் பன்மடங்காகப் பெருகும் என்பதில் சந்தேகமில்லை.

TIMEX WATCHES LTD

இன்று மக்களிடையே ரொம்பப் பிரபலமடைந்துள்ள TITAN கைக்கடிகாரத் தொழிலகம் டாட்டா குருப் நிறுவனங்களில் ஒன்று. TITAN கடிகார நிறுவனம்தான் இப்போது TIMEX நிறுவனத்தையும் தொடங்குகிறது. இவை இரண்டுமே குவார்ட்ஸ் கடிகாரங்களைத்தான் தயாரிக்கும் என்றாலும் புதிய TIMEX நிறுவனம் உலோகக் கேஸ்களுக்குப் பதில் பிளாஸ்டிக் கேஸ்களைப் பயன்படுத்தும். இதன் மூலம் கைக் கடிகாரங்களை இன்னும் மலிவான விலையில் ஏராளமாக விற்பனை செய்ய முடியும். அமெரிக்கக் கூட்டுறவுடன் டில்லி அருகே உருவாகும் புதிய TIMEX நிறுவனத்துக்கு முதலீடு ரூ. 83 கோடி. இதில் 36 கோடி பொது மக்களுக்குப் பகுதி அளவில் பங்குகளாக மாற்றிக் கொள்ளக்கூடிய டிபன்சர்களாக வழங்கப்படுகிறது. ஒவ்வொன்றும் ரூ. 140 பெறுமானமுள்ள டிபன்சர்களில் ரூ. 40 க்கு இரண்டு பங்குகள் கிடைக்கும். அதாவது ஒவ்வொரு பங்குக்கும் ரூ. 10/- கூடுதல் விலை ஆகிறது. மீதம் ரூ. 100 ஏழாவது ஆண்டு முடிவில் திருப்பித் தரப்படும். இதற்கு வட்டி உண்டு. TITAN பங்குகள் ஏற்கெனவே மார்க்கெட்டில் ரூ. 100 க்கு விலை போகின்றன என்பதைப் பார்க்க, புதிய TIMEX நிறுவனப் பங்குகளும் கணிசமாக மதிப்பில் உயரும் என எதிர்பார்க்கலாம்.

- வி. கோபாலன்

சார்மினார் சானல் :

●● 'அயோத்தியில் கர சேவா ஆரம்பித்தால் இங்கே நரபலி தொடங்கும்' என்ற வதந்தி ஹைதராபாத்தை பீதியில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் வெறும் புரளி என்று கூறி, மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காகக் காவல் துறை கமிஷனர் ஓர் அமைதி ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்தார். கடந்த நவம்பர் 25 அன்று சார்மினாரில் ஆரம்பித்த இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பள்ளிச் சிறார்களும் கலந்து கொள்ளும்படி வற்புறுத்தப்பட்டார்கள். பரீட்சை நேரமாதலால் அவர்களுக்கு இது மிகவும் இடைஞ்சலாக இருந்தது.



* மதுவின் தீமைகள் பற்றிய உரையைக் கேட்பதற்குக் கூடியுள்ள பெண்கள்.

முதல்வரின் அறிவிப்பு: கலெக்டர்களுக்கு அதிர்ச்சி!

●● ஆந்திராவில் சாராயத்தை எதிர்த்து ஒரு பெரிய இயக்கமே கிளம்பியிருப்பது தெரியும். அந்த இயக்கம் நெல்லூரில் - ஒரு சிறு கிராமத்தில் - பெண்களால் ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுக்குத் தூண்டுகோலாக இருந்தது அரசாங்கம் நடத்திய எழுத்தறிவு இயக்கப் பாட நூலில் இடம் பெற்றுள்ள ஒரு கதை. 'சீதம்மா கதை' என்ற தலைப்பிலான அக் கதை : குடிகாரக் கணவன்மார்களிடம் அடிபட்டு, நொந்து போன கிராமத்துப் பெண்கள் சீதம்மா என்ற படித்த பெண்ணிடம் ஆலோசனை கேட்கிறார்கள். எல்லாப் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து போராடினால் மதுக் கடைகளை மூடச் செய்து விடலாம். நமக்குள் ஒற்றுமையும் பொறுமையும்தான் முக்கியம் என சீதம்மா கூறுகிறாள். அவள் தலைமையில் அவர்கள் ஒன்றுபட்டுத் தங்கள் ஊரில் மதுக்கடைகளை மூடச் செய்கிறார்கள்; ஆண்களின் மனத்தை மாற்றி நேர்வழிப்படுத்துகிறார்கள்.

இக் கதையின் தூண்டுதலால் சிறிய அளவில் ஆரம்பித்த இயக்கம் இன்று ஆந்திர அரசையே ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறது.

பார்த்தார் விஜயபாஸ்கர ரெட்டி; 'அக்ஷர ஜோதி' (எழுத்தறிவு இயக்கம்) பாட நூல்களை ஆராய்ந்து 'சீதம்மா கதை' போன்ற 'தூண்டி விடும்' பகுதிகளை நீக்கும்படி கலெக்டர்கள் மாநாடு கூட்டி அறிவித்தார்.

கலெக்டர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

●● 1984 இல், 'சாராய வருமானம் இன்றி சர்க்கார் நடத்த முடியாது' எனக் கூறிய என். டி. ராமராவோ இப்போது சாராய விற்பனைக்குத் தடை கோரிப் போராடும் பெண்களை ஆதரிக்கிறார்; சாராயத்துக்கு எதிராக மேடையேறி முழங்கி வருகிறார்! அவரது பழைய கொள்கையை இன்றைய காங்கிரஸ்காரர்கள் சுட்டிக் காட்டினால், 'நான் ஆட்சிக்கு வந்தால் மது அருந்துபவர்களையும் விற்பவர்களையும் கட்சியிலிருந்தே நீக்கி விடுவேன்' என்கிறார். 'அப்படிச் செய்தால் தெலுங்கு தேசக் கட்சியில் யாருமே மிஞ்ச மாட்டார்கள்' எனக் காங்கிரஸ்காரர்கள் கேலி செய்கிறார்கள்!

- ஸ்ரீப்ரியன்



* தட்டிக் கேட்கத்தான்.....



* சட்டம் பேசுகிறார்....



* பதிலடி கொடுக்கிறார்....



* நாளை ஜனாதிபதியானால்....

● சாந்தன், கடலூர்.

? அரசு ஆஸ்பத்திரியில் ஆண் குழந்தை பிறந்தால் லஞ்சம் இருநூறு ரூபாய், பெண் குழந்தை பிறந்தால் லஞ்சம் நூற்றி ஐம்பது ரூபாய்தான். ஏன் இப்படி? பெண் எனில் இதிலும் இளப்பமா?

! ''நான் பெண்ணாக இருப்பதுதான் எனக்கு மிகப் பெரிய இடையூறு'' என்று பேசும் முதல்வரே நமக்கு இருக்கும் போது இதையெல்லாம் எப்படி எதிர்த்துப் போராடுவது என்று நம் பெண்கள் மனம் தளர்ந்து விடாமலிருந்தால் நாளடைவில் நிலைமை சீரடையலாம். ஆணுக்கு இணையாகப் பெண்ணுக்கும் லஞ்சம் வாங்கப்படலாம்!

● ஜி. செல்வராஜன், வெங்கலம்.

? ''தட்டிக் கேட்கத்தான் தோழமைக் கட்சி'' என்கிறாரே மூப்பனார்; இதே நியாயந்தானே மத்திய அரசு விஷயத்தில் அ.தி.மு.கவுக்கும்?

! ரொம்ப சரி. தட்டிக் கேட்கத்தான் வேண்டும். அதனால்தான் கொள்கை அளவில் ஓரளவுக்கு ஒன்றுபட்டிருக்கும் கட்சிகள் மட்டுமே கூட்டணி அமைக்க வேண்டும் என்பது. சுயநல, சந்தர்ப்பவாத கூட்டணிகள் நன்கு செயல்பட முடியாமல் போவதும் இதனால்தான். தேர்தல் வரை தேன் நிலவு; பிறகு தேள் கொட்டு நிலவு என்றாகி விடுகிறது.

அன்று வழிமொழிந்த 'ஜெ' இன்று எதிர்க்கிறாரே?

● ஏ. சுகுமார், காட்டுக்காளூர்.

? அன்று ராவின் புதிய பொருளாதாரக் கொள்கைகளை வழி மொழிந்த ஜெயலலிதா இன்று எம்.பிக்களை விட்டு எதிர்க்கச் சொல்வது பற்றி....?

! கொள்கை அரசியல் இங்கு இல்லை; தனி நபரின் சுயநலத்துக்கு ஏற்ப விருப்பு வெறுப்புக்கள் அவ்வப்போது மாறுபடுகின்றன என்பதற்கு மற்றொரு எடுத்துக் காட்டு.

● ஆர். முரளி, ஓசூர்.

? ''மசூதியை இடிக்க வேண்டாம்; பக்கத்திலேயே ராமர் கோயில் கட்டிக் கொள்ள அனுமதிக்கலாம்'' என்று முதல்வர் பேசியதில் என்ன தவறு?

! ''மசூதியை இடிக்க மாட்டோம்'' என்று உறுதி மொழி இல்லாத போது இவர் இப்படிப் பேசியதுதான் தவறு. 'அந்த உறுதி மொழி கிடைத்தால் கரசேவையை அனுமதிக்கலாம்' என்று ஜெ பேசியிருந்தால் வரவேற்கலாம்.

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? 'அயோத்தி விவகாரத்தில் உச்ச நீதி மன்ற உத்தரவுகளை மத்திய அரசு உறுதியுடன் பின் பற்றும்' என்று பிரதமர் சட்டம் பேசுகிறாரே, ஷா பானு வழக்கின்போது மத்திய அரசின் இந்த உறுதி எங்கே உலா போயிருந்தது?

! மத்திய அரசு என்பது ஒன்றானாலும் சர்வ வல்லமை படைத்த பிரதமர் பொறுப்பில் அன்று இருந்தவர் வேறாயிற்றே! அன்று நடந்த தவறு இன்று மறுபடி ஒரு தவறு நடக்க முன்னுதாரணமாகக் கூடாது.



* பெண்ணாய்ப் பிறந்ததே.....

● தி.மா. தமிழழகன், திருச்சி.

? ஜெ + பாரதிய ஜனதா கூட்டணி ஏற்படுமா?

! ஏற்படலாம்; நிலைக்குமா? காங்கிரஸோடேயே ஒத்துப் போக முடியாத ஜெ., எப்படி பி.ஜே.பிக்கு ஈடு கொடுப்பார்? அ.இ.அ.தி.மு.க என்பதில் அண்ணா, திராவிடம் என்ற இரண்டையும் நீக்கி விட்டால் கூட்டணி நீடிக்கலாம்.

● ஜெ. பிரகாஷ், சென்னை.

? ஸ்பிக் ஊழல் விவகாரத்திற்கு உடன்பட மறுத்ததைத் தொடர்ந்து தன் மீது திராவகம் வீசப்பட்டதாக சந்திரலேகா கூறியுள்ளாரே?

! 'ஸ்பிக் விவகாரம் சந்திரலேகா சம்மந்தித்த விஷயமே' என்று நிரூபிக்க முயன்று அரசு கடிதங்களை 'லீக்' செய்ய, 'இல்லை, அக்கடிதங்கள் என் நிலையை வலுப்படுத்தவே செய்கின்றன' என்று சந்திரலேகா பதிலடி கொடுக்க, 'அப்பன் குதிருக்குள் இல்லை' கதையாகி விட்டது, லீக் விவகாரம்!

● வி. சோழன், செம்போடை.

? 'பட்ஜெட்டில் அளித்த சலுகையால் பங்குச் சந்தை மோசடி நடந்ததாகக் கூறும் வெங்கடராமன், தாம் ஜனாதிபதியாக இருந்தபோது அதைச் சுட்டிக் காட்டாமல் வாய் மூடிக் கொண்டிருந்தேன்' என்று கலைஞர் வினா எழுப்பியுள்ளது பற்றி....?

! ஜனாதிபதி பதவிக்கென்று சில மரபுகள் இருக்கின்றன. கலைஞரே நாளை ஒரு வேளை ஜனாதிபதியானால் கூட வாய் மூடிக் கொண்டிருக்க வேண்டியதுதான். தனிப்பட்ட முறையில் சில அறிவுரைகளை வழங்க முடியுமே தவிர நிர்ப்பந்திக்க இயலாது. கட்சியின் கொள்கைக்கேற்பத் தான் ஆட்சி நடக்கும்.

● முத்து செழியன், முத்துப்பேட்டை.

? பதினோரு பேர் ரத்தக் கையெழுத்து இட்டுக் கடிதம் போட்டதால் பயந்து விட்டாரா? பிறகு ஏன் பிரபு புகைப்படமும் புகழ் பாடலும்?

! மாற்றுக் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பது பண்பாடு. அதனால் அதை ஒப்புக் கொண்டு விட்டதாகாது. நமது ஆட்சேபணை, சிறந்த படம் என்று கருதப்பட முடியாத சின்ன தம்பிக்கு ஏகப்பட்ட விருதுகளை அரசு அமைத்த தேர்வுக்குழு அள்ளி வழங்கியிருப்பதற்குத்தான். பிரபுவிடம் நமக்கு விரோதமில்லை. அவரது கலைத் திறன் முழுமையாகப் பிரகாசிக்கும்படி சின்னதம்பி அமையவில்லை.

● எம். பிரபு, குமராட்சி.

? உங்களால் ஜீரணிக்க முடியாத செய்தி எது?

! தென் ஆப்பிரிக்காவில் நிற வெறி மறைந்து புது அத்தியாயம் ஆரம்பமாகி விட்டதாக எண்ணினோம். இப்போது கறுப்பர்கள், இந்தியர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருத ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது அதிர்ச்சிதான்!

● எஸ்.ஏ. யூசுப், அதிராம்பட்டினம்.

? ஆஸ்கார் விருதுக்கு தேவர்மகன் அனுப்பப்பட்டதில் உங்களுக்கு உடன்பாடு இல்லை போல் தெரிகிறதே?

! தாராளமாக அனுப்பட்டும். ஆஸ்கர் பெறுவது அவ்வளவு சுலபமல்ல என்பதைத்தான் சுட்டிக் காட்டினேனேயொழிய பெற்று விட்டால் என்னைவிட அதிகமாக மகிழப்போகிறவன் யாருமில்லை.

● கே. பட்டு, கும்பகோணம். ❑

? அயோத்தி பிரச்னை பற்றி 'ஜெ' வெளியிட்ட கருத்துக்கு இ. காங்கிரஸ் மேலிடம் ஆதரவும் தமிழக இ. காங்கிரஸ் எதிர்ப்பும் தெரிவித்த விசித்திரம் குறித்து?

! இ. காங்கிரஸ் மேலிடம், அக்கட்சி பலவீனமாக உள்ள நாடாளுமன்றத்தின் அருகிலேயே இருப்பதும், தமிழக காங்கிரஸ் தொலைவில் இருப்பதும் ஒரு காரணம். மற்றொரு காரணம், தொலை தொடர்பு சாதனங்களில் எவ்வளவோ முன்னேற்றமிருந்தும் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் குறைவாக இருப்பது.

● ஆர். செல்வராணி, மங்கைநல்லூர்.

? முப்பத்தெட்டாவது பிறந்த நாள் விழா காணும் பிரபாகரனுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

! ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் உங்களைச் சரித்திரம் போற்றும் விதமாக அமைதிக்கு அடிகோலுங்கள்.

● பா. புஷ்பா முருகேசன், சின்னமனூர்.

? இந்தியன் எக்ஸ்பிரஸ் வெள்ள நிவாரணப் பணி குறித்து....?

! மக்களின் வரிப்பணத்தில் முழுப்பக்க விளம்பரம் போட்டு, துயர் துடைப்பிலும் தனி நபர் பிரபை வளர்க்கும் அரசாங்கம் இன்றி, அமைதியாகவும் அடக்கமாகவும் ராமகிருஷ்ணா மிஷன் மூலம் நடக்கும் பணி. இதில் தில்லு முல்லுவுக்கும் இடமில்லை. எனவே நன்கொடைகளைத் தாராளமாக வழங்கலாம்.

● அ. ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.

? வீரப்ப மொய்லியாவது தமிழகத்துக்குக் காவிரி நீரைத் திறந்து விட சம்மதிப்பாரா?

! காவிரியைப் பொறுத்தமட்டில் மொய்லி, பங்காரப்பாவை விட ஸ்ட்ராங்காரப்பா!

● அ. பழனி, சென்னை.

? சச்சின்?

! ஓராயிரம் ஆச்சர்யக்குறிகளை எழுதிக் கொள்ளுங்கள்!

* சொல்ல விரும்புவது



* ஸ்ட்ராங்காரப்பா!



* இளமையின் ஆயிரம்



❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கே. பட்டு,
20,-B, அண்ணாநகர் விரிவு,
கும்பகோணம் - 612 001.

தற்கொலைப் படை தேவைதானா...?

◆ ஓவியர்களின் கைவண்ணத்தில் மெயின் கார்டுகேட் படமும் தெப்பக்குளம் ஏரியா படமும் அருமை! அங்கு தினமும் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளை மிக அழகாக, கலை நயத்துடன் படம் பிடித்துக் காட்டுகின்றன படங்களும் கட்டுரைகளும். அதிக சிரமமும் சிரத்தையும் எடுத்துக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது திருச்சி நகரச் சிறப்பிதழ்.
சென்னை - 41, அவைநாயகன்.

◆ திருச்சி 2வது தொகுதி எம்.எல்.ஏ. குமாரி மாலா அவர்களின் பேட்டியில் தரப்பட்டிருந்த பதில்கள் யாவும் மழுப்பலே என்றால் மிகையில்லை. வெகு நாட்களுக்குப் பிறகு தொகுதி மக்கள் சிலர் மாலாவைச் சந்தித்திருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் கல்கி அட்டையே. அதற்காக கல்கிக்கு நன்றி.
திருச்சி - 17, பி. பப்லுபரத்வாஜ்.

◆ 22.11.92 கல்கி இதழில் 'செந்தமிழ்ப் பாட்டு' விமர்சனத்தில் ஒரு தவறு; பேசத் திக்குகின்ற பலர் நன்கு பாடும் திறனைப் பெற்றிருக்கக் கூடும். தரமுள்ள பத்திரிகையில் இடம் பெறும் இது போன்ற தவறுகள் தன்னம்பிக்கை கொண்ட திக்குவாயர்களைத் தளர்வடையச் செய்யாதா?
சென்னை - 41,
எஸ்.வி. ராமமூர்த்தி.

◆ இயற்கைச் சீற்றத்தால் துக்கம் ஆட்கொண்ட மக்களைக் கவனிக்காத 'தூக்கம் ஆட்கொண்ட' அரசின் மெத்தனத்திற்குச் சரியான பாடம் கற்பிக்கும் வகையில் அமைந்தது தலையங்கம். மக்களின் ஒட்டுமொத்த ஆதங்கத்தையும், எண்ணங்களையும் அப்படியே பிரதிபலித்தது!
சிதம்பரம், அரங்க வெங்கடேசன்.

◆ ''அன்பு உள்ளத்தின் வீர (ம்மாவின்) சாகசங்கள்!'' கட்டுரை படித்தேன். குடத்தினுள் விளக்காய் இருந்த சாதனையாளரை ஊரறிய ஒளிவீச வைத்துள்ளீர்கள். அவர் அன்னை தெரசாவுக்குச் சரியான வாரிசாகக் கொள்ளக் கூடியவர். அவரது பணி சிறக்க அரசும் மக்களும் உறுதுணையாக நிற்க வேண்டும்!
நாச்சியாபுரம்,
இரா. வேங்கடாசலம்.

◆ திருச்சியின் முக்கியப் பிரச்னைகளான, பேருந்து நிலையம், காந்தி மார்க்கெட்டு போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாகப் பிரசுரித்துள்ளீர்கள். பாராட்டுக்கள்!

ஆனால் எங்கள் பகுதியான தேவராய நகரைப் பற்றிக் குறிப்பிடும் போது கோரையாறு தண்ணீரை வீட்டு கனெக்ஷன் கொடுக்க வில்லையே என்று நாங்கள் வருந்துவதாகப் பிரசுரித்துள்ளீர்கள். உண்மையில் எங்கள் கோரிக்கை காவிரி நீரை எங்கள் பகுதிக்கும் கொண்டு வரவேண்டும் என்பதே. மேலும் காலனி வீடுகளின் நடுப்பகுதியில், வெகு ஆழமான (bore) போர் செய்து நீரைப் பொது இடங்களுக்கு விநியோகம் செய்வதால், போரின் அருகிலுள்ள வீடுகளின் கிணறுகள்/போர்கள் வற்றுவதோடு, கோடையில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுவது சர்வ சாதாரணமாய் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, தற்காலிகமாக அந்த போர் நீரையாவது ஒவ்வொரு வீட்டிற்கும், கொடுக்கலாமே என்றுதான் கூறினோம்.
திருச்சி - 21, எஸ். சியாமளா.


◆ 'சின்ன தம்பி' சிறந்த படமா? பிரபு சிறந்த நடிகரா? என்பது குறித்து பலருக்கு வெவ்வேறு அபிப்ராயங்கள் இருப்பது மறுக்க முடியாதது. ஆனால் ரசிகர்கள் தங்கள் அபிப்ராயத்தை எடுத்துச் சொல்ல இரத்தக் கையெழுத்து அவசியமா? பிரபுவுக்கு ஒரு வேண்டுகோள். உங்களுக்குத் தற்கொலைப் படை என்ற அமைப்பு தேவைதானா? சிந்தியுங்கள்.
சென்னை - 40, தெ.த. இராமன்.

◆ அய்க்கண்ணின் 'ரிப்பன்' சிறுகதை நெருக்கடியான அந்த நிலையிலும் ஒரு ஏழைத்தாயின் இயற்கையான பெருந்தன்மையை உணர்த்தி, மனத்தை நெகிழ வைத்தது.
மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.

◆ ''காதலுக்கு ஒரு பொய்'' என்ற கதை மூலம் ஆசிரியர் ஒரு நல்ல திருப்பத்தைக் காட்டியுள்ளார். பெண்களின் விருப்பங்களை மதிக்க வேண்டும் என்பதை அழகாக அறிவுறுத்தியுள்ளார். இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான கதைகளை வரவேற்கிறோம்.
பெங்களூர் - 41, மாலதி மஹாதேவன்.

◆ ''சத்தியம் அது நிச்சயம்'' படத்துக்கு 29.11.92 தேதியிட்ட கல்கி இதழில் விமர்சனம் எழுதி ஆதரித்தமைக்கு மிக்க நன்றி. விமர்சனத்தின் இறுதியில் ''...ஏதோ கொஞ்சம், கொஞ்சம் தென்படுகிற நேர்மையாளர்களையும் பயமுறுத்துவதுபோல் அல்லவா இருக்கிறது!'' என்று முடித்துள்ளீர்கள்.. ஒரு நல்ல மனிதன் சந்தர்ப்ப சூழ்நிலையால் பாதைமாறும்போது படும் வேதனைகளையும், அந்தச் சூழ்நிலையில் அவனால் தாக்குப்பிடிக்க முடியாததையும், சத்தியமூர்த்தி பாத்திரம் மூலமாகக் காட்டிய நான், உண்மையின் பாதையில் இருந்து மாறாத தெருப்பாடகன் (ஹாஜா ஷெரீப் பாத்திரம்) திரைப்பட இசை அமைப்பாளராக உயர்வதையும் காட்டியுள்ளேன். ஆகவே நல்ல மனிதர்களை, இன்றைக்கும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சத்தியசந்தர்களைப் பயமுறுத்தும் நோக்கம் எனக்குச் சிறிதளவும் இல்லை எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என் திரைப்படம் ஒரு எச்சரிக்கை விளக்குதான். நல்லவர்களால்தான் இன்னமும் உலகம் திசைமாறாமல் சுழன்று கொண்டிருக்கிறது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன் நான்.
சென்னை - 28, தி. துரைராஜ்
திரைப்பட இயக்குனர்.


சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு இதுவரை கிடைத்திராத ஓர் அரிய வாய்ப்பு!
ஸ்ரீபெட் வாட்டர் பாட்டில் மற்றும் சபரிமலை பிரசாதம் கொண்டுவர உடையாத. அழகான 220 மி.லி. பெட் ஜார் - இரண்டும் சேர்ந்து விசேஷ சலுகை விலையில்.
ரூ 25/- மட்டுமே!
சிறப்புத் தள்ளுபடி விலையில்
ShriPET
ஸ்ரீபெட்
ஜார்கள்-பாட்டில்கள்
சபரிமலை பக்தர்களுக்கு ஒரு உற்ற துணை!
உடையாதது - உணவுத் தரம் வாய்ந்தது
சுகாதாரமானது.
இச்சலுகை ஸ்டாக் உள்ளவரை மட்டுமே. இச்சலுகையில்லாமலும் மேற்கண்ட பொருள்கள் கிடைக்கும்.
SHRIRAM GROUP COMPANY'S
MADRAS
ஸ்ரீபெட்
ஸ்ரீராம் நிறுவனத்தின் தரமான தயாரிப்பு
விநியோகிஸ்தர்கள்: ஸ்ரீராம் சேல்ஸ் இன்டர்நேஷனல்.
AAA/SSI/92/21



ஜேம்ஸ் வாட் கதை எனக்கு ஸ்கூல்ல சொன்னாங்க. கெட்டிலைப் பார்த்துக்கிட்டு நேரத்தை வீணடிச்சதுக்காக ஜேம்ஸ் வாட்டைப் பெரியவங்கல்லாம் தெரியாத்தனமா திட்டினாங்களாம். இப்போ மட்டும் என்ன.... சின்னவங்களைப் பெரியவங்க திட்டிக்கிட்டே தான் இருக்காங்க. நீ லெட்டர்ல எழுதினது போல விஷமம் பண்றதுக்குக் கற்பனையை உபயோகிச்சா இன்னும் எத்தனை திட்டு கிடைக்குமோ!

திட்டாம, கோபப்படாம யாராலயுமே இருக்க முடியாதுன்னு நினைக்கறேன். நான் கூட பப்லுவைத் திட்டறேன். எப்பவும் இல்லை, எப்பவாவது. பப்லுவுக்குத்தான் கோபிக்கக்க ஆளே இல்லை - அவளை விட எல்லாரும் பெரியவங்க. அதனால அவளைத் திட்டினா உடனே அழுதுடுவா... பெரிசா அழுவா. அப்புறம் அதுக்காக நான்தான் மறுபடியும் திட்டு வாங்குவேன்!

ஆனால் இப்பவெல்லாம் பப்லு அடிக்கடி அழறது கிடையாது. சில சமயம் நான் திட்டினா என்னைத் திருப்பித் திட்டறா! அவ அப்படி திட்டினப்போ நான் அம்மாகிட்டே சொன்னேன். அம்மா சிரிச்சுட்டுப் பேசாம இருந்துட்டாங்க. அப்புறம் அப்பா வந்தப்போ

வடக்கு வாசல் :

"ரெஹன் பசேரா":

புதுதில்லி முனிசிபல் கார்ப்பரேஷன் நடத்தும் குளிர் காலத் தாற்காலிகச் சத்திரங்களுக்கு இப் பெயர். தில்லியில் ஏழைகள் வாழும் பகுதிகளில் இப்படி 15 செண்டர்கள் நடத்தப்படுகின்றன. இதற்காக ஒரு லட்சம் கம்பளிப் போர்வைகளை 'டிரை கிளீனிங்' செய்து தயாராக வைத்துள்ளது கார்ப்பரேஷன். ஓர் இரவு படுக்க ரூ 1.50 மட்டுமே கட்டணம். கூலி வேலை செய்யும் ஏழைகள், வீடில்லா நடைபாதை மக்கள் இவர்களுக்கு இது வரப்பிரசாதம். சுமார் ஒரு லட்சம் பேர் இதனால் பலனடைந்தாலும், யாரும் இதில் 15 நாட்க

வரி எய்ப்ப-

ளுக்கு மேல் தங்க முடியாது! நிரந்தர வீடாக்கிக் கொண்டு விடுவார்களோ என்ற பயம் தான் காரணம்!

மூத்தோருக்கு ஒரு விழா :

ஏஜ்-கேர் இந்தியா என்ற ஒரு நிறுவனம் 90 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஒரு விழா எடுத்தது. மொத்தம் 50 முதியோர்கள் சிறப்பு விருந்தினர். இதில் பாதி பேருக்கு மேல் 100 வயதைக் கடந்தவர்கள்! ஒவ்வொருவருக்கும் மாலை சூட்டி ஒரு அன்பளிப்பும் கொடுக்கப்பட்டது. அன்று சிறப்பு விருந்

அன்புள்ள அலமு அத்தை,

நான் சொல்றதைப் பொறுமையாக் கேட்டுண்டார். 'நீ பட்லுவைத் திட்டலாம். அவ உன்னைத் திட்டக் கூடாதா?' அப்படின்னார். 'ஆனா ஒண்ணு, எல்லாரும் தப்புப் பண்ணாம சமத்தா இருந்தா, யாருமே யாரையுமே திட்டும்படி இருக்காது, இல்லையா?' என்று கேட்டார். 'அப்போ எல்லாரும் சிரிச்சுக்கிட்டே இருக்கலாம். அழுகைச் சத்தமே கேட்காது!'


அவர் சொன்னதை நான் யோசிச்சுப் பார்த்துக்கிட்டு இருந்தப்ப என் ஃப்ரெண்ட் வந்தான். பிரகாஷ் பெரிய பையன் - எட்டாவது கிளாஸ். அதனால் பெரிய 'புக்'கெல்லாம் அவன்கிட்டே இருக்கு. நீ ஒரு லெட்டர்ல எழுதியிருந்தியே ஸாடிலைட் - அந்த படமெல்லாம் அவன் 'புக்'கில் பார்த்தேன்.

பூமியிலேருந்து விடற சில ராக்கெட் சந்திரனை மட்டும் சுற்றி வருமாம் - பிரகாஷ் சொன்னான். அது அங்கேயிருந்து செய்திகளைப் பூமிக்கு அனுப்புமாம். ஆனால் அது சந்திரனுக்குப் பின் பக்கம், பூமியைப் பார்க்காதபடி போகிற போது எந்தப் படமோ செய்தியோ அதால நமக்கு அனுப்ப முடியாதாம். இந்தப் படத்துல இருக்கிற மாதிரி :



'இது ஏன்'னு பிரகாஷ்கிட்டே கேட்டேன். நீயே கண்டுபிடி பார்க்கலாம்னு சொல்லிட்டான். நீதான் எனக்கு ஹெல்ப் பண்ணணும் அத்தே!

உன் அன்புள்ள



பல விதம்!

வெரான நிதித் துறை இணை அமைச்சர் ராமேஷ்வர் தாகூர் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் :

1. முதியோர் பென்ஷனை 100 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்த வேண்டும், 2. ரயில் கட்டணங்களில் 50 சதவிகித சலுகை தர வேண்டும், 3. பஸ்களில் தனி இருக்கைகள், 4. முழு வருமான வரி விலக்கு, 5. நகரங்களில் முதியோர்களுக்குப் பிரத்யேக மருத்துவமனைகள்.

வரி ஏய்ப்பு - புதிய வழி!

கரன்ஜித் சிங் ஜைஸ்வால், பால், தயிர், பாலாடை, ஐஸ்கிரீம் என்று விற்றே, கோடீஸ்வரரான பெரும் புள்ளி! இவர் மீது வருமான வரிக்காரர்கள் கண் பார்வை பட, அவர்களைத் தவிர்க்க நினைத்த இவர் தமது நாயை அவர்கள் மீது ஏவி விட்டு விட்டுத் தமது வருவாய்க் கணக்குப் புத்தகங்களுடன் தப்பி ஓடி விட்டார்! இப்போது அரசாங்கம் அவர் மீது இ.பி.கோவின் ஐந்து பிரிவுகளின் கீழ் குற்றம்சாட்டியுள்ளது! ஆசாமி இன்னும் தலைமறைவுதான்! அவரது 'மில்க்ஃபுட் பிராடக்ட்' கம்பெனி கேட்பாரற்று இருக்கிறது!

– ராஜீவி நரசிம்மன்

உங்கள் பண்ணை வீடு கட்ட எங்கள் தன்னிறைவு பெற்ற பண்ணை வளாகத்தில் தேர்ந்தெடுப்பீர் ஓர் இடம் மிக எளிய நீண்ட தவணையில்



ஒரு மனைக்கான தனி அம்சங்கள் :

1. 6,000 ச.அடி இடம்
2. அதில் வீடு கட்ட 1500 ச.அடி
3. ஒவ்வொரு மனைக்கும் முள்கம்பி வேலி மற்றும் இரட்டை இரும்புக் கதவு
4. 14 உயர் விளைச்சல் கொண்ட தென்னை மரங்கள், மற்றும் மா, பலா, கொய்யா, சீதா, சப்போட்டா, மாதுளை பழ மரங்கள்.
5. 6 வருட சிறந்த பராமரிப்பு.

பண்ணை வளாகத்தில் அமையப்பெற்ற சிறப்பு அம்சங்கள் :-

1. பண்ணை வளாகத்தை சுற்றி 6 1/2 அடி உயர கண்ணாடி துண்டுகள் பதிக்கப்பட்ட கருங்கல் காம்பௌண்ட்.
2. 24 மணி நேரமும் சிறந்த பாதுகாப்பு.
3. சென்னையிலிருந்து போய் வர வாகன வசதி.
4. ரோடு மற்றும் பொது இடங்கள் நிரந்தர பராமரிப்பு.
5. நீச்சல் குளம், தங்கும் குடில், படகு சவாரி, மீன் பிடி குளம், உள் - வெளி விளையாட்டு அரங்கம், கோவில், தியான மண்டபம், குழந்தைகள் பூங்கா, குதிரை ரத வண்டி, சிறு மிருக காட்சி சாலை, கேபிள் மற்றும் ஸ்டார் டிவி, தொலைபேசி தொடர்பு, மின்சாரம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குழாய் வசதி, உணவகம், மருத்துவ வசதி, பல் பொருள் சிறப்பங்காடி, பால் நிலையம், அழகு நிலையம், இவ்வளவும் கம்பெனி பொறுப்பில் செயல்படும்.

இடம் : சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில், காஞ்சிபுரம் அருகில்

இவ்வளவும் மிக எளிய நீண்ட தவணை முறையில் அடையலாம். ரூ. 1000/- வீதம் 72 மாதங்கள், உங்கள் பெயரில் பத்திரம் பதிவு செய்யும்போது தனியாக ரூ.20000,- ஆக ரூ.92000 மட்டுமே. பிரதி மாதமும் குலுக்கல் உண்டு. குலுக்கலில் தேர்ந்தெடுக்கும் அதிர்ஷ்டசாலி மீதமுள்ள தவணைகள் செலுத்த வேண்டாம். உடனே முந்துங்கள். குறைந்த இடங்களே உள்ளன.

VHR

வீனஸ்ஹாலிடேரிசார்ட்ஸ்(பி)லிமிடெட்

147, ரங்கராஜபுரம் மெயின் ரோடு, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. தொலைபேசி - 424585.

குன்னக்குடியின் சினிமா அனுபவங்கள்!



* சினிமா அனுபவங்கள்!

●● தூர்தர்ஷன் பில்டிங் கட்டும் போதே கேமராக்களையும் சுவரோடு சேர்த்து சிமெண்ட் பூசி விட்டார்கள் போலும்.

ஆக, செவ்வாய் இரவு (மறு) ஒளிப்பரப்பான, ஜெயகாந்தனுடனான பேட்டி முழுதும், பிடித்து வைத்த பிள்ளையார் போல ஒரே ஆங்கிளில் கேமரா. ஜெயகாந்தனைத் தெரிந்தவர்களுக்கு இந்நிகழ்ச்சி தேவையில்லை. தெரியாதவர்களுக்குப் பிரயோஜனமில்லை. 'நீங்கள் எந்த மாதிரி சூழ்நிலையில் எழுதுவீர்கள்? எப்போது உங்களுக்கு 'மூட்' வரும் போன்ற கேள்விகளுக்கெல்லாம் ஜே.கே பொறுமையாகப் பதிலளிக்க வேண்டியிருந்தது!

●● இரண்டாவது சேனலில் செவ்வாய் இரவு 'தமிழக இசை மகான்கள்' என்றொரு நிகழ்ச்சி. இந்தவாரம் அருணகிரி நாதர், புரந்தரதாசர். பேட்டியளித்த குன்னக்குடி வைத்தியநாதன், அருணகிரி நாதரை டீவில் விட்டுவிட்டு, தன் சினிமா அனுபவங்கள் பற்றிய பிரசங்கம் நடத்தினார்.

●● 'வாவ்!', 'சூப்பர்!', 'அருமையிலும் அருமை!', 'பாராட்ட வார்த்தைகளே இல்லை!' - இவையெல்லாம் எதிரொலியில் இடம்பெறும் ரெடிமேட் வாசக வார்த்தைகள். 'நாடகத்தின் போது, கடிகார முள் நகராமலேயே நிற்பதன் காரணம் என்ன' என்றும், 'காபி சாப்பிடுபவர், காலி டம்ளரையே காபி டம்ளராக வைத்திருப்பதாகவும், ஒரு ரூபாய்க்குக் காபி வாங்கினால் குறைந்தா போய்விடுவீர்கள்?' என்றும் 'ரெடிமேட்' களை அவ்வப்போது 'alter' செய்வோரும் உண்டு. இவற்றுக்கான நிலைய பதில்களும் 'ரெடிமேட்'தான். ஆக்கபூர்வமான விமர்சனக் கடிதங்கள் டீவிக்கு வருவதே இல்லையா, அல்லது இவர்கள் படிப்பதில்லையா என்பது அந்த 'தில்லையம்பலத்தா'னுக்கே வெளிச்சம்!

●● பாஞ்சாலி சபதத்தில் - பீமனின் உரையை 'டப்பாங்குத்து' வடிவில் வழங்கி, வியாழன் முத்தமிழ் மன்றத்தில் பாரதியாரைப் பழிவாங்கி விட்டார்கள். இப்படி ஒரு பீமன், மகாபாரதத்தில் இருந்திருந்தால் - துரியோதனனே 'பெட்டர்' என்று கிருஷ்ண பரமாத்மாவே நினைத்திருக்கக் கூடும்.

●● ஞாயிறு மாலை - 'வெற்றிக்கு ஒருவன்'. நடிகர் திலகத்தின் தோல்விக்கு ஒரு படம்.

●● 'ஸ்திரீ' என்றொரு தொடர். சட்டபூர்வமாக, பெண்களுக்கான உரிமைகள் பற்றிய டாக்குமென்ட்ரி சமாசாரம்தான். கதை வடிவில் அமைத்து, ரசிக்கும்படி எடுத்திருக்கிறார்கள்.

●● அட! திங்கள் இரவு எட்டு மணிக்கு அன்னமாச்சாரியாரின் இரண்டு கீர்த்தனைகளை ஷோபா என்பவர் பாடினார். நரம்புகளில் மின்சாரம் பாய்ச்சும் குரல். கொஞ்சம்கூட திரடல் இல்லாத நெடுநேர உச்சஸ்தாயி சஞ்சாரம்.

●● அற்புதமாக இருந்த கடைசி இரண்டும் ஹைதராபாத் டீ.வியில் பார்த்தவை! உங்கள் வீட்டு டீ.வியைக் குடைந்து பாருங்கள். எடுத்தாலும் எடுக்கும்!

– கிச்சா



* தோல்விக்கு ஒரு படம்

விமர்சனம்

* பொறுமையாக பதில்!....



நுகர்வோர் சட்டத்தின் கீழ் டாக்டர்கள் வரலாமா?

டாக்டர்கள் கன்ஸ்யூமர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து தங்களுக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்கிறார்கள். கூடாது என்கிறார், தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்புக் குழு (திருச்சி)வின் செயலாளரான பேராசிரியர் புஷ்பவனம்.

திருச்சியிலுள்ள பிரபல கண் டாக்டர்களில் ஒருவரான ஏ. கோவிந்தராஜனும் புஷ்பவனமும் தங்கள் வாதங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்...

புஷ்பவனம் : இப்போதுள்ள கன்ஸ்யூமர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மருத்துவ சேவையிலுள்ள குறைபாடுகளும் வருகின்றன. அஜாக்கிரதையின் விளைவாக ஏற்படும் இழப்புக்கு நஷ்டஈடு கோரலாம். இதற்கு டாக்டர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு இருக்கிறது. இதைப் பற்றி ஒரு டாக்டர் என்கிற முறையில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

“வலது கண்ணுக்குப் பதிலாக இடது கண்ணில் ஆபரேஷன் செய்தால் அது “நெக்லிஜன்ஸ்” இல்லையா?”



டாக்டர் கோவிந்தராஜன் : இந்த கன்ஸ்யூமர் பாதுகாப்புச் சட்டத்தில் தனிப்பட்ட சேவை என்பது விதிவிலக்கு. அந்த விதிவிலக்கிலேயே டாக்டர்கள் வர வேண்டும். இன்றைக்கும் பல நாடுகளில் இந்த மாதிரி சட்டத்தில் டாக்டர்கள் விதிவிலக்குத்தான்.

புஷ்பவனம் : அமெரிக்காவில் மெடிகல் Malpractices சட்டம் என்றிருக்கிறது. டாக்டர்கள் தங்களது அஜாக்கிரதையினால் ஏற்படும் விளைவுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும். தட்டிக் கேட்பதனால் நோயாளிகளுக்குப் பயன்விளையும். இதுதான் சட்டத்தின் நோக்கம். இப்போது கூட திருச்சி டாக்டர் ஒருவர் கான்ஸர் இல்லாத பெண்மணிக்கு கான்ஸர் என்று வைத்தியம் பார்த்ததனால் ஏற்பட்ட பக்கவிளைவுகளுக்கு நஷ்டஈடு கேட்டு வழக்குத் தொடுத்துள்ளோம்.

டாக்டர் : டாக்டர்தான் தவறு செய்தார் என்று எப்படிக் கூற முடியும்? சோதனை ரிப்போர்ட்டில் தவறு நேர்ந்திருக்கலாம். சோதனை செய்யாமலிருந்தால் அதையும் கவனக்குறைவு என்று குற்றம் சாட்ட வாய்ப்புண்டு. என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஒரு கண் டாக்டர். கண் தெரியவில்லை என்றால், ஏன் தெரியவில்லை என நான் ஆராய வேண்டும். அஜாக்கிரதையாக இருந்து விட முடியாது. ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதில் தவறுகள் வரலாம். Error of judgement முடிவு செய்வதில் - தவறுகள் ஏற்படலாம். அதற்கும் அஜாக்கிரதைக்கும் வித்தியாசம் உண்டு.

புஷ்பவனம் : முடிவுகளில் தவறு ஏற்படுவது எல்லாத் துறைகளிலும் உண்டு. டாக்டர் போதிய அளவு அக்கறை, கவனிப்பு காண்பித்துள்ளாரா என்பதுதான் கேள்வி. அதையும் மீறித் தவறு வந்தால் அது வேறு. ஆனால் முன்ஜாக்கிரதையாக இல்லை

என்று தெரிந்தால் அது அலட்சியப் போக்கு. ஒரு உதாரணம் சொல்கிறேன். போன வாரம், பதினெட்டு வயதே ஆன ஒரு பெண் தலைவலி என்று ஒரு டாக்டரிடம் போக, அவர் ஸ்கான் எடுக்க ஒரு ஆஸ்பத்திரிக்கு அனுப்ப அங்கு ஸ்கான் எடுக்குமுன் யூரோகிராஃபின் என்ற இன்ஜெக்ஷனை செலுத்தினார்கள். (இதைச் செலுத்திய பின் ஸ்கான் எடுத்தால், ஸ்கான் நன்கு தெரியும்.) இந்தப் பெண்ணிற்கு அந்த இன்ஜெக்ஷன் ஒத்துக் கொள்ளாமல், ரியாக்ஷன் வந்து அரை மணிக்குள் பெண் இறந்தே போனாள். சோதனை டோஸ் போட்டுப் பார்த்திருந்தால் ஒவ்வாமை புரிந்திருக்கும். உயிரிழப்பைத் தவிர்த்திருக்கலாமே? இது அஜாக்கிரதை இல்லையா?

டாக்டர் : சில சமயம் சிலருக்கு டெஸ்ட் டோஸ் போடும் போது சரியாக இருக்கும். பின்னால் பிரச்னை வரும். சிலருக்கு நூறு தடவை பிரச்னை வராது. 101வது தடவை வரும். இப்படியெல்லாம் அபூர்வமாக நேர்வதுண்டு.

புஷ்பவனம் : டெஸ்ட் டோஸ் கொடுத்த பின் சரியாக இருந்து பின்னர் இன்ஜெக்ஷன் போடும் போது ரியாக்ஷன் வந்தால் அதைக் கடவுளின் செயல் என்று கூடச் சொல்லலாம். ஆனால் அதற்கும் டெஸ்ட் டோஸ் முதலில் போட்டிருக்க வேண்டும் அல்லவா?

டாக்டர் : அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் - கிரிமினல் நெக்லிஜன்ஸ் என்று நிரூபிக்க முடியும் போது - நீதிமன்றங்களே நஷ்டஈடு அல்லது தண்டனை வழங்கலாம். எளிதாக நியாயம் பெற முடியும். நுகர்வோர் பாதுகாப்புக் குழு என்னும் போது ஆதாரமில்லாத விஷயங்களுக்கெல்லாம் கூட டாக்டர்கள் அனாவசியத்துக்கு இழுக்கடிக்கப்படுவார்கள். தொழிலைக் கவனிக்க முடியாமல் போகும். அவர்களுக்கு வீண் வேதனை தான் அதிகமாகும். எந்த டாக்டரும் குணத்திற்கு உத்திரவாதம் கொடுக்க முடியாது. குறையை நிவர்த்திக்க முயற்சி செய்யத்தான் முடியும். எங்களையும் மீறி சில சந்தர்ப்பங்களில் காரியங்கள் நடப்பதுண்டு. நானே ஆபரேஷன் மேஜையில் காட்ராக்ட் ஆபரேஷன் பண்ணும் போது அனஸ்தீஸியா கொடுக்கப்பட்ட நோயாளி இருமினால் எதுவானாலும் நடக்கும். என் மீது தவறு என்று வழக்குப் போட முடியுமா?

புஷ்பவனம் : உங்கள் மீது போட முடியாது. ஆனால் அனஸ்திடிஸ்ட் முதல் நாள் இரவு நோயாளியைத் தகுந்த கேள்விகள் கேட்டுப் பரிசோதனை செய்து, பிறகு அனஸ்தீஸியா கொடுத்திருந்தால் இது நடக்காது. அவர் மீது வழக்குப் போடலாம்....

டாக்டர் : அந்த அனஸ்திடிஸ்ட் எல்லா முன் சோதனைகளையும் செய்து, கேள்விகள் கேட்டுத் தயார் நிலையில் இருந்தால் கூட, நூற்றில் ஒரு கேஸிலோ இருநூறில் ஒரு கேஸிலோ எதிர்பாராத இடைத் திருப்பம் ஏதும் ஏற்பட்டு நோயாளிக்கு மரணம் ஏற்படுவது உண்டு என்பதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன். அனஸ்திடிஸ்ட் பக்கத்தில் சாட்சி வைத்துக் கொண்டா நோயாளியைச் சோதிக்க முடியும்? 'ரொம்ப கடுமையான ஆபரேஷன், நோயாளி பிழைப்பது அபூர்வம்' என்று தெரியப்படுத்தி விட்டு ஆபரேஷன் செய்வோம். நாலு நாளில் எழுந்து நடமாடுவார்! அதற்கு கன்ஸ்யூமர் கோர்ட் எங்களுக்கு வெகுமதியா வழங்கப் போகிறது? இப்படியெல்லாம் நேரக்கூடிய தொழில் இது. இதனால்தான் இதை மளிகைக் கடை கலப்பட கேஸ் மாதிரி கருதி, எங்களை இம்சிக்கக் கூடாது என்கிறேன். நோயாளி அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு தனியே இருக்கக் கூடாது என்று சொல்லியிருப்பேன். உறவினர்கள், கூட இருப்பதாக உறுதி கூறுவார்கள். யாரும் இல்லாத சமயத்தில் நோயாளி தானாகவே எழுந்து பாத்ரூமுக்குப் போவார். நாதாங்கி இடித்துக் கண்ணில் காயம் ஏற்படும். நோயாளி என் மீது இவரால் கண் போய் விட்டது என வழக்குப் போடுவார்! 'நீங்கள் ஏன் நர்ஸ் ஒருவரைப் போடவில்லை? உறவினரை ஏன் நம்பினீர்கள்?' என்று கூட என்னைக் கேட்பார்கள்!

"ஒரு டாக்டர் தினசரி இடது கைக்குப் பதிலாக வலது கையை வெட்டி எடுத்து விடுவதில்லையே!"




அடுத்த இதழ் :

ஸ்ரீ

கலைவிழா சிறப்பிதழ்

- தமிழிசைக்குப் பொன்விழா
- "நாட்டியத்துக்குப் பாடும்போது நெளிவு சுளிவு தெரிய வேண்டும்"
- சந்திப்பு : மீசை முருகேஷ்.
- கிராமி அவார்ட் வாங்கும் விநாயகராம்.
- "சுந்தரி நீயும் சுந்தரம் ஞானும்' பாட்டுக்கு சுவரம் பாடிக் காட்டினோம்...!" – கர்நாடக இசையில் ஆர்வம் வளர்க்க....
- இந்த வருஷம் என்ன ஸ்பெஷல்!?
- விருது பெறும் வித்வான்கள்
- இளைய தலைமுறைக் கலைஞர்கள்



புஷ்பவனம் : நாங்கள் இதையெல்லாம் பாகுபடுத்தி ஆராய்ந்துதான் வழக்குத் தொடுப்போம். முடிவுகள் எடுப்பதில் இயற்கையாக ஏற்படும் தவறு, கடவுளின் செயல், திறமையின்மை, அஜாக்கிரதை ஆகியவற்றைத் தனித்தனியே விளக்க முடியும்.

டாக்டர் : டாக்டர்கள் தவறு செய்தால் அதைச் சட்டபூர்வமான, ஆனால் தொழில் ரீதியான அமைப்பின் கீழ்தான் கொண்டு வர வேண்டும். பழுத்த அனுபவம் உள்ள, ஓய்வு பெற்ற டாக்டர்கள் ஒரு குழுவாக அமைந்து எங்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை பாரபட்சமின்றி விசாரிப்பார்கள் எனில் ஏற்கலாம்.

புஷ்பவனம் : டாக்டர்களே டாக்டர்களை விசாரிப்பது என்றால் பொது மக்களுக்கு அதில் நம்பிக்கை ஏற்படாமல் போகக் கூடுமே?

டாக்டர் : கன்ஸ்யூமர் கௌன்சிலில் டாக்டர்களைப் பொறுத்தமட்டில் சட்டத்தைத் தவறாக உபயோகிக்க வாய்ப்பு உள்ளது.

புஷ்பவனம் : உண்டு. எல்லாச் சட்டங்களையுமே தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு உண்டு. மற்றச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்த எந்த அளவுக்கு வாய்ப்பு உள்ளதோ, அதே அளவு வாய்ப்புத்தான் இதிலும் உண்டு. டாக்டர்கள் மத்தியில் இச்சட்டத்தினால் ஜாக்கிரதை உணர்வு பெருகும் என நினைக்கிறேன்.

டாக்டர் : இந்த ஜாக்கிரதை உணர்வு எப்போதுமே டாக்டர்களுக்கு உண்டு.

புஷ்பவனம் : எல்லாருக்கும் இருந்திருந்தால், இவ்வளவு வழக்குகள் வர வாய்ப்பு இல்லையே!

டாக்டர் : நீங்கள் சதவிகிதத்தைப் பார்க்க வேண்டும். பெரிய நிபுணர்கள் பண்ணும் ஆபரேஷனிலேயே failure இருக்கிறது. நீங்கள் வழக்குப் போட ஆரம்பித்தால் டாக்டர்கள் Extra pre-caution எடுத்து ஒவ்வொரு நோயாளியையும் பல சோதனைக்குள்ளாக்குவார்கள். நோயாளிகளுக்குத்தான் அதிகப் பணம் செலவாகும்.

புஷ்பவனம் : இல்லாவிட்டாலுமே, பல சோதனைகள் இப்போதுமே செய்யப்படுகிறது. ஜாக்கிரதை உணர்வு ஏற்பட்டால்தான் அதிக சோதனை என்று கூற முடியாது.

டாக்டர் : நாங்கள் கண் சிகிச்சை முகாம் நடத்தும் போது அனுபவம், திறன் இவைகளை வைத்துத்தான் நோயாளிக்கு இன்ன சிகிச்சை என அனுமானிக்கிறோம். ஒவ்வொரு நோயாளிக்கும் சோதனைகள் நடத்திய பின்தான் சிகிச்சை என்றால், முகாம்கள் நடத்தவே முடியாது. பல பேர் குருடாகவே இருக்க வேண்டியதுதான்.

புஷ்பவனம் : நாங்கள் தட்டிக் கேட்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள மறுத்தால் அது அஜாக்கிரதையாக இருப்பதற்கு லைசென்ஸ் வேண்டும் எனக் கேட்பது போல் இருக்காதா?

டாக்டர் : நீங்கள் சொல்வது தவறு. ஒவ்வொரு டாக்டரும் சேவை உணர்வுடன் பணியாற்றுவதாகத்தான் உறுதிமொழி ஏற்கிறார். அப்படியே யாரேனும் ஒருவர் ஜாக்கிரதை உணர்வு இல்லாமல் இருந்தால், அவர் தொடர்ந்து தொழில் நடத்த முடியாது. அவருக்கு உடனே கெட்ட பெயர் ஏற்பட்டு மக்கள் ஒதுக்கி விடுவார்கள். இவ்வளவு பேசுகிறீர்களே? அரசுத் துறை மருத்துவர்களை நீங்கள் ஏன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியவில்லை?

புஷ்பவனம் : ஏனெனில் அரசு மருத்துவ சேவை இலவசம். இலவசமாக எதைப் பெற்றாலும், இச் சட்டத்தின் கீழ் வராது.

டாக்டர் : இலவசமென்றால் அஜாக்கிரதையாக இருக்கலாமா?

புஷ்பவனம் : கூடாது. அதற்கான சட்டத் திருத்தத்தைக் கோரியுள்ளோம்.

டாக்டர் : முதலில் நீங்கள் அதைக் கொண்டு வாருங்கள்.

புஷ்பவனம் : இப்போது உங்கள் கருத்து அரசு ஆஸ்பத்திரிகளையும் இந்தச் சட்டத்தில் சேர்க்க வேண்டும் என்பதுதானே?

டாக்டர் : சேர்ப்பது மட்டுமல்ல. இந்த வழக்குகள் மெடிகல் கவுன்சிலுக்குத்தான் செல்ல வேண்டும். வேண்டுமானால் சிவில் கோர்ட்டுக்கு செல்லட்டும்.

புஷ்பவனம் : சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்று வரை மெடிகல் கவுன்ஸில் ஒரு டாக்டர் மீது கூட நடவடிக்கை எடுத்ததாகவோ தண்டனை அளித்ததாகவோ சரித்திரமே கிடையாது. சிவில் கோர்ட்டுக்குப் போனால் ஆறு அல்லது ஏழு வருடங்கள் ஆகும். கன்ஸ்யூமர் மன்றம் செலவு அதிகமில்லாமல், எளிய முறையில், நியாயம் வழங்க வந்துள்ளது. வக்கீல் வேண்டாம். கோர்ட் கட்டணம் கிடையாது.

டாக்டர் : அதனால்தான் ஆபத்து அதிகம். தொட்டதற்கெல்லாம் வழக்குப் போடுவார்கள். நஷ்டஈடாகப் பெருந்தொகை கிடைக்கும் என்ற ஆசை கூட ஓர் உந்துதலாக அமையும்.

புஷ்பவனம் : தவறுகள் நேரலாம். ஆனால் வலது கண்ணிற்குப் பதிலாக இடது கண்ணில் ஆபரேஷன் செய்தால் அது நெக்லிஜன்ஸ்தான் இல்லையா?

டாக்டர் : அஜாக்கிரதைதான். ஆனால் ஒரு டாக்டர் தினசரி இடது கைக்குப் பதிலாக வலது கையை எடுப்பதில்லையே?. அத்தகைய அபூர்வமான கேஸ்களை நீதிமன்றங்களுக்கே எடுத்துப் போகலாமே? கன்ஸ்யூமர் கோர்ட் எதற்கு?

புஷ்பவனம் : கன்ஸ்யூமர் சட்டத்தில் சேர்க்கப்படுவதன் மூலம் டாக்டர்கள் நோயாளிக்கும் அவரது நெருங்கிய உறவினருக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமை நிறுவப்படுகிறது. தட்டிக் கேட்க ஆளில்லை என அலட்சியமாக இருக்க முடியாது. அதுதான் முக்கியம்.

படங்கள் : **யோகா**



"இராத்திரி தனியாப் போறச்சே யாரோ தலைவாங்கற மாதிரி இருக்கு. திரும்பிப் பார்த்தா யாரையும் காணலை பங்கஜம்!"

"உங்களை யாரு செத்துப் போனவங்களையெல்லாம் கட்சி உறுப்பினர் பட்டியலில் சேர்க்கச் சொன்னது? இப்போ பாருங்க அவஸ்தையை!"



– வேதபுரி எஸ். ரமேஷ்.

"நான் இப்பக் கடைசியா தரப்போற மருந்துல உங்க உடம்புல இருக்கற Gas எல்லாம் கண்டிப்பா வெளில வரணும்!"

"அப்படியும் வரலைன்னா டாக்டர்?"

"ONGC க்குத்தான் ஃபோன் பண்ணணும்!"

– கல்லிடை ஏ.கே. சங்கர்.



"கடைசி நேரத்திலே காலை வாரிட்டாங்க... இல்லேன்னா நான் நிச்சயம் ஜெயித்திருப்பேன்....!"

"எதுலே....?"

"கபடி போட்டியிலேதான்....!"

– மேல்பட்டி நிலவழகி.





✱ விளதிலத்தைத் தடுக்க முயன்ற சிண்டிகேட் உறுப்பினர் ஒருவர் போலீஸாரால் தடுக்கப்படுகிறார்.

சேதி கேட்டோ!

வேண்டாம் இந்தத் துணைவேந்தர்!

●● கேரள பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஜே. வி. விளதிலம். எதிர்க்கட்சிகள் இவர் பேரில் ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் கூறியதால் விடுப்பில் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். பல்கலைக் கழக சிண்டிகேட்டும் கேரள அரசும் குற்றச்சாட்டுகளின் பேரில் விசாரணை நடத்தி விளதிலம் நிரபராதி எனத் தீர்ப்பளித்தன.

பணிக்குத் திரும்பினார் விளதிலம். ஆனால் அவருக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர் SFI உள்பட சில எதிர்க்கட்சி மாணவர் அணியினர். விளதிலம் பதவிக்குத் திரும்பிய தினத்தில் பலத்த போலீஸ் காவலை மீறி அவரது காரை வழிமறிக்க முயன்றனர். அவர்களை மீறிக் கொண்டு விளதிலத்தின் கார் அலுவலக வளாகத்துக்குள் நுழைந்தது. SFI யின் மாநிலத் தலைவர் ஜோசப் குருக்கே பாய்ந்து பலமாக அடிவாங்கிக் கொண்டார். அவ்வளவுதான்!

ஆரம்பித்தது ரகளை! தலைவருக்கு அடி பட்டதால் கோபங்கொண்டு போலீஸ் மீதும் வாகனங்கள் மீதும் வஞ்சம் தீர்த்துக் கொண்டனர் மாணவர்கள். பஸ்கள் நொறுக்கப்பட்டன. மூன்று அரசு கார்கள் கொளுத்தப்பட்டன!

இதற்கெல்லாம் இடையே அலுவலகப் பொறுப்பேற்று, ஆளுனரைச் சந்திக்கப் போய் விட்டார் விளதிலம்!

அடிபட்ட மாணவ அணியினரும் காவல் துறையினரும் தனித்தனியே மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

'விளதிலம் டிஸ்மிஸ்' ஆகும் வரை ஓய மாட்டோம்!' என SFI அறிவித்துள்ளது!

●● 'தனியார்களுக்கு ஆயுத லைசன்ஸ் வழங்குவதற்கான சட்டங்களைக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டாம்' - இப்படி ஓர் அரசு ஆணை, அரசாங்க வருவாய்த் துறைச் செயலரின் கையொப்பத்துடன் வந்தது கேரள மாநில கலெக்டர்கள் அனைவருக்கும்.

உண்மையில், வருவாய்த்துறை, காவல் துறை, வனத் துறை ஆகிய மூன்றுமே ஆராய்ந்து ஒப்புதல் அளித்தால்தான் ஒரு தனிநபருக்கு ஆயுத லைசன்ஸ் வழங்கப்படலாம் என்பது பொது விதி. அப்படியிருக்க திடீரென இப்படியொரு ஆணை ஏன் என்று ஆராய முற்பட்டார்கள். அப்போதுதான் தெரிந்தது அந்த அரசு ஆணையில் கையொப்பமிட்டிருந்த கே.ஜி.கே. மேனன் என்ற பெயரில் வருவாய்த் துறையில் எந்த அதிகாரியுமே கிடையாது என்பது!

திகைத்துப் போன அரசு, இந்த 'அரசு ஆணையை' யார் அனுப்பியிருக்கக் கூடும் என ஆராய்ந்து வருகிறது.

– எஸ். எஸ். மணி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka